
கல்கி
KALKI 12-5-1957
30



பளபளப்போடு
நறுமணமோங்கும் கேசத்திற்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட்
ஹேர் ஆயில்
(கேசத்திற்கு பரிமள தேங்காயெண்ணெய்)
ரோஜா அல்லது மல்லிகை மணமூட்டியது
PERFUMED COCONUT HAIR OIL
ROSE
PERFUMED COCONUT HAIR OIL
இலவசம்...
பெரிய சீசா ஒவ்வொன்றுடனும் நல்லதொரு
'ப்ரைட்' சக 'அன்டேட்' சீப்பு இலவசம்
லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது
ECH. 2-50 TM



# கல்கி

## சர்வோதய இதழ்



### பொருளடக்கம்


**அரசியல்**

| | | |
|---|---|---|
| கவர்னர்களின் பேருரைகள் | ... | 3 |
| கைத்தறியைக் காப்போம்! | ... | 6 |

**கதைகள்**

| | | |
|---|---|---|
| கலைச் செல்வி | இ. ராஜேந்திரன் | 26 |
| மாலவல்லியின் தியாகம் | கி. ரா. கோபாலன் | 47 |
| ஹேரால்டான், பஞ்சவடி! | விஷ்ணு | 57 |
| உள்ளப் புரட்சி | இ. ரங்கராஜன் | 64 |
| மலைச்சாரல் மாதவி | ஆனந்து | 82 |
| சத்திய யுகம் | துறைவன் | 96 |
| பொன்செய்யும் மருந்து | ஸ்ரீரங்கம் நரசிம்மன் | 105 |

**கட்டுரைகள்**

| | | |
|---|---|---|
| தியாகம் முளைத்த பூமி | அண்ணு | 5 |
| கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் | ராஜாஜி | 12 |
| காலடிக் காட்சிகள் | வேலன் | 17 |
| கேரள விஜயம் | எஸ். வி. எஸ். | 21 |
| தொழிற்கூடம் பாரீர்! | பரதன் | 34 |
| நடமாடும் தெய்வத்தின் அடிச்சுவடுகள் | அண்ணு | 43 |
| விளையாட்டு மன்னர்கள் | குண்டுமணி | 93 |
| மிதாகாரம் | ஸ்ரீஹரி | 101 |

**பெண்கள் பகுதி**

| | | |
|---|---|---|
| மாதர் குல திலகங்கள் | ... | 11 |
| தேவியின் கடிதம் | வசுமதி ராமசாமி | 94 |

**பாப்பா மலர்**

| | | |
|---|---|---|
| முதல் எழுத்து | அழ. வள்ளியப்பா | 73 |
| மாயப் பந்து | ராஜி | 78 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 16 | இதழ் 41

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ஹேவிளம்பி | சித்திரை 30௨

# கவர்னர்களின் பேருரைகள்

தேசம் முழுவதிலும் தேர்தல்கள் நடந்து முதன் முதலாகச் சட்டசபைகள் கூடுகின்றன. சட்ட சபையின் முதல் கூட்டத்தில் அந்த அந்த ராஜ்யங்களின் கவர்னர்கள் தத்தம் மந்திரிசபைகள் வருங்காலத்தில் செய்யவிருக்கும் காரியங்களை விரிவாகச் சொல்லி விளக்குவார்கள். அதனால் கவர்னர் பேருரை என்றால் மக்களுக்குப் பேரார்வம் ஏற்படுவது இயல்பு.

ஆனால் சமீபத்தில் கேரள கவர்னரும் சென்னை கவர்னரும் தங்கள் தங்கள் சட்ட சபைகளில் பேருரைகள் நிகழ்த்தினார்கள். இந்த இரண்டு உரைகளைப் பார்த்ததும் 'மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக அல்லவா இருக்கிறது!' என்று பெருவாரியான மக்கள் நினைத்தார்கள்.

ஆம். சென்னை கவர்னரின் பேருரை பெருத்த ஏமாற்றமாகவே அமைந்திருக்கிறது. மக்கள் நலன்களுக்கான உருப்படியான திட்டங்கள் ஒன்றையுமே அதில் காணோம். அதற்கு மாறாக, கேரள கவர்னரின் பேருரையோ பல சீர்திருத்தங்களும் திட்டங்களும் கொண்டவையாக இருக்கின்றது. சுபிட்ச வாழ்வுக்கு என்னென்ன திட்டங்கள் கம்யூனிஸ்ட் சர்க்கார் வகுத்து வருகிறார்கள் என்பதை வெகு அடக்கமாக, ஆனால் அழுத்தம் திருத்தமாகக் கேரள கவர்னர் பேருரை கூறுகிறது.

கம்யூனிஸ்ட் சர்க்கார் எதிர்காலத்தில் நில சம்பந்தமாகவும், நீதி மன்றச் சட்டங்கள் சம்பந்தமாகவும், அரசாங்க நிர்வாக சம்பந்தமாகவும் பல சீர்திருத்தங்கள் செய்ய விருப்பதாகக் கேரள கவர்னரின் பேச்சு கூறுகிறது.

ஆனால் இவற்றினால் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு விடாதல்லவா? மக்களுக்கு வேலை செய்யத் தொழில் வாய்ப்புகள் ஏற்பட வேண்டுமல்லவா? அதற்காக என்னென்ன செய்யப் போகிறார்கள்? இதைப்பற்றியும் கேரள கவர்னரின் பேருரை வெகு விளக்கமாய்க் கூறுகிறது.

ரப்பர் டயர் தொழிற்கூடம், சைக்கிள் தொழிற்சாலை, காகித உற்பத்திசாலை போன்ற பல தொழிற்கூடங்கள் ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்.


கேரள ராஜ்யத்தில் ஏற்கனவே மின்சாரம் அதிகம். இருப்பினும் இன்னும் பல திட்டங்கள் வகுத்து மின்சார உற்பத்தியைப் பெருக்கப் போகிறார்கள்.

பாரத சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென் பகுதியில் கப்பல் கட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்கூடத்தைக் கேரளத்தில் ஏற்படுத்திக் கொடுக்குமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்தப் போகிறார்கள். 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்பது தமிழ் பழமொழி. ஆனால் அதைக் கையாள்வது மலையாள மக்களின் கம்யூனிஸ்ட் சர்க்கார்!

இவை தவிர, பல நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். கேரள நாட்டில் தென்கோடியிலிருந்து வடகோடி வரை ரயில் மார்க்கமாகவோ, சாலை மார்க்கமாகவோ போகாமல் நீர் மார்க்கமாகவே போகக்கூடிய நீண்ட கால்வாய்களை வெட்ட உத்தேசித்திருக்கிறார்கள்.

பாரத சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கேரளத்துக்கென்று ஒதுக்கப்பட்ட தொகையை, ஜனத்தொகையின் அடிப்படையில் இரண்டு பங்காக உயர்த்தித் தருமாறு வற்புறுத்திக் கேட்கப் போகிறார்களாம்!

# ஆறுதல் வார்த்தை




**உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதில் சர்க்கார் அக்கறை காட்டவில்லை என்று சென்னை மேல்சபையில் அங்கத்தினர்கள் இடித்துக் காட்டினார்கள்.**

இப்படி அவர்கள் பலப்பல திட்டங்கள் வகுத்து வெகு வேகமாக முன்னேற முடிவு செய்திருக்கிறார்கள்! இதைப் பார்க்கும் போது சென்னை கவர்னரின் சட்டசபைப் பிரசங்கம் உப்பில்லாத பண்டமாக இருக்கிறது!

கவர்னர் பிரசங்கம் என்றால் அது மந்திரி சபையினர் தங்களுடைய உத்தேசங்களைத் திரட்டிப் பிரகடிக்கும் அறிக்கையாகும். கவர்னர் பேருரை என்பது பெயருக்கு மட்டும் தானே ஒழியப் பொறுப்பும் காரியமும் மந்திரி சபையினுடையதுதான்; அறிக்கையும் மந்திரி சபையினுடையதுதான்!


சென்னை ராஜ்யத்தில் தேர்தல் நடைபெற்றது பற்றிச் சென்னை கவர்னர் திருப்தி தெரிவித்திருக்கிறார்! இங்கு நடந்த தேர்தல் நியாயமான முறையில் நடந்த தேர்தல் என்றால் உண்மையில் நேர்மையாக நடக்கும் தேர்தலைப் பற்றி என்ன சொல்வது? வேறு பெயர்தான் கண்டு பிடிக்க வேண்டும். முழுப் பூசனியைச் சோற்றில் மறைக்க முடியாது. ஏழைகளைக் கேட்டால் தேர்தலின் போது என்ன நடந்தது என்பது தெரியும்.

தேர்தலுக்கு முன் செய்த நிலவாரச் சட்டம் காங்கிரஸின் வெற்றிக்கு மந்திரக் கோலாக அமைந்தது என்று மந்திரிகள் சந்தோஷமாகச் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால் கவர்னர் தமது பேருரையில் அதைப் பற்றி அவ்வளவு திருப்தியடையக் காணோம். அதற்குக் காரணம் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பற்றாக் குறையாக இருக்கலாம். ஆகவே, நிலத்தைப் பற்றிய சட்டம் வோட்டுகள் பெறுவதற்காக மட்டும் செய்தால் போதாது. விவசாயமும் வெள்ளாமையும் விருத்தியாக வேண்டும். ஆனால் இன்றைய நிலை கவலை தருவதாக இருக்கிறது!

தேர்தலுக்கு முன் அரசியல் கட்சிகள் தங்களுடைய இட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பிறகு தேர்தலில் வெற்றிபெற்றுப் பதவிக்குவந்தவுடன் கவர்னர் பிரசங்கத்தில் 'இன்ன செய்யப் போகிறோம்' என்று அறிவிக்க வேண்டும். இதுதான் முறை; சம்பிரதாயம். அதற்குப் பதிலாக 'இப்பொழுதுதான் பதவிக்கு வந்திருக்கிறோம். எல்லாம் இனிமேல் யோசித்துச் செய்வோம்' என்று சொல்லுவது வியப்பாக இருக்கிறது. சென்னை கவர்னர் பேருரையில் அடுத்து நடக்கப் போகும் பட்ஜெட் கூட்டத்தில் சர்க்காரின் திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று கூறியிருக்கிறார். இதைப் பற்றி நாம் வியக்காமல் என்ன செய்வது?

மொத்தத்தில் சென்னை கவர்னரின் பேச்சைப் பார்க்கும்போது சென்னை மந்திரிகள் இன்னும் தங்கள் தேர்தலில் பெற்ற வெற்றிப் பிரதாபங்களை மறந்து வேலையில் இறங்கவில்லை என்று எண்ண வேண்டியிருக்கிறது.



"இம்பர் வாழ்வின்
இறுதி கண்டு—உண்மையின்
இயல் புணர்த்திய
சங்கரர்....................."

— பாரதியார்

# தியாகம் முளைத்த பூமி

**அண்ணா**

காலடி தியாகம் முளைத்த பூமி.

"பார்வதி தேவி அன்னை: பரமசிவன் அத்தன்: அவர்களிடம் பக்தி பூண்டோர் பந்துக்கள்; பரந்த உலகம் மூன்றும் தாய் நாடு (மாதாச பார்வதீ தேவீ, பிதா தேவோ மஹேச்வர: பாந்தவா: சிவபக்தாச்ச ஸ்வதேசோ புவனத்ரயம்)" என்ற உண்மையைச் சின்னஞ்சிறு வயதில் கண்டு, அதை நாடெங்கும் பறையறைய அனைத்தையும் துறந்து, 'மிகஉோரமுதுண்ண நஞ்சுண்ட மேலவனோ' என எல்லோரும் வியக்குமாறு மக்களை உய்விக்க வந்த சங்கரரை உலகுக்கு அளித்த தனிப் பெருமை காலடியினுடையது. ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்தவர் தான் சங்கரன் நம்பூதிரி பாடு. சங்கரன் நம்பூதிரி பாடு என்றதும் இப்பொழுது இருக்கும் கேரள கம்யூனிஸ முதன் மந்திரியின் நினைவு பலருக்கு வரலாம். ஆதிசங்கரனின் திருநாமமும் சங்கர நம்பூதிரிபாடுதான்.

சமதரிசனக் கொள்கையைப் பரப்ப அன்று எவ்விடத்திலிருந்து பாத யாத்திரையாய்ச் சங்கரர் புறப்பட்டாரோ, அந்தப் புண்ணிய பூமியை நோக்கி இன்று பாத யாத்திரையாக அவருடைய அடிச்சுவடுகளைத் தேடிச் செல்பவர் போல் வினோபா பாவே செல்லுவது பாரத நாட்டின் சரித்திரத்தில் ஒரு மகத்தான நிகழ்ச்சியாகும்.

ஆதிசங்கரருக்கு எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கும் போது ஆல்வாய்ப்புழை என்ற ஆற்றில் வழக்கம்போல் ஒருநாள் நீராடிக்கொண்டிருந்தார். நீராடுகையில் ஆதி சங்கரர் காலை ஒரு முதலை கவ்வியது. மகனை முதலை கவ்வியதைக் கண்ட ஆதி சங்கரனின் தாய் அலறித் துடித்தாள். அப்போது சங்கரர் தாயை நோக்கி, "அம்மா! முதலையால் ஏற்பட்டுள்ள இவ்விபத்து முன் வினையால் வந்தது. அதிலிருந்து விடுபட ஒரே வழியுண்டு. அது சந்நியாசம் பூணுதலாகும். 'இந்தக் காலடி மட்டும் என் ஊர் அன்று: நீ ஒருத்தி மட்டும் எனக்குத் தாயன்று. உலகமே என் ஊர். எல்லாப்பெண்களும் என் தாய்' என்ற திடசித்தத்துடன் இப்போதே நான் துறவு பூண்டால் அது புதிய பிறப்பாகி விடும். பீடை அகலும். முதலையுருவில் வந்த தீவினையினின்று விடுபடுவேன்" என்று கூறித் தாயிடம் விடைபெற்று வெளிப் போந்தார். அப்படிச் செல்லாமல் ஒரு சிறந்த நம்பூதிரிப் பண்டிதராய், குடும்பியாய்க் காலங் கழித்திருந்தால் இந் நாடு எவ்வளவு நஷ்டமடைந்திருக்கும்! அவர் செய்த தியாகத்தின் பெருமையை அளவிட இயலுமா? அது எத்தனை கோடி பொன் பெறும்! அவர் செய்த உதவிக்கு 'வானகமும் வையகமும் மாற்றலரிது.'

ஆதிசங்கரர் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அதில் தென்னிந்தியாவில் உள்ள காஞ்சி காமகோடி பீடமும், சிருங்கேரி சாரதா பீடமும் இன்றும் பிரசித்தியுடன் இருந்து தொண்டாற்றி வருகின்றன. இப்பொழுது அதன் தலைவர்களாக விளங்கும் காஞ்சி காமகோடி பீடத்தைச் சார்ந்த ஆச்சாரிய சுவாமிகளைப் பற்றி ஆதிசங்கரரின் அவதாரமே என்று மக்கள் போற்றி வணங்குகிறார்கள். சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி சங்கராச்சாரிய சுவாமிகளையோ இந்துக்கள் மட்டுமின்றி இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் கூடப் போற்றிப் புகழுகிறார்கள்.

வினோபா பாவேயின் பூதான யாத்திரையில் அவரைப் பின்பற்றிக் காலடி க்ஷேத்திரம் செல்லும் வீரர்களின் உள்ளத்தில் ஆதி சங்கரரின் இந்தத் தியாகமும் பக்தியும் பள்ளத்தில் நீர் பாய்வதுபோல் தாமாகவே வந்து தங்கும்.

ஒரு பூந்தோட்டத்திலிருந்து வரும் பூவின் நறுமணம் காற்றில் வெகு தூரம் பரவுவது போல் தியாக வாழ்க்கையின் மணம் வெகு தூரம் காலத்தைக் கடந்து வீசுகிறது.

சங்கரர் முதலை வாயிலிருக்கும் போதே ஆபத்சந்நியாஸம் பூண்டார். அவர் கூறிய வண்ணம் விபத்து விலகிற்று. தாயார் அன்புடன் வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். "இனி எனக்கென்று வீடு இல்லை. காற்றைப் போல் எங்கும் சஞ்சரிப்பேன். என்னைப் பெற்று வளர்த்த உனக்குச் சங்கடம் ஏற்பட்டால் நீ என்னை வரும்படி நினைத்ததும் வருவேன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றார். கூறியவண்ணம் தாயின் இறுதிக்காலத்தில் அவளிடம் வந்து சேர்ந்து பணிவிடை செய்து ஆறுதலளித்துத் தாய் உயிர் நீத்தபின் தனது யோகாக்கினியால் தாயின் உடலுக்கு ஸம்ஸ்காரம் செய்வித்தார். அதனால் அந்த இடம் இன்னும் புண்ணியம் மிகுந்ததாயிற்று.

அவ்வளவு புண்ணியம் வாய்ந்த இடத்தை மக்களுக்கு நினைவூட்டக் கூடிய அடையாளம் ஏதுமில்லாமல் பல நூற்றாண்டுகள் கழிந்த பின் 1910-ம் ஆண்டில் சிருங்கேரி பீடாதிபதிகளாயிருந்த நரசிம்ம பாரதி சுவாமிகள் அக்குறையை நீக்குவித்தார். சங்கரரின் தாய்க்கு அவர் கட்டுவித்த சமாதியும், அருகாமையில் நிர்மாணம் செய்யப்பட்ட சாரதா தேவியின் ஆலயமும் புனிதமான எண்ணங்களுக்கு உறைவிடங்களாகவும் பக்திப் பயிருக்கு நாற்றங்கால்களாகவும் விளங்குகின்றன.

---

ஏப்ரல் மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற

**'ஆக்கப் பொறுத்தவள்'**

என்னும் கதை அடுத்த 'கல்கி' இதழில் பிரசுரமாகிறது

பரிசு பெற்றவர்: **ஸ்ரீமதி ராஜம் சுபஸ்ரீ (ஸ்ரீப்ரியா)**

13, ரயில்வே குவார்ட்டர்ஸ், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவுக்கு எதிரில், ஜபல்பூர்.

# கைத்தறியைக் காப்போம்

இமயம் முதல் குமரி வரையில் நாடெங்கும் இவ்வருஷம் கைத்தறி வாரம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நாலு ஆண்டுகளுக்கு முன் பஞ்சத்துக்கும் பட்டினிக்கும் இலக்காகித் தவித்த கைத்தறி நெசவாளர், இன்று பாரதநாடெங்கும் புகழுரைக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரர்களாகியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளும் உடைகள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களும் இந்தியாவின் உயிர்நாடி போன்றவர்கள் ஆவர். எனவே, இந்தியாவின் வருங்காலசுபிட்சம் அவர்களுடைய நல்வாழ்வையே பொறுத்திருக்கிறது எனலாம்.

சென்னை ராஜ்யக் கைத்தறிக் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் சார்பில் எழும்பூர் பாந்தியான் ரோடிலுள்ள காரியாலயத்தில் நடைபெறும் கைத்தறிக் கண்காட்சியைக் கண்டவர்கள் கைத்தறி நெசவாளர்களின் கைத் திறனையும் கற்பனைத் திறனையும் உணர்ந்து கொள்ளலாம்.

நாட்டில் உள்ள பலவிடங்களில் அந்தந்த ராஜ்யத்தைச் சேர்ந்த மந்திரிகளே கைத்தறி வாரத்தையும் கண்காட்சிகளையும் ஆரம்பித்து வைத்தனர். எனவே, கைத்தறி அபிவிருத்தியில் சர்க்கார் கொண்டுள்ள அக்கறைக்கு அது ஒரு சான்றாகும். இந்தூரில் கைத்தறி வாரத்தை ஆரம்பித்து வைத்த மத்தியப் பிரதேச முதன் மந்திரி டாக்டர் கட்ஜு பேசுகையில், அன்னியத் துணியையோ, மில் துணிகளையோ உடுத்திக் கொள்வதில்லை என்று சகலரும் பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த அருமையான தொழிலின் எதிர்காலம் சிறந்தோங்க ஆலைகளின் தயவுக்குக் காத்திருக்க வேண்டியதில்லை. அரசாங்கத்தின் தயவுக்கும் காத்திருக்க வேண்டியதில்லை. பொதுமக்கள் அமோகமாக ஆதரவு அளிக்கத் தொடங்கி விட்டால் போதுமானதாகும்.

தற்போது அன்னிய நாடுகள்கூட இந்தியக் கைத்தறி நெசவு ஜவுளிகளை வாங்கத் தொடங்கியிருக்கின்றன என்று சில மந்திரிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இத்தகைய திருப்திகரமான நிலைக்கு இனி எக்காலத்தும் குந்தகம் வராமல் பாதுகாக்க வேண்டியது சுதந்திர சர்க்காரின் பொறுப்பாகும்; பாரத மக்களின் கடமையாகும். கைத்தறி ஜவுளிகள் விரைவில் பண்டையகாலப் பெருமையை அடைந்து உலகப் புகழ்பெறுமென்று நம்புகிறோம்.

# பி. ஸி. ஜி பாதுகாப்பு அளிக்காது

இடைவிடாத விளம்பரத்தினாலோ அல்லது பிரசாரத்தினாலோ நியாயமற்ற ஒரு செய்கையை நியாயமானது என்று ஸ்தாபித்து விட முடியாது. தவறு என்று தெரிந்த பின் அதை ஒத்துக் கொண்டு திருத்திக் கொள்வது தான் எளிதேயன்றி, தவறுக்குச் சப்பைக் கட்டுக் கட்டி அதை நீடிக்கும்படி செய்வது புத்திசாலித்தனமல்ல. "தற்போது க்ஷயரோகத்தைக் கட்டுப்படுத்த பி.ஸி.ஜிமருந்தை உபயோகிப்பதுதான் சிறந்தது" என்று சென்னை சட்டசபையின் புதியசபாநாயகரான டாக்டர் யு. கிருஷ்ணராவ் கூறியுள்ளார். சென்னை க்ஷயரோக சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் டாக்டர் கிருஷ்ணராவும் சென்னை சுகாதார மந்திரி திரு மாணிக்கவேலரும், க்ஷயரோகத்தைக் குணப்படுத்த பி. ஸி. ஜி தான் சிறந்த மருந்தென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் உலகப்புகழ்பெற்ற க்ஷயவைத்திய நிபுணர்கள் பி. ஸி. ஜியை ஆதரிக்கவில்லை என்பதை மீண்டும் வற்புறுத்தவிரும்புகிறோம்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா சர்வகலாசாலையில் க்ஷயவைத்தியப் பேராசிரியரும் ஆராய்ச்சி நிபுணருமான டாக்டர் செய்மூர் எம். வார்பர் (Seymour M. Farber M. D.) ராஜாஜிக்கு எழுதிய ஒரு கடிதத்தை ஏற்கனவே பிரசுரித்துள்ளோம். ஏப்ரல் 25-ந் தேதியிட்டு அந்த நிபுணர் எழுதியுள்ள மற்றொரு கடிதத்தின் சாரத்தைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

"க்ஷயநோய் உள்ளவர்களுக்கு பி. ஸி. ஜியினால் பாதுகாப்பு ஏற்படும் என்ற தவறான எண்ணமானது பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதைப் பற்றியே எனக்குக் கவலை.

"மிகுந்த நம்பிக்கையுடன் பி. ஸி. ஜியை ஆதரிப்பவர்கள்கூட, பி. ஸி. ஜி க்ஷயரோகத்துக்குச் சரியான மாற்று மருந்து என்று கூறவில்லை.... பி. ஸி. ஜி திட்டங்களை ஆதரித்தும், அதற்குப் பண உதவி புரிந்தும் வரும் சர்க்காரும் மக்களும் க்ஷயரோகத்தைக் கட்டுப்படுத்தும் அடிப்படையான முறைகளுக்கு மாற்று முறை என்றே பி. ஸி. ஜியைக் கருதுகிறார்கள். அவ்விதம் கருதுவது மிகுந்த ஆபத்தாக முடியும். பி. ஸி. ஜியினால் மாத்திரம் இந்தக் கொடிய க்ஷயரோகத்தைக் கட்டுப்படுத்திவிட முடியாது.....


"உங்கள் தேசத்தில் க்ஷய ரோகத்தைத் தடுக்க ஏதாவது, எதையாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருப்பது நியாயமே. அதற்காக, சந்தேகத்துக்கு இடமான பல குறைகள் உள்ள ஒரு பரிகார முறையை அவசரப்பட்டுக் கைக் கொள்வதை வைத்திய நிபுணர்கள் ஆதரிக்க முடியாது. அவ்விதம் ஆதரிப்பதால் உங்கள் நாட்டில் வைத்தியத் தொழிலுக்கே இழுக்கு ஏற்படும்.

"சென்ற பல ஆண்டுகளில், பி. ஸி. ஜியைப் பரந்த முறையில் உபயோகிப்பதைப் போன்ற இத்தகைய ஒரு மூடத்தனமான இயக்கத்தை வைத்தியத் துறையில் யாரும் கண்டதில்லை. இது சம்பந்தமான நிலைமையைத் தாங்கள் தெளிவாக எடுத்துக் கூறி வருவதற்காகத் தங்களைப் பாராட்டுகிறேன்."



காஞ்சி, காமகோடிபீடம்

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



சிருங்கேரி, சாரதாபீடம்

ஸ்ரீ சந்திரசேகர பாரதி சங்கராச்சார்ய சுவாமிகள்

# இலங்கைப் பிரதமரின் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 4உ.

மே தினக் கூட்டமொன்றில் இலங்கைப் பிரதம மந்திரி பேசியபொழுது சிங்களவர்களிடையிலும், தமிழர்களிடையிலும் இருக்கும் தீவிரவாதிகள் அரசாங்கத்துக்குப் பல முட்டுக்கட்டைகளைப் போட்டு நாட்டில் குழப்பத்தை விளைவித்து வருவதாயும் சென்ற ஒரு வருடத்துக்கிடையில் அரசாங்கம் குறிப்பிடத் தக்க முறையில் ஒன்றும் செய்யாததற்கு இரு வகுப்புகளிலுள்ள தீவிரவாதிகளே மூலகாரணம் என்றும் கூறியிருக்கிறார். இதைப் பற்றித் தலையங்கம் எழுதிய ஒரு உள்ளூர்ப் பத்திரிகை தீவிரவாதிகளுக்குத் தூபம் போட்டுக் கிளப்பி விட்டது யார் என்பதைப் பிரதம மந்திரி தமது மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல முடியுமா என்று கேட்டிருக்கிறது. சிங்கள பாஷை வெறியர்களின் பயமுறுத்தல்களுக்குப் பணிந்து சிங்கள மொழியை அரியாசனத்தில் அமர்த்தித் தமிழ்மொழியை ஒதுக்கியிராதிருந்தால் நாட்டில் இன்றுள்ள கொந்தளிப்பு ஏற்பட்டிருக்குமா, என்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்காதவர்களையெல்லாம் தீவிரவாதிகளென்றும் தேசத்துரோகிகளென்றும் சொல்லிவிட முடியுமா என்றும் இப்பத்திரிகை பிரதம மந்திரியைக் கேட்டிருக்கிறது. இன வெறியில்லாமலும் பழைய தவறுகளைத் திருத்திக் கொள்ளத் தயாராகவும் பிரதம மந்திரி இருக்கும் பட்சத்தில் நிலைமை மிஞ்சிவிடவில்லை என்றும் வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

* * *

இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்த எட்டரை லட்சம் இந்திய வம்சாவளியினர்களில் சுமார் ஆறு லட்சம் பேர்களுக்கு உரிமை மறுக்கப் பட்டுள்ளது. பாக்கி இரண்டரை லட்சத்தில் சுமார் அரை லட்சம் பேர்களுக்கு மட்டுமே உரிமை வழங்கப்பட்டு இரண்டு லட்சம் பேர்களுடைய நிலைமை இன்னும் தெளிவாகத் தெரியாமல் இருக்கிறது. செப்டம்பர் மாதத்துக்குள் பிரஜாவுரிமை மனுக்களெல்லாம் பட்டுவாடாச் செய்து முடிக்கப்பட்டு விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மே 17-ம் தேதி பாரதப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு இலங்கைக்கு விஜயம் செய்யும்பொழுது இலங்கை இந்தியர் பிரச்னையைப் பற்றிப் பேச்சுக்கள் நடைபெற மாட்டாது என்றும் இவ்வருட முடிவில் இருதேசப் பிரதம மந்திரிகளும் டில்லியில் சம்பாஷணை நடத்துவார்கள் என்றும் இப்பொழுது கூறப்படுகிறது.

—ரஜனி


# 'தேவன்' திருவடி சேர்ந்தார்

எழுத்துலகில் 'தேவன்' என்று புகழ் பெற்ற திரு ஆர். மகாதேவன், தமது 44-வது வயதில் அகால மரணம் அடைந்த செய்தி கேட்டுத் திடுக்கிடாதவர்கள் இருக்க முடியாது. சரியாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், பத்தொன்பதாவது வயதில், பி. ஏ. பட்டம் பெற்றவுடன் "ஆனந்த விகடன்" காரியாலயத்தில் சேர்ந்தார். தமது உழைப்பினாலும் திறமையினாலும் "ஆனந்த விகடன்" பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராக உயர்ந்தார். பேராசிரியர் கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் பயிற்சி பெற்ற திரு தேவன் தமிழ் நாட்டில் உள்ள தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பல சிறு கதைகளும் தொடர் கதைகளும் எழுதி எழுத்தாளர் உலகில் தமக்கென்று ஒரு தனி இடத்தை ஏற்படுத்திக் கொண்டார். தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு திரு தேவன் இரண்டு தடவை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து. அவர்மீது எழுத்தாளர்களுக்குள்ள நம்பிக்கையையும் மதிப்பையும் நன்கு தெரிந்து கொள்ளலாம். தேவன் அவர்கள் எழுதிய நாவல்களில் சில வெள்ளித் திரையிலும் நாடக மேடைகளிலும் இடம் பெற்றுள்ளன. அவர் மலேயா, இந்தோனேஷ்யா முதலிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தமிழ் மக்களால் விசேஷமாகக் கௌரவிக்கப்பட்டது அவரது வாழ்க்கையில் மறக்க முடியாத கட்டமாகும். எவ்வித வேற்றுமையுமின்றி எல்லோருடனும் சுமுகமாகப் பழகும் குணமும் நற்பண்புகளும் நிறைந்த தேவனின் பெருமைக்கு அவரது தெய்வ பக்தி சிகரமாக அமைந்தது.



சில மாதங்களாகவே தேவன் நோய்வாய்ப் பட்டிருந்தாரெனினும், அவர் குணமடைந்து மீண்டும் தமிழ் அன்னைக்குத் தம்மால் இயன்ற சேவை புரிவார் என்றே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், சென்ற ஞாயிற்றுக்கிழமை அவரது நிலைமை திடீரென்று மோசமாகி முருகன் திருவடி சேர்ந்தார்.

அவரது மறைவால் ஆற்றொணாத் துயரம் அடைந்திருக்கும் அவரது இளம் மனைவிக்கும் வயோதிகத் தாயாருக்கும் நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# நீடித்திருக்கும் எழில்

சக்தி மில்ஸில் தயாரிக்கப்பட்ட ஜார்ஜட், க்ரேப் டபேடா மற்றும் சாடின் முதலிய சில்க்குகள் அற்புதமான கலர்களிலும் டிசைன்களிலும் கிடைக்கின்றன. சக்தி சில்க்குகள் பார்வைக்கு மட்டும் அழகல்ல. அவை நவீன செயற்கை நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றன. அழுக்குப் படியாமலும் மடிப்பு கலையாமலும் இருக்கின்றன. இயற்கை நூலிழைகளால் தயாரிக்கப்பட்டவைகளைச் சலவை செய்வதைப் போல் அவ்வளவு கடினமல்ல. சலவை செய்வது எளிது. நீங்கள் சக்தி சில்க்குகளை வாங்கும் போது மிகச்சிறந்தவைகளையும் நீடித்து உழைக்கக்கூடியவைகளையுமே வாங்குகிறீர்கள் என்பது திண்ணம்.

**சக்தி**

ஓர் போதார் தயாரிப்பு

ஜார்ஜட் . க்ரேப் . சடின் . டபேடா

SSM-I TAM

**ஸ்ரீ சக்தி மில்ஸ் லிமிடெட் — பம்பாய்**

# காதி இலாகா

## அம்பர் ராட்டை வித்தியாலயப் பயிற்சி

அம்பர் ராட்டை வித்தியாலயப் பயிற்சிக்கு இந்தியப் பிரஜைகளிடமிருந்து மனுக்கள் கோரப்படுகிறது. பயிற்சி ஜூலை மாதம் சுமார் 15-ந் தேதி அளவில் கோயமுத்தூர் ஜில்லாவில் காங்கயத்திலும் இன்னும் சர்க்காரால் நிர்ணயிக்கப்படும் இதர இடங்களிலும் ஆரம்பிக்கப்படும்.

**யோக்யதாம்சங்கள் :** டெக்ஸ்டைல்ஸ் வித்தியா பட்டம் பெற்றவர்களும், டெக்ஸ்டைல்ஸ் ஸர்டிபிகேட் பெற்றவர்களும், எஸ். எஸ். எல். ஸி.யும் அதற்கு மேலும் படித்தவர்களும் சேர்க்கப் படுவார்கள்.

**பிரத்தியேக யோக்யதாம்சங்கள் :** கதர் உற்பத்தி பற்றிய நுணுக்கங்கள் தெரிந்தவர்களுக்கு சலுகை உண்டு. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**வயது :** 18 வயதிற்கு மேற்பட்டவர்களும் 45 வயதிற்குட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**பயிற்சிக் காலம் :** ஐந்தரை மாதங்களாகும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் நாற்பது ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்கப்படும். பயிற்சிக்கு அனுமதிக்கப்படுபவர்களுக்கு தங்குவதற்கும் சாப்பாட்டு வசதியும் செய்து தரப்படும்.

பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அவசியம் வேலை கொடுக்கப்படும் என்று உறுதி கொடுப்பதற்கில்லை. ஆனால் பயிற்சியில் தேறியவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு.

1957 மே மாதம் 20ந் தேதிக்குள் மனுக்கள் கீழே கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

"காதி டைரக்டர், நெம். 36-இ, மவுண்ட் ரோடு, சென்னை-2"

மனுதாரர்கள் சென்னை, மதுரை அல்லது திருப்பூருக்கு சொந்த செலவில் நேரில் தேர்வுக்கு வர வேண்டும்.

36-இ, மவுண்ட் ரோடு
சென்னை - 2
30—4—57

காதி டைரக்டர்
இன்சார்ஜ்

# மாதர்குல திலகங்கள்

கேரள மாதர்கள் இதர ராஜ்ய மாதர்களைவிடக் கல்வி முன்னேற்றத்தில் சிறந்து விளங்குபவர்கள். கல்வி தேவதையாகிய சரஸ்வதியின் அனுக்கிரகத்தைப் பூரணமாகப் பெற்று வருபவர்கள். சரஸ்வதி கடாட்சம் எங்கு அதிகமாக இருந்து வருகிறதோ அங்கு லட்சுமி கடாட்சம் - அதாவது பொருளாதார மேம்பாடு இடம்பெறுது என்று கூறுவது வழக்கம். இதற்கு ஆதாரமாகப் புராணக் கதைகளை மேற்கோள் காட்டி, லட்சுமி தேவியை 'மாமியார்' என்றும் சரஸ்வதி தேவியை 'மருமகள்' என்றும் கூறி, ''மாமியார் - மருமகள் ஒத்துழையாமையின் விளைவுகளில் இதுவும் ஒன்று'' என்று கூறுவார்கள்.

கேரளத்தைப் பொறுத்தமட்டில் இந்தத் துர்ப்பாக்கியமான நிலைமை சமீபகாலத்தில் அதிகரித்து விட்டதற்கு வேறு ஒரு சான்றும் தேவையில்லை; கம்யூனிஸ்டு சர்க்கார் ஏற்பட்டிருப்பதே போதுமானதாகும். அந்தச் சர்க்காரில் நிலச் சீர்திருத்த மந்திரியாகப் பதவி ஏற்றிருக்கும் குமாரி கௌரி, ''கேரளத்தின் பொருளாதார முன்னேற்றம், நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்திருக்கிறது'' என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவர். குமாரி கௌரி, சேர்த்தலையில் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். 1946-ம் வருஷத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நடந்து வந்த பொறுப்பாட்சிக் கிளர்ச்சிப் போராட்டம் தலைதூக்கியிருந்தபோது, அதில் கௌரியின் சகோதரர்கள் ஈடுபட்டார்கள். வயலாறு என்னும் ஊரில் முதலில் அந்தக் கிளர்ச்சி தோன்றிற்று. பிறகு அது சமஸ்தானத்தில் மற்றப் பகுதிகளிலும் பரவிற்று. முக்கியமாக, சேர்த்தலையில் அந்தக் கிளர்ச்சி முழு சொரூபத்தை எடுத்து ஆயிரக்கணக்கானவர்களைச் சிறை கொண்டதுடன், நூற்றுக்கணக்கான உயிர்களையும் பலி கொண்டது. அப்போது அரசியலில் குதித்தவர் தான் குமாரி கௌரி. இன்று கேரள அமைச்சராக விளங்குகிறார்.



சிறு பிராயத்திலேயே கல்வியில் ஊக்கமும்; தேச சரித்திரத்தைப் படிப்பதில், அவருக்கு ஆர்வமும் மேலிட்டு வந்தன. உயர்நிலை கல்விப் பயிற்சியை, சேர்த்தலையில் பூர்த்தி செய்துகொண்டு, திருவனந்தபுரம் கல்லூரியில் படித்து வந்தார். சேர்த்தலையில் படித்துக்கொண்டிருந்த காலத்தில், இந்தியக் காங்கிரஸ் மகாசபையினிடம் பக்தி விசுவாசமும் கொண்டு, சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம், காங்கிரசுக்குத் தொண்டாற்றி வந்தார். அதன்பிறகு தான், கம்யூனிஸக் கொள்கையில் அவருக்குப் பற்றுதல் ஏற்பட்டது. இதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று நிலப்பிரச்னை என்று கூறலாம்.

கேரளத்தின் நிலப்பிரச்னை ஒரு தனிப் போக்கானது. அதைத் தீர்ப்பதில் திருமதி கௌரி கல்லூரிப் படிப்பின்போதே கருத்தைச் செலுத்திவரத் தொடங்கியதால், சட்டப் பரீட்சைகளில் தேறியபின், நிலச்சட்ட முறைகளை எடுத்து நன்கு விவாதிக்கக்கூடிய திறமை வாய்ந்த வழக்கறிஞராகத் தொழிலாற்றி வந்தார். சேர்த்தலையில் வக்கீல் தொழில் நடத்திக் கொண்டே, கம்யூனிஸ்டு கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராகச் செயலாற்றி வந்தார். குமாரி கௌரி சிறு பிராயத்திலிருந்தே அரசியலில் ஈடுபட்டதோடு மட்டுமல்ல, கேரள மாதர் நலன்களுக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் தொண்டாற்றி வந்தார். திருவாங்கூர் - கொச்சி மகிள சமாஜத்தின் தலைவராகவும், அகில இந்திய மகிள சமாஜத்தின் உபதலைவராகவும் விளங்கித் தொண்டாற்றி வருகிறார். குமாரி கௌரி அவர்கள் சிறைவாச அநுபவமும் பெற்றவர் தான். சுமார் இரண்டரை ஆண்டு காலம் சிறையில் இருந்திருக்கிறார். திருவாங்கூர் சட்டசபையில் நீண்ட காலமாகவே அங்கத்தினராக விளங்கி வரும் கம்யூனிஸ்டுகளில் குமாரி கௌரியும் ஒருவர். மலையாளம், ஆங்கிலம் இரு மொழிகளிலும் மிகச் சிறந்த பேச்சாளர்.

''கேரளம் சரஸ்வதி தேவியின் அநுக்கிரகத்தை அடைந்து லட்சுமி கடாட்சத்தில் பின்தங்கியிருக்கக் கூடாது. திருமகளின் கடாட்சத்தைப் பெறவும் நாங்கள் முயல்வோம். முக்கியமாக, நிலப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதன்மூலம் இதை நிலைநிறுத்தப் பாடுபடுவோம்'' என்று உறுதி கொண்ட தோற்றத்திலேதான் கேரள மாதர் குல திலகமாகிய குமாரி கௌரியை இங்கு நாம் காண்கிறோம்.

# கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ்

ஈசுவரன் இருக்கிறான் என்று நம்பி அனைவரும் அவனுக்கு வழிபாடு செலுத்துகிறோம். இது போதாது. போதாது என்பதற்குச் சான்று உலகத்தில் இன்னும் நடந்து வரும் பாவங்களே போதும். வழிபாட்டுடன் பல அப்பியாசங்களைப் பெரியோர்கள் சொல்லியும் செய்தும் காட்டியிருக்கிறார்கள். இந்தப் பலவித அப்பியாசங்களைத் தான் யோகம் என்பார்கள். ஞானயோகம், தியானயோகம், கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம் என்றெல்லாம் யோக முறைகளுக்குப் பெயர்கள் உண்டு.

கிறிஸ்துவத் துறவி யொருவர் கூட்டுறவு யோகம் என்று ஒரு முறையைத் தானும் அப்பியாசம் செய்து பிறருக்கும் உபதேசித்தார். வாழ்க்கையில் எந்தச் சமயத்தில் எந்தப் பெரிய அல்லது சிறிய வேலை செய்து கொண்டிருக்கும் போதும், ஆகார விகார வேளைகளிலும், சதா ஈசன் நமக்குத் தகப்பனாகவும், தாயாகவும், தோழனாகவும் பக்கத்திலேயே இருந்து வருகிறான் என்பதை யுணர்ந்து, அவனுடன் கூட்டுறவு வாழ்க்கை நடத்தலாம் என்பது லாரென்ஸ் துறவியின் உபதேசம். ஈசனை நமக்கு நெருங்கிய தோழனாக எப்பொழுதும் கூடவே இருக்கும்படி செய்து கொள்ளும் சக்தி நமக்கு உண்டு. தீவிர அன்பைச் செலுத்தி அவனை அழைத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தலாம். இந்தக் கூட்டுறவைச் சம்பாதிப்பதே லாரென்ஸ் துறவியார் போதித்த மார்க்கம்.

"பிழை செய்துவிட்ட காலத்திலும் அன்போடு அழைத்தால் பெற்ற தாயைப் போல் அவன் பக்கத்தில் வருவான். அருள் பொழிவான். நீ எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் ஆற்றல் தரும் அண்ணனாகவும் கூட உழைக்கும் தம்பியாகவும் வழிகாட்டி நடத்தும் தந்தையாகவும் உனக்கு உதவி செய்ய பகவான் எப்போதும் காத்திருக்கிறான். உள்ளம் நிறைந்த அன்போடு அழைத்தால் வருவான். உன்னோடு அவனும் சேர்ந்து உழைப்பான்" என்று கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் தாமும் செய்து பிறருக்கும் உபதேசித்தார்.

பால்மாறாத குழந்தை தாயை ஒட்டிக் கொள்ளுவது போலும், மேலே ஏறிப்



ராஜாஜி



படரும் கொடி கொம்பை அணைத்துக் கொள்வது போலும் ஆண்டவனை ஒட்டிக்கொண்டு சிறியதும் பெரியதுமான காரியமும், ஓய்வும் விளையாட்டும் எல்லாம் அவனோடு சேர்ந்து செய் என்றார் அந்த ஞானி.

இது ஞான மார்க்கமா, கர்ம யோகமா, பக்தி மார்க்கமா அல்லது தியானமா என்று வேதாந்திகள் ஆராய்ந்து வகுத்துச் சொல்லலாம். ஞானத்தில் முளைத்து பக்தியில் வளர்ந்து, கர்மமும் ஞானமும் ஒன்றாகப் பிணைந்த மார்க்கம், அதாவது கண்ணன் காட்டிய வழியே என்றும் வைத்துக் கொள்ளலாம்.

"யத்கரோஷி. யத்அசுனி
யத்ஜுஹோஷி ததாஸியத்
யத்தபஸ்யஸி கௌந்தேய
தத்குருஷ்வ மதர்ப்பணம்"

என்று கீதையில் சொல்லப்பட்ட மார்க்கம் இதுவேயாகும்.

நான் தமிழாக்கித் தரும் இந்தக் கிறிஸ்துவ முனிவருடைய சிந்தனைகளும் அருள்மொழிகளும், படிக்கும்போது ஆங்காங்கு உபநிஷத் பகவத்கீதை மந்திரங்களும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் வாசகங்களும் நினைவுக்கு வரலாம். அவற்றையெல்லாம் குறித்துஎழுதலாம். ஆனால் அப்படி ஏன் செய்யவேண்டும்? உலகத்தில் எந்த நாட்டில் தோன்றிய ஞானிகளும் பக்தர்களும் ஒரே மெய்ப் பொருளைத்தான் காண்கிறார்கள். அவர்களுடைய சிந்தனைகளும் உபதேசங்களும் ஒன்றாகத்தான் இருக்கும். தத்தம் மக்களுக்குத் தத்தம் மொழியில் சொல்லியிருக்கிறார்கள். இதுவெல்லாம் நம்முடைய சாஸ்திரங்களிலேயே இருக்கிறது என்று எடுத்துக் காட்டிப் பெருமைப்படுவதில் என்ன பயன்?

நம்முடைய சாஸ்திரங்களில் இருப்பதை உணர்ந்து நடந்து வந்தோமானால் அதுவல்லவோ பெருமைப்படுவதற்குக் காரணமாகும். அதுவல்லாமல் நம்முடைய பெரியோர்களைக் காட்டிக் கர்வப்படுவதில் பயன் இல்லை.

எல்லாச் சமயங்களும் பராசக்தியை நோக்கிச் செல்கின்றன. எல்லா பக்தர்களும் ஆண்டவனை அனுபவித்துப் பாடியும் போதித்தும் வந்திருக்கிறார்கள். நாமும் அடக்கத்துடன் பகவானுக்கு உள்ளத்தில் இடம் தந்து, பக்தி செலுத்தி அவனை இதயத்தில் நிறுத்திக் கொள்வோமாக. (தொடரும்)

# கனகாபிஷேகம்


எத்தனையோ ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வலம்புரிச் சங்கம் தோன்றும்; பல வருஷங்களுக்கு ஒரு முறைதான் ஒரு நல்முத்து தோன்றும்.

அதே மாதிரி பல மகா மகங்களுக்கு ஒரு முறைதான் மகாபுருஷர்கள் அவதரிப்பார்கள். அத்தகைய மகாபுருஷர்கள் வரிசையில் வைத்து மதிக்கத் தக்க மகான் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்கள். பாரமார்த்திகத் துறையில் பக்குவம் பெற்று, மனம் வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் தூய்மையைக் கடைப்பிடித்து, வாய்மை வழி நின்று மக்கட்குலத்துக்கு வழி காட்டும் ஆசார்ய சுவாமிகள் பீடாரோஹணம் செய்து அரை நூற்றாண்டு பூர்த்தியாகிவிட்டது. மேற்படி பொன்விழா நாடெங்கும் நல்ல முறையில் பல ஆஸ்திக அன்பர்களால் கொண்டாடப் பட்டது. மேற்படி விழாக்களில் வேதபாராயணம், ஜபம், ஹோமம், ஊர்வலம் முதலியவைகளெல்லாம் பக்தி சிரத்தையுடன் இடம் பெற்றன.

பொன் மலருக்கு மணம் ஊட்டுவது போல் மேற்படி விழாவை ஒட்டி, ஒரு பொன்னான காரியத்தையும் செய்து முடிக்க அன்பர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆச்சார்ய சுவாமிகளுக்குக் கனகாபிஷேகம் செய்யவிருப்பதைத்தான் கூறுகிறோம். அந்த நல்விழா வருகிற ஜூன் மாதம் 11-ந் தேதி ஆச்சார்ய சுவாமிகளின் ஜன்ம தினத்தன்று நடக்கவிருக்கிறது.

மேற்படி நற்காரியத்துக்குத் தேவைப்படுவதெல்லாம் ஒரு ஆயிரம் அரைப் பவுன் காசுகள்தான்! அபிஷேகம் ஆனபின்பு அக்காசுகள் ஆச்சார்ய சுவாமிகளின் ஆணையின்படி அறப் பணிகளுக்கு அள்ளி வழங்கப்படும்.

பொதுப் பணிகளுக்குப் பொருள் வழங்கும் பொன்னுள்ளம் படைத்தவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவற மாட்டார்கள் என்று கருதுகிறோம். நன்கொடை அனுப்பும் அன்பர்கள், திரு எஸ். மகாலிங்க ஐயர், மானேஜிங் டைரக்டர், கும்பகோணம் பாங்க் லிமிடெட், கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.



கலிங்கா
டியூப்ஸ்
தண்ணீர், மற்றும் 'காஸ்' விநியோகத்துக்கும் சகல விதமான தொழிற்சாலை, வீட்டுத் தேவைகளுக்கும் உயர்தர ஸ்டீல் குழாய்கள்.
KALINGA TUBES LTD.
33, CHITTARANJAN AVENUE,
CALCUTTA-12.
Works : CHOUDWAR, CUTTACK
INDIA'S FIRST CONTINUOUS STEEL TUBE FACTORY



# காலடிக் காட்சிகள்

## வேலன்


கேரளத்தின் புனித யாத்திரை ஸ்தலமாக விளங்கும் காலடி கிராமத்தில் இவ்வாரம், அகில இந்திய 9-வது சர்வோதய மகாநாடு ஆச்சார்ய விநோபாபாவே அவர்கள் தலைமையில் கூடுகிறது. கேரளத்தில் இப்போது பூமிதான பாத யாத்திரை செய்து வரும் ஆச்சார்யபாவே அவர்களைக் காலடியில் வரவேற்கக் கேரள சர்வோதய ஊழியர்களும், மகாநாட்டு வரவேற்பு கமிட்டித் தலைவர் ஸ்ரீ கே. கேளப்பனும், வரவேற்புக் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ ஈ. இக்கந்த வாரியாரும் மற்றும் பலரும் விரிவான முறையில் முன்னேற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

கேரளத்தின் அரசியலில், பொதுத் தேர்தலுக்குப் பிறகு பிரமிப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஜனநாயக முறையில் தேர்தலுக்கு நின்று கம்யூனிஸ்டுக் கட்சி பதவி ஏற்றிருக்கும் சாதனைதான், அந்த அரசியல் விந்தைகளில் முக்கியமானது.

கம்யூனிஸ்டு கட்சிக்கும் பூமிதான இயக்கத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சில வருஷங்களுக்கு முன்னால், ஹைதராபாத்திலும் ஆந்திரத்திலும் கம்யூனிஸ்டுகள் இயக்கம் நடத்தி வந்தார்கள். ஹைதராபாத் சர்க்கார் கம்யூனிஸ்டுகளை அடக்குவதில் தீவிரமாக முனைந்திருந்தனர். கம்யூனிஸ்டுகளுக்கு உதவி புரிந்த தெலுங்கானா கிராமங்களில், இந்தப் பரஸ்பர அடக்குமுறைகளின் விளைவாகத் தோன்றிய உயிர்ச்சேதம், பொருட்சேதம் முதலிய கொடுமைகளைக் கேள்விப்பட்டு, இந்தப் பரந்த தேசத்தில் ஒரேயொரு தலைவர் தான் உள்ளம் உருகி, தெலுங்கானாவை நோக்கி ஓடோடியும் வந்தார். அவர்தான், காந்திமகானின் திருவாயாலேயே ''ஆச்சார் யஜி'' என்று போற்றப்பட்ட ஆச்சார்ய விநோபாபாவே! விநோபாபாவே, கொடுமைகளுக்கு உட்பட்ட தெலுங்கானா மக்களிடையே போய்க் குதித்தார். தலைமறைவு கம்யூனிஸ்டுகளை அழைத்தார். அடக்குமுறை அதிகாரத்தை வெறுத்தார். இவ்வளவு அமர்க்களங்களுக்கும் காரணம், குடியானவர்களின் நிலப் பசிதான் என்பதைக் கண்டார்.

அப்போது பிறந்ததுதான் இந்தப் பூமிதான இயக்கம். எனவே பூமிதான இயக்கத்துக்கும் கம்யூனிஸ்டு கட்சிக்கும் வரலாற்றுத் தொடர்பு உண்டு. கேரளத்தில் பதவி ஏற்றிருக்கும் கம்யூனிஸ்டு சர்க்கார், காலடியில் நடைபெறும் சர்வோதய மகாநாட்டில் விசேஷ அக்கறை கொண்டு பணியாற்ற முன் வந்திருப்பதில் ஆச்சரியமில்லை.

கம்யூனிஸ்டுகளுக்கு இம்மகாநாடு எப்படி முக்கியமானதோ, அவ்வாறே அரசியலுக்கு அப்பால் நின்று ஆன்மீகத் துறையில் சேவைகள் புரிந்து வரும், சங்கரர் ஆலய பக்தர்களுக்கும், ராமகிருஷ்ண ஆசிரமத் தொண்டர்களுக்கும் இம்மகாநாடு முக்கியமானது என்று கூறலாம். ஆதி சங்கரர் அவதரித்த இந்தக் காலடி கிராமத்தில் ராமகிருஷ்ண பரமஹம்சரின் அருள்நெறி ஆசிரமம் ஒன்றும் தழைத்தோங்கி வருகிறது. ராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகிகள் உயர்தரப் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். ஆசிரமத்துத் தலைவர் ஸ்ரீ ஆகமானந்தா அவர்களுடைய பெருமுயற்சி காரணமாக மூன்று ஆண்டுகளுக்குமுன், கல்லூரி ஒன்றும் உருவாகியிருக்கிறது. இந்தக் கல்லூரியைக் கட்டுவதற்கு ஸ்ரீ ஆகமானந்தா அவர்கள் மேற்கொண்ட பிரயத்தனங்கள் அற்ப சொற்பமானவையல்ல. கல்லூரிக்குத் தகுந்ததோர் இடத்தைச் சம்பாதிப்பதிலிருந்து பெரிய முறையில் கட்டடங்களை எழுப்புவதற்குப் பொருள் சேகரிப்பது வரையில் ஸ்ரீ ஆகமானந்தாவுக்குத் துணை நின்ற சக்தி, ஆதிசங்கரர் அவர்களிடம் அவர் கொண்டுள்ள பக்திதான். இதனாலேயே, கல்லூரிக்கும், ''சங்கரர் கல்லூரி'' என்று பெயர் சூட்டலானார். இந்தக் கல்லூரி அஸ்திவார விழாவுக்கு 1953-ல் கொச்சி மகாராஜா அவர்கள் தலைமை தாங்க, திருவாங்கூர் மகாராஜா அவர்கள் அஸ்திவாரக்கல் இட்டார்.





6



7

## சர்வோதய மகாநாடு

காலடியில் ஆரம்பமாகிவரும் அகில இந்திய சர்வோதய மகாநாட்டின் ஒன்பதாவது சம்மேளனத்துக்கு முன் னேற்பாடுகள் செய்து கொண்டிருந்த போது அங்கு சென்று நமது புகைப் பட நிருபர் எடுத்த படங்களை இந்தப் பக்கங்களிலும் காணலாம்.

1. சர்வோதயப் பொருட்காட்சி மண்டபம் உருவாகிறது.

2. சர்வோதய மகாநாட்டுக்குச் செல்லும் கிளைப்பாதை. காலடி கிராமத்துக்கு முன்னுள்ள இந்தப்பாதை வழியேகல்லூரிக்குச்செல்லவேண்டும்.

3. ஆதிசங்கரர் வணங்கி வழிபட்ட சாரதாம்பிகை.

4. ஆதிசங்கரர் ஆலயம்.


5. சங்கரர் கல்லூரி.

6. சாரதாம்பிகை ஆலயம்.

7. ஆதிசங்கரர் தமது தாயாரை இங்குதான் தகனம் செய்தார். அந்த இடத்தில் எழுப்பப்பட்டிருக்கும் சமாதி மண்டபம்.

8. பூர்ணா நதியின் ஒரு தோற்றம்.

9. காலடி வழி ரயிலடி.




8






9



**பம்பாய் இந்திய வர்த்தகச் சங்கக் காரியதரிசி திரு ஏ. சி. ராமலிங்கம் அவர்களின் மருமான் சௌபாக்கியவதி லக்ஷ்மி (சாந்தா)க்கும் திரு ஆர். துரைசாமி அவர்களின் புதல்வர் திரு சிவ ராமகிருஷ்ணனுக்கும் ஏப்ரல் 19வ. பம்பாய் மாதுங்காவில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்குப் பம்பாய் நகரப் பிரமுகர்களும் நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். வாழ்க, மணமக்கள்!**

சுவாமி ஆகமானந்தா அவர்கள் ஆசிகூற, ஆதிசங்கரரின் அருள் வீச, ராமகிருஷ்ண பரமஹம்சரின் அன்பு ஒளி வழிகாட்ட, இரண்டு மகா ராஜாக்களால் தொட்டிலில் இடப்பட்டுச் சீரும் சிறப்புமாக வளர்ந்து வரும் ஆதிசங்கரர் கல்லூரிக்குத்தான், சர்வோதயத் தந்தை விநோபா பாவே அவர்களின் வருகையின் நற்பலனும் கிட்டி யிருக்கிறது.

சர்வோதய மகாநாடு, சங்கரர் கல்லூரி கட்டடத்தைச் சுற்றியுள்ள விசாலமான திறந்த வெளியில், பிரும்மாண்டமான பந்தல்களில் கூடுகிறது. சுமார் இரண்டு லட்சம் பேர்கள் வரையில் பார்வையாளர்களும், பதினைந்து ஆயிரத்துக்குக் குறையாமல் பிரதிநிதிகளும் இம் மகாநாட்டுக்கு வருவார்கள் என்று திட்டம் வகுத்து அதற்குத் தகுந்தபடி பந்தல்களை அமைத்து வருகிறார்கள். கொட்டகைகள் வரவேற்பு வளைவுகள், சிரம பரிகார முகாம்கள், பொருட் காட்சி, பிரசார அரங்குகள் அமைத்து வருகிறார்கள். இந்நேரம் முன்னேற்பாடுகள் பூர்த்தியாகி நான்கு தினமகாநாடு ஆரம்பமாகி யிருக்கும். மகாநாட்டுக்கு இந்தியாவின் நாலா திசைகளிலிருந்தும் வந்துகூடும் பல்லாயிரக்கணக்கானவர்களை வரவேற்றுக் காலடி கொண்டு சேர்த்துத் திரும்பி அவர்களைப் பயணப்படுத்தி வைப்பதென்பது இலேசான பொறுப்பல்ல. இந்தப் பெரும் பொறுப்பைக் கேரள மக்களும், சர்க்காரும், முக்கியமாகக் கல்லூரி நிர்வாகிகளும், ராமகிருஷ்ண ஆசிரமத்துத் தொண்டர்களும், சங்கரர் ஆலய பக்தர்களும் மற்றவர்களும் ஏற்றுக்கொண்டு அங்குமிங்கும் சுறுசுறுப்பாக ஓடியாடிப் பணியாற்றி வருகிறார்கள். ரயில்வே அதிகாரிகளும், பஸ் போக்குவரத்து அதிகாரிகளும், முன்னதாகவே காலடியில் முகாம்கள் போட்டுக் கொண்டு மும்முரமாக இருந்து வருகிறார்கள்.

காலடி கிராமம் என்றும் வற்றாத பூர்ணா நதிக்கரையில் அமைந்திருக்கிறது. ஆதிசங்கரர் அவதரித்த இடத்தில்தான் அவருக்கு ஆலயம் எழுப்பி யிருக்கிறார்கள். இந்த ஆலயம் நதிக்கரையில் இயற்கை வளங்கள் நிறைந்த சோலைகளிடையே நிசப்தமான சூழ்நிலையில் ஏகாந்த சிந்தனைக்கு ஏற்றதோர் எழில் இடத்தில் அமைந்திருக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரத்தில் பசுமை, நீலம், ஊதா முதலிய வண்ணங்களில் கம்பீரமாகக் காட்சி தரும் மலைகளையும், குன்றுகளையும் காணலாம்.

★

அங்கமாலி ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும் காலடிக்குச் செல்லலாம். ஆல்வாய் ரயில் வண்டி நிலையத்தில் இறங்கி பஸ்கள் மூலமாகவும் "பெரும் பாவூர்" வழியாகவும் காலடிக்குப் போய்ச் சேரலாம். அங்கமாலி ரயில் வண்டி நிலையத்திலிருந்து செல்வோர்கள், பஸ், அல்லது மாட்டு வண்டிகள் மூலமாக ஐந்து மைல் தூரம் சென்று காலடி கிராமத்தை அடையலாம். காலடி கிராமத்துக்குப் போகும் வழியிலே சாலையிலிருந்து கிளைப்பாதை ஒன்று பிரிகிறது. அதன் வழியே ஒரு மைல் தூரத்தில், மேட்டுப்பாங்கான இடத்தில் அமைந்திருக்கிறது சங்கரர் கல்லூரி. சர்வோதய மகாநாடு அங்குதான் கூடுகிறது என்பதை மறந்து காலடி கிராமத்துக்கே செல்பவர்கள், மறுபடியும் ஒன்றரை மைல் தூரம் திரும்பிவர வேண்டி யிருக்கும். இடம் புரியாதவர்களுக்கு வழி காட்டத் தொண்டர்களின் உதவியைப் பெறலாம்.

ஆல்வாய் வழியே வருபவர்கள் காலடிக்குப் பூர்ணா நதியைப் பரிசலில் கடந்து வரவேண்டும். அங்கமாலி ஸ்டேஷனிலிருந்துசர்வோதயபுரி செல்வோர்களுக்கு இயன்ற உதவிகளையெல்லாம் செய்து தர ரயில்வே அதிகாரிகளும் முன்னேற்பாடுகள் பல செய்து கொண்டிருந்தார்கள். அங்கமாலி ரயில்வேஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ கே. பஹுலியன் மிக்க குதூகலமாக விளங்குகிறார். தமிழ் படிக்கத் தெரியாவிட்டாலும் புரிந்து கொள்ளுகிறார் அந்தக் கேரள சகோதரர். "நீங்கள் காலடிக்கு பஸ்ஸிலேயே போங்கள். அல்லது மாட்டு வண்டியில் போங்கள். ஏனென்றால் போகும் வழியில் நிழலுக்கு ஒதுங்க ஒரு மரம் கூடக் கிடையாது. வெயில் அப்படிக் கொளுத்துகிறது. திடீர் என்று எந்த விநாடியும் வானம் இருண்டு மழை கொட்டினாலும் கொட்டும். இந்த ஐந்து மைல் தூரமும் குடை முதலிய சாதனமின்றி நடந்து போவது அவ்வளவு நல்லதல்ல" என்று அவர் மலையாளத்தில் கூறுவதையும் நாமும் எப்படியோ புரிந்து கொண்டு விடுகிறோம். காலடி சர்வோதய நிகழ்ச்சிகள் இவ்வாறு சேவா உணர்ச்சி என்னும் நல்ல சூழ்நிலையோடுதான் ஆரம்பமாகி யிருக்கிறது.




நமது கார்ட்டூன் சித்திரக்காரர் வரையும் உலகத்தைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? உருண்டையான இந்த உலகத்துக்குக் கண் காது மூக்கு கால் கை எல்லாம் வைத்து வரைந்து காட்டுவார்! உண்மையிலேயே அப்படியொரு உலகம் என் கைக்கு அகப்பட்டால் அதன் காதைத் திருகி, "ஏய் உலகமே! உனக்கு அங்கு, அந்தக் கேரள ராஜ்யம் பக்கம் என்ன பார்வை வேண்டிக்கிடக்கிறது? இங்கே திரும்பிப் பார்!" என்று அதட்டி விரட்டுவேன். ஆனால் உலகம் என் கைக்கு அவ்வளவு சுலபமாகக் கிடைப்பதாக இல்லை. அதனால் "உலகத்தோடு ஒட்டி வாழ்!" என்ற பழமொழியின்படி நானும் உலகம் பார்த்த திசையையே பார்க்கத் தொடங்கினேன். அதன் பிறகு அந்தக் கேரள ராஜ்யத்துக்கே நானும் போய்ச் சேர்ந்தேன்!

பெரிய மழை பெய்து ஆற்றில் தண்ணீர் இரு கரையும் மூட்டப் பெருகி வந்தால் 'வெள்ளம்' என்போம். மலையாள ராஜ்யத்தில் ரயில் புக ஆரம்பித்து ஏதோ ஒரு ரயில் நிலையத்தில் வண்டி நின்றது. சுற்றி நாற்புறமும் மலையும் காடுமாகக் காட்சியளித்தது. அப்பொழுது திடீர் என்று "வெள்ளம்! வெள்ளம்!" என்று குரல் வந்தது. திடுக்கிட்டேன். காட்டு வெள்ளம் எங்கிருந்தாகிலும் பெருக்கெடுத்து வருகிறதோ என்று பதறினேன். ஆனால் "வெள்ளம்" ஒருபக்கெட்டுக்குள் வந்தது. ரயில் நிலையத்தில், ஒரு பக்கெட்டில் தண்ணீர் மொண்டு ஒரு ரயில்வே போர்ட்டர் பிரயாணிகளுக்குத் தண்ணீர் வழங்கிக் கொண்டு வந்தார்! அதைப் பார்த்ததும் "'வெள்ளம்' என்ற தமிழ்ச் சொல் எவ்வளவு வேகமும் கம்பீரமும், பயமும் உண்டாக்கக் கூடிய சொல்! அந்தச் சொல்லில் உள்ள வேகத்தை யெல்லாம் குறைத்து, வெள்ளம் என்றால் "வெறும் குவளைத் தண்ணீர்" என்று ஆக்கிவிட்டார்களே' என்று வருத்தப்பட்டேன். ஆனால் கேரள ராஜ்யத்துக்குள் நுழைந்து பார்த்த போது இந்தப் பண்பு அவர்களுடைய அரசியலிலும் மிகத் துலாம்பரமாகத் தெரிந்தது!

"கம்யூனிஸம்!" என்றால் உலகமே நடுங்கிக் கொண்டிருக்கிறது. அராஜகக் கட்சி என்று உலகமெல்லாம் 'பேசப்படுகிறது. ஆனால் அந்தப் பயங்கரத்தை யெல்லாம் நீக்கி நல்ல ஜனநாயகக் கட்சியாக ஆக்கி, தங்களையும் ஆளும்படி செய்த பெருமை கேரள மக்களுக்குத்தானே உண்டு? இதைப்பார்க்கும் போது மலையாளிகள் பொல்லாதவர்கள் என்றுதானே சொல்லத் தோன்றுகிறது!

கேரள ராஜ்யத்தில் பல திறப்பட்டவர்களைச் சந்தித்தேன். முதலாளிகளைச் சந்தித்தேன், பாட்டாளிகளைச் சந்தித்தேன், பெரிய வியாபாரிகளைச் சந்தித்தேன், சிறிய வியாபாரிகளைச் சந்தித்தேன். எல்லோரும் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டதைப் பற்றி ரொம்பவும் சந்தோஷப் படுகிறார்கள். "கம்யூனிஸ்ட்கள் ஏதாகிலும் மக்களுக்கு நல்லது செய்வார்கள்!" என்று பூரண நம்பிக்கையோடு பேசுகிறார்கள். இப்படி எங்கும் கம்யூனிஸ்ட்ஆட்சியிடம்நல்லுணர்ச்சியும் அனுதாபமும் ஏற்பட்டிருக்கிறதைப் பார்த்து எனக்கு வியப்பாக இருந்தது. இருப்பினும் அங்கு ஒருவரை நான் ஒரு கேள்வி கேட்டேன். "இவ்வளவு உற்சாகமாக இருக்கிறீர்களே, ஆனால் தேர்தலில் 22 லட்சம் வோட்டுகள் காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளன; கம்யூனிஸ்ட்களுக்கு 21 லட்சம் வோட்டுகள்தானே கிடைத்துள்ளன? இதிலிருந்து பெருவாரியான மக்கள் காங்கிரஸை ஆதரிக்கிறார்கள் என்று ஆகவில்லையா?" என்றேன்.

"காங்கிரஸ் கட்சியிடம் மக்களுக்கு இன்னும் நம்பிக்கை பூரணமாகப் போய்விடவில்லை. கொஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் ராஜ்யத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்களிடம் சற்றும் நம்பிக்கை இல்லை. பனம்பள்ளி கோவிந்த மேனன் ஆட்சியிலும் சரி, கவர்னர் ஆட்சியிலும் சரி, மக்கள் எவ்விதப் பயனும் அடைய வில்லை. அதனால் காங்கிரஸ் கட்சியினிடம் பழைய விசுவாசத்தின் காரணமாக வோட்டளித்தார்களே தவிர, உள்ளூர் காங்கிரஸ்காரர்களிடம் நம்பிக்கை தெரிவித்தல்ல. கம்யூனிஸ்ட் கட்சியிடம் அவர்களுக்கு நம்பிக்கை யிருந்ததோ என்று உடனே கேட்டு விடாதீர்கள். 'அவர்களுக்கும் தான் ராஜ்யம் ஆளும் ஒரு வாய்ப்பு அளிப்போமே!' என்று அவர்களைத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள்.



1. ஈ. எம். சங்கரன் நம்பூத்ரி பாடு — முதன் மந்திரி
2. பேராசிரியர் ஜோஸப் முண்டசேரி — கல்வி மந்திரி
3. சாத்தன் மாஸ்டர் — ஸ்தல ஸ்தாபனங்கள்
4. அச்சுத மேனன் — நிதி மந்திரி
5. ஸ்ரீமதி கௌரி — ரெவின்யூ மந்திரி



6. டாக்டர் ஏ. ஆர். மேனன் — சுகாதாரம்
7. வி. ஆர். கிருஷ்ணய்யர் — சட்டம்
8. மஜீத் — மராமத்து இலாகா
9. கே. ஸி. ஜார்ஜ் — உணவு
10. டி. வி. தாமஸ் — தொழிலாளர் நலன்
11. கே. பி. கோபாலன் — தொழில்கள்

அவ்வளவுதான்! நாங்களும் உங்களைப் போல அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று ஆவலுடன் எதிர் நோக்கி யிருக்கிறோம்'' என்றார்.

''அப்படியா! நான் போய் அந்த மந்திரிகளையே கேட்டு விட்டு வருகிறேன்! அவர்கள் அடுத்து வரும் நாட்களில் என்னென்ன நன்மைகள் மக்களுக்குச் செய்யப் போகிறார்கள் என்று நேர்முகமாகக் கேட்டுவிட்டுவருகிறேன்!'' என்று கூறிவிட்டு அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டேன்!



கேரள மந்திரிகளைச் சந்திப்பதற்கு முன்னால் நாம் கேரள ராஜ்யத்தைப் பற்றி ஒரு சில அடிப்படை விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்!

கேரள ராஜ்யம் மிகச் சிறிய ராஜ்யம். ஒரு சதுர மைலுக்கு ஆயிரம் பேர்கள் வாழ்கிறார்களாம்! அப்படியானால் அந்தத் தேசத்தின் ஜனத்தொகைப் பெருக்கத்தைப் பற்றிச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். அத்துடன் கேரள ராஜ்யம் மலைப்பாங்கான பிரதேசம். காடுகள் நிறைந்த பிரதேசம். அதனால் சாகுபடிக்குப் போதிய வயல்வெளிகள் கிடையா.

இது போதாதென்று கடல் நீர் தேசத்துக்குள் புகுந்து எங்கே பார்த்தாலும் தண்ணீர் மயமாக இருக்கிறது. என்றாலும் ஒரு துளி நீர் வாயில் போட முடியுமா? முடியாது—உப்பு நீர். எங்கும் தண்ணீர் இருந்தும் உணவு உற்பத்திக்குப் பிரயோசனமில்லை. மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களோ தமிழ் நாட்டுப் பழக்கம். அரிசிச் சோறு தான் அவர்கள் சாப்பிடுகிறார்கள். அதிலும் புழுங்கலரிசிச் சோறுதான் வேண்டும் என்கிறார்கள்! அதனால் அரிசி வெளி ராஜ்யங்களிலிருந்து தான்வர வேண்டியிருக்கிறது. சமீப காலத்தில் உணவுப் பொருள்களின் விலையும் ஏறி வருகிறது. ஆகவே உணவுப் பஞ்சம் ஓரளவு என்றும் கேரள ராஜ்யத்தில் குடியிருக்கும் பிரச்னையாகும்!

திருவனந்தபுரம் ரயில் நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது 'குப்'பென்று ஒரு துர்நாற்றம் அடித்தது. நான் மூக்கைப் பிடித்துக் கொண்டேன். என்னுடன் ரயிலில் வந்து கொண்டிருந்த மலையாள நண்பர் சும்மா இருந்தார். ''உங்களுக்கு நாற்றம் தெரியவில்லையா? ஏதோ குப்பென்று வாடை அடிக்கிறதே?'' என்றேன்.

''உண்மை; ஆனால் இது எங்களுக்கு நாற்றமல்ல: இது எங்கள் செல்வத்தின் மணம்! மலையாளத்தின் முக்கியமான தொழில் நார்த் தொழில் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! தேங்காய் மட்டைகளை இந்த உப்புத் தண்ணீரில் மாதக் கணக்கில் ஊற வைத்து, அழுக வைத்துப் பிறகுதான் நார் செய்கிறார்கள். அந்தத் தேங்காய் மட்டைகளின் அழுகல் நாற்றம்தான் இப்போது அடிக்கிறது. அதோ பாருங்கள், குவியல் குவியலாகத் தண்ணீரில் தேங்காய் மட்டைகள்!'' என்றார்.

இந்த நார்த் தொழிலும் சமீப காலத்தில் மிகவும் படுத்து விட்டது.

அத்துடன் இன்னொரு விஷயமும் சேர்ந்திருக்கிறது. கேரள ராஜ்யத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்படித்தவர்கள். படிப்பு என்றால் சாதாரண படிப்பில்லை. ஒவ்வொருவருமே அரசியல் வாதிதான். அன்றாடச் செய்திகளைச் சாதாரணத் தொழிலாளி கூடப் படித்து வைத்திருப்பார். அத்துடன், ''தலைவருடைய அபிப்பிராயம் கேட்போம் என்ற எண்ணம் எங்களிடம் கிடையாது. நாங்கள் ஒவ்வொருவருமே தலைவர்தான்'' என்று மலையாள நண்பர் ஒருவர் சொன்னார். இந்த மக்களிடம் இந்தப் பண்பு இருந்ததால் தான் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வரமுடிந்தது. ஆனால் இப்படிப்பட்ட மக்களை ஆள்வது, ஆண்டு நல்ல பெயர் எடுப்பது என்பது எவ்வளவு கஷ்டம்!

இத்தகைய சூழ்நிலையில் கேரள கம்யூனிஸ்டுகள், நாள் எல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் ஆளும் கட்சியாக மாறி விட்டார்கள்! திருவனந்தபுரம் செகரடேரியட் மாளிகையில் அமர்ந்து விட்டார்கள். இந்தப் பொல்லாத மலையாளிகளை யாண்டு நல்ல பெயர் எடுத்து உலகத்துக்குக் கம்யூனிஸ்டுகள் என்றால் யார் என்று காட்டி விடுவது என்று உறுதி பூண்டு மந்திரிகளாக உட்கார்ந்திருக்கிறார்கள். வாருங்கள், நாம் அவர்களைப் போய்ப் பார்ப்போம்.

என்னுடன் வந்த ஒரு மலையாள நண்பரைப் பார்த்து, ''உங்கள் மந்திரிகள் எப்படி?'' என்று கேட்டேன்.

''பள்ளிக்கூடத்தில் நிழலுக்குக்கூட ஒதுங்காதவர்கள் கல்வி மந்திரியாகவும், சட்டம் என்பது இன்ன தென்று தெரியாதவர்கள் சட்ட மந்திரியாகவும் சில ராஜ்யங்களில் வந்து சேருகிறார்களே அந்த மாதிரி இல்லை! எங்கள் மந்திரிகள் எல்லோரும் நன்றாகப் படித்தவர்கள். பெரும்பான்மையோர்பட்டம் பெற்றவர்கள். எல்லாவற்றையும்விட எங்கள் மந்திரிகளுக்கு அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் விஷயம்பற்றி பூரணஞானமுண்டு'' என்று பெருமையோடு சொல்லிக் கொண்டார். இப்படிப் பெருமை அடித்துக் கொள்கிறவரிடம் நான் என்ன சொல்வது? ''சரி வாருங்கள். ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டு வருவோம். மணி இப்பொழுதுதானே ஒன்பதரை ஆகிறது. அதற்குள் மந்திரிகள் எங்கே வந்திருக்கப் போகிறார்கள்?'' என்றேன்.

இதுவும் வினையாகப் போய் விட்டது. ''உங்கள் ராஜ்யத்தை மனசில் கொண்டு பேசாதீர்கள்!'' என்றார் மலையாள நண்பர்.

(அடுத்த இதழில் முடியும்)

# கலைச்செல்வி


## கி. ராஜேந்திரன்



### முன்னுரை

அன்று ஞாயிற்றுக்கிழமை. கல்லூரி விடுமுறை. பொழுது போகாமல் என் அறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தேன். எதிரே சுவரில் என் தந்தையாரின் படம் மாட்டப்பட்டிருந்தது. நேற்று நடந்ததுபோல் இருக்கிறது! ஆனால் அவர் மறைந்து இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன!

இப்படி யோசித்துக் கொண்டிருக்கையிலேயே என் தந்தையார் எழுதிய கதைகள் எல்லாம் மனக்கண் முன்னால் தோன்றின. 'வீணை பவானி'யின் நினைவு வந்தது. சட்டென்று அலமாரியைத் திறந்து வீணை பவானியை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். கந்தப்பப் பிள்ளை என் தகப்பனாருக்கு 'வீணை பவானி'யின் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.



இதற்குள்ளாக ''உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்'' என்று பையன் வந்து சொன்னான். 'இந்தச் சமயத்தில்தானா வந்து தொந்தரவு செய்ய வேண்டும்?' என்று முணுமுணுத்துக் கொண்டே கீழே வேகமாக இறங்கிச் சென்றேன்.


வாசல் அறையில் இருந்த நாற்காலியில் வயதான மனிதர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் வயதானவர் என்று அவர் தலை இலேசாக நரைத்துப் போயிருப்பதிலிருந்து கண்டு பிடிக்க முடிந்தது. திடகாத்திரராகவே காணப்பட்டார். அவருடைய விரல்கள் நாற்காலியின் கைகளில் தாளம் போட்டுக் கொண்டிருந்தன.

என்னைப் பார்த்ததும், ''என்ன தம்பி! சௌக்கியமா? என்னைத் தெரிகிறதா?'' என்று கேட்டார்.

''தெரியவில்லையே!'' என்றேன் மிகுந்த தயக்கத்துடன்.

''அப்பா போனதுமே வந்து காண வேண்டும் என்று இருந்தேன். மனம் இடமளிக்கவில்லை. என்னை உனக்கு அடையாளம் தெரிய நியாயம் இல்லைதான். ஆனால் கந்தப்பப் பிள்ளை என்று கேள்விப் பட்டிருப்பாயே?''

''கேள்விப்பட்டிருக்கிறேனா? வீணை பவானியையும் திருவழுந்தூர் சிவக்கொழுந்தையும் நாடகக் காரியையும் எத்தனை முறை நான் திருப்பித் திருப்பிப் படித்திருக்கிறேன், தெரியுமா?'' என்றேன்.



''அந்தக் கதைகளைக் கூறிய கந்தப்பப் பிள்ளை நான்தான்!''

நான் திருதிருவென்று விழித்தேன்.

''என்ன விழிக்கிறாய், தம்பி! ஏதோ பைத்தியம் உள்ளே நுழைந்து விட்டது என்று நினைக்கிறாயா?''

''இல்லை, இல்லை. ஒரு வேடிக்கையைக் கேளுங்கள். இப்போதுதான் வீணை பவானியைப் படித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் என் தகப்பனாருக்குப் பவானியின் கதையைச் சொல்ல ஆரம்பிக்கும் கட்டம். அப்போது பையன் வந்து, 'உங்களை யாரோ பார்க்க வந்திருக்கிறார்கள்' என்றான். 'ஆகா! கந்தப்பப் பிள்ளை கதை சொல்ல ஆரம்பிக்கும் சமயத்தில் வந்து யாரோ கெடுக்கிறார்களே!' என்று உங்களைத் திட்டிக் கொண்டே வந்தேன். இங்கே

என்னடா வென்றால் சாட்சாத் கந்தப்பப் பிள்ளையே வந்திருக்கிறீர்கள்!''

''இம்மாதிரி விநோதங்கள் வாழ்க்கையில் எவ்வளவோ நடக்கின்றன. எல்லாம் திருச்செந்தூர் முருகனின் விளையாட்டு. அது கிடக்கட்டும், தம்பி! ஓய்வுக்காக அப்பா ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ஓய்வு எடுக்க முயலும் ஒருவரைப் பார்த்துப் பேசித் தொந்தரவு அளிப்பானேன் என்று அப்பொழுது வந்து பார்க்கவில்லை. அப்பாவுக்கு உடம்பு சற்று அதிகம் என்று தெரிந்திருந்தால் கட்டாயம் அப்போதே வந்து பார்த்திருப்பேன்'' என்று சொல்லிக் கந்தப்பப்பிள்ளை ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

இவ்வாறு கந்தப்பப்பிள்ளை சொல்லிக் கொண்டே போனதும் என் கண்களில் நீர் ததும்ப ஆரம்பித்து விட்டது. எவ்வளவோ தைரியமாக இருந்த நான் கண்கலங்கி விட்டேன். அன்று என் தந்தையின் படத்தைப் பார்த்துவிட்டுச் சிந்தனையில் ஈடுபட்டதும் பின்னர் வீணை பவானியைப் படிக்கத் தொடங்கியதும் இப்போது கந்தப்பப் பிள்ளையையே நேரில் சந்தித்ததும் எல்லாமாகச்சேர்ந்து கொண்டு என்னை உலுக்கி விட்டன.

தவுல் அடித்து வஜ்ரம் பாய்ந்த விரல்களால் கந்தப்பப் பிள்ளை என்னை முதுகில் இலேசாகத் தட்டிக் கொடுத்தார். ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே, ''கலைச் செல்வியும் அன்று இப்படித்தான் அழுதாள்'' என்றார்.

''கலைச்செல்வியா? அவள் ஏன் அழ வேண்டும்?'' என்று கேட்டேன். விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் என் துக்கத்தை மறைத்தது.

''உமாபதியைச் சிறையில்போட்டு விட்டார்கள். அதனால்தான் கலைச்செல்வி அழுதாள்.''

''உமாபதியை ஏன் சிறையில் போட வேண்டும்?''



''சரிதான்! அப்பாவைப் போலவே பிள்ளை கேள்விமேல் கேள்வி கேட்டுத் திணற அடிக்கிறாயே! உன் கேள்விகளுக்குப் பதில் சொல்வதைவிட நானே கதையை ஆரம்பத்திலிருந்து முழுவதும் சொல்லி விடுகிறேன்'' என்றார் ஐயம்பேட்டை கந்தப்பன்.

''கதையா?'' என்றேன் நான்.

''இல்லை. உண்மையில் நடந்ததுதான். ஆனால் உன் தகப்பனார் நாடகக்காரியில் எழுதியிருப்பதை ஞாபகப் படுத்திக் கொள். நான் சொல்வதெல்லாம் உண்மையானாலும் கதை போல ஆச்சரியமான சம்பவங்கள் நிறைந்ததாக இருக்கும் என்று எழுதியிருக்கிறார் அல்லவா?''

''ஆமாம்; மேலே சொல்லுங்கள்!'' என்று அவரைத் துரிதப்படுத்தினேன்.

என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஐயம்பேட்டைக் கந்தப்பப் பிள்ளையும் சொல்ல ஆரம்பித்தார்.

## முதல் அத்தியாயம்

''கோயம்புத்தூர் கோகிலம் என்ற பெயரை நீ கேள்விப்பட் டிருக்கிறாயா, தம்பி?'' என்று வழக்கம்போல ஒரு கேள்வியுடன் கந்தப்பப்பிள்ளை கதையை ஆரம்பித்தார். கேள்வி கேட்டுவிட்டுப் பதிலையும் அவரே கூறி விட்டார்.

''நீ கேள்விப்பட்டிருக்க முடியாது. ஏனென்றால் கோகிலம் பிரசித்தமாக இருந்தபோது நீ பிறந்திருக்கவே மாட்டாய். கோகிலத்தைப் பற்றி நீ கேள்விப்படாவிட்டாலும் பரவாயில்லை. ஏனென்றால் நான் கூறப்போகும் விவரம் கோகிலத்தைப் பற்றி அல்ல, அவள் மகள் கலைச் செல்வியைப் பற்றி.''

''கலைச்செல்வி என்ற பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவளது நாட்டியம் அற்புதமாக இருக்கும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போதெல்லாம் அவள் நாட்டியம் ஆடுவதில்லைபோல் இருக்கிறதே?'' என்று நான் இடைமறித்துக் கேட்டேன்.

''ஆமாம்! அவள் நாட்டியம் ஆடுவதை நிறுத்திச் சிறிதுகாலம் ஆயிற்று. அப்படி நிறுத்தியதே நல்லதாயிற்று. இல்லாவிட்டால் அவ்வளவு உயர்ந்த நாட்டியத்தை இந்த உலகம் தாங்காது! நான் கூறப் போகும் வரலாறு கலைச் செல்வியைப் பற்றியதுதான் என்றாலும் கோகிலத்தைப் பற்றியும் நீ சிறிது தெரிந்து கொள்ள வேண்டும்'' என்ற பூர்வ பீடிகையுடன் ஐயம்பேட்டை கந்தப்பப் பிள்ளை மேலே கதையைத் தொடர்ந்தார்.

கோயம்புத்தூர் கோகிலம் அந்தக் காலத்தில் ரொம்பப் பிரசித்தம். அவளுடைய அற்புதமான நாட்டியம் நடைபெறாத ஊரே கிடையாது என்று சொல்லலாம். எந்தக் கோவிலில் எந்தத் திருவிழாவானாலும் உற்சவமானாலும் அவளது நாட்டியம் அங்கு நடக்கும் என்று எதிர்பார்க்கலாம். திருவிழாக் கோலாகலமும் ஆரவாரமும் கோகிலம் நாட்டியம் ஆட ஆரம்பிப்பதற்கு முன்

ளர்தான்! கோகிலம் ஆட ஆரம்பித்து விட்டாளோ இல்லையோ, உடனே கப்சிப் என்று எல்லோரும் அடங்கி விடுவார்கள். ஆடாமல் அசையாமல் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஊசி விழுந்தால் கேட்கும் என்பார்களே அந்தமாதிரி நிசப்தமாக இருக்கும். 'பம் பம்' என்ற மத்தள சத்தமும், 'டிங் டிங்' என்ற தாள சத்தமும் கோகிலத்தின் கால்களில் கட்டப்பட்டிருக்கும் சலங்கைகளின் 'ஜல் ஜல்' என்ற ஒலியும் மட்டும்தான் கேட்கும்!

இப்படி இவள் ஊர் ஊராக நாட்டியம் ஆடிக் கொண்டு வருகையில் மாயவரம் அண்ணாசாமிக்கும் கோகிலத்துக்கும் சிநேகம் ஏற்பட்டது. ஊரில் பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். நான்கூடக் கோகிலத்திடம், 'ஊரார் உன்னை அண்ணாசாமியுடன் சம்பந்தப் படுத்திப் பேசுகிறார்களே? உன்னுடைய நாட்டியத்துக்கு அதனால் பங்கம் ஏற்படுமே?' என்று கேட்டேன்.



'ஊரார் என்ன சொன்னால் எனக்கு என்ன வந்தது அண்ணாச்சி? எனக்கு அவர்தான் தெய்வம். ஊராருக்கு என்னைப் பிடிக்கவில்லையானால் என் நாட்டியத்தைப் பார்க்க வேண்டாம். என் நாட்டியத்தைப் பார்க்க அவர் ஒருவர் இருந்தால் போதும். அவருக்காக என் வாழ்நாள் முழுவதும் நாட்டியமாட நான் தயார்.'

அவளோடு மேலே பேசுவதில் பிரயோசனமில்லை என்று தெரிந்து கொண்டேன். 'கடவுள் விட்ட வழி, அம்மா! எப்படியோ நீ நன்றாக இருக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டு வந்தேன்.

கோகிலம் கூறியதுபோல் அவள் நாட்டியம் ஆடுவதை நிறுத்திவிடவும் இல்லை. மக்கள் அவள் நாட்டியத்தைக் காண வராமல் இருந்து விடவும் இல்லை. அவளுடைய புகழ் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

இதெல்லாம் எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருந்தாலும் அண்ணாசாமி அவளுடன் தொடர்பு வைத்துக் கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை. அண்ணாசாமிக்குக் கல்யாணமாகி இரண்டு குழந்தைகள் வேறு இருந்தன. அவர் மனைவி எவ்வளவு துன்பப்படுவாள் என்று எண்ணியபோது என் மனம் வருந்தியது.

இப்படியிருக்கையில் கோகிலம் நாட்டியம் ஆட ஒப்புக் கொள்வதில்லை என்று கேள்விப்பட்டதும் நான் திடுக்கிட்டுப் போனேன். அண்ணாசாமியை மனதார வைதேன். அந்தப் பாவிதான் அவள் ஆடக்கூடாது என்று சொல்லித் தடை விதித்திருக்க வேண்டும்.

கலையைப் பூட்டுப் போட்டுப் பூட்டி விட்டானே என்று சபித்துக் கொண்டே கோகிலத்தைக் காணச் சென்றேன்.

'வாங்க அண்ணாச்சி!' என்று என்னை மலர்ந்த முகத்துடன் கோகிலம் வரவேற்று உபசரித்தாள்.

நான் திகைத்துப் போனேன். தான் நாட்டியம் ஆடக் கூடாது என்று ஏற்பட்டு விட்டதால் அவள் மனம் சங்கடப்படும் என்று நான் எண்ணி அவளுக்கு ஆறுதல் கூறச் சென்றேன். இங்கே என்னடா வென்றால் இவள் ஒரே சந்தோஷமாக இருக்கிறாள்.

'ஏனம்மா, இப்போதெல்லாம் நாட்டியம் ஆட ஒப்புக் கொள்வதில்லையாமே?' என்று கேட்டேன்.

'ஆமாம், அண்ணாச்சி! எனக்கு அதை விட முக்கியமான காரியம் ஒன்று இருக்கிறது' என்றாள் கோகிலம்.

'அது என்னம்மா அப்படி முக்கியமான காரியம்?' என்று கேட்கையிலேயே விஷயம் எனக்கு புரிந்து விட்டது.

'குழந்தை பிறந்ததும் மறக்காமல் கடிதாக போடுங்கள்' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன்.

ஆறுமாசம் கழித்துஎனக்கு அண்ணாசாமியிடமிருந்து கடிதம் வந்தது. தவுல் வாசிக்க எனக்கு இருந்த இரண்டு மூன்று ஒப்பந்தங்களுக்கும் வேறு ஆளைத் தேடிப் போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டு அன்றிரவே ரயில் ஏறினேன்.

குழந்தை செக்கச்செவேல் என்று தங்க விக்கிரகம் போல இருந்தது. மடியில் இருந்த திருச்செந்தூர் முருகன் பிரஸாதத்தைக் குழந்தையின் நெற்றியில் இட்டுவிட்டுக் கோகிலத்துக்கும் அண்ணாசாமிக்கும் கொடுத்தேன்.

புண்ணியாவசனத்துக்கு உள்ளூர் மேளம் ஏற்பாடாகி யிருந்தது. தவுல் வாசிப்பவனை எழுந்து போகச் சொல்லி விட்டு நானே உட்கார்ந்து வெளுவெளு என்று வெளுத்து வாங்கி விட்டேன். நாயனம் ஊதுபவன் என் மீது கோபித்துக் கொண்டு எழுந்து போய் விட்டான் என்றால் பார்த்துக் கொள்ளேன்!

பெண்ணுக்கு என்ன பெயர் வைப்பது என்று கோகிலமும் அண்ணாசாமியும் தர்க்கம் செய்தார்கள். 'இரண்டு பேரும் இதற்காகத் தர்க்கம் செய்ய வேண்

டாம். 'கலைச் செல்வி' என்று வைத்து விடுங்கள். அம்மாவைப் போலவே இவளும் கலைச் செல்வம் பெற்று விளங்கட்டும் என்றேன். இரண்டு பேரும் ஒப்புக் கொண்டார்கள்.

## இரண்டாம் அத்தியாயம்

கலைச் செல்வி பிறந்த பின் கோகிலம் மீண்டும் நாட்டியம் ஆடுவாள் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து போய் விட்டேன்.

'என் பெண்ணுக்கு நான் நாட்டியம் கற்றுத்தர வேண்டும், அவள் ஆடுவதை நான் பார்த்து மகிழ வேண்டும். இனி மேல் எனக்கு என்ன ஆட்டம் வேண்டிக் கிடக்கிறது?' என்று ஒரே போடாகப் போட்டு விட்டாள் கோகிலம்.

கலைச்செல்விக்கு மூன்று வயதான போது அண்ணுசாமி இறந்து போய் விட்டார். இந்தத் துயரச் செய்தி கிடைத்ததும் விரைந்து சென்று கோகிலத்துக்கு ஆறுதல் சொன்னேன். குழந்தையை வளர்ப்பதில் ஈடுபட்டுத் தன் துயரத்தைக் கோகிலம் மறக்க முற்பட்டாள். நல்ல வேளையாக அண்ணுசாமி தன் சொத்தில் பாதியைக் கோகிலத்துக்கும் பாதியைத் தம் மனைவி மக்களுக்கும் எழுதி வைத்திருந்தார். குழந்தையை ஒரு குறையும் இல்லாமல் கோகிலம் வளர்த்து வந்தாள்.

கோகிலம் தன் மகளுக்குச் சிறு வயதிலிருந்தே பரத நாட்டியம் சொல்லிக் கொடுத்தாள். கலைச் செல்வியும் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டாள்.

கலைச்செல்வி ஆடுவாள். நான் பார்த்துப்ப ரவசமடைவேன். 'புலிக்குப் பிறந்தது பூனையாகி விடுமா? அற்புதம் அற்புதம்' என்றுகூறிக் குழந்தையை அணைத்து உச்சி முகருவேன். கோகிலத்தினிடம், 'தங்கச்சி! குழந்தைக்குத் திருஷ்டி சுத்திப் போடு' என்று சொல்வேன்.

கலைச் செல்வி தன் பதினைந்தாவது வயதில் பூரண ரூபவதியாக விளங்கினாள். அவளுடைய நாட்டியக் கலையும் பூரணத்துவம் பெற்று விளங்கியது.

அப்போதெல்லாம் கலைச் செல்வி எப்போது நடனம் ஆடுகிறாள், எப்போது ஆடவில்லை என்பதையே சொல்ல முடியாது! அவள் நடப்பது, ஓடுவது, உட்காருவது, சிரிப்பது, அழுவது அனைத்தும் அவள் கற்ற நடனக் கலையைப் பிரதிபலித்தன. அந்த நாட்களில் அவள் சிறிதுகூட துன்பம் என்பதையே அறியாதவளாய் இருந்தாள்.

உலகில் அளவில்லாத சந்தோஷத்துடன் இருப்பவர்கள் தான் திடீரென்று சோகக் கடலில் ஆழ்ந்து விடுகிறார்கள்.

> அருள் வாக்கு
>
> ஹே மனமே, தராசு முள் சலிக்காமல் நேராக நிற்பது போல், நீ உன்னுடைய ஆட்டத்தை நிறுத்திச் சிறிது நேரம் ஆலோசனை செய்து பார். ஒரு தட்டில் உன்னுடைய ஆசைகள் எல்லாவற்றையும் வைத்து, மற்றத் தட்டில் ஸ்ரீ ஹரியை வைத்துப் பார். அப்பொழுது எது விசேஷமானது என்பது தெரியும்.
>
> —ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதாள்.

கலைச் செல்வி ஆடிப்பாடிச் சிரித்து மகிழ்வதைப் பார்க்கும் பொழுதெல்லாம், 'ஐயோ! இந்தப் பெண்ணுக்கு ஏதாவது விபரீதம் நேராமல் இருக்க வேண்டுமே!' என்று இந்தப் பாவிக்குத் தோன்றும்!

ஆனால் வெளிப்படையாக, 'தங்கச்சி! குழந்தை எழில்அரசியாக விளங்குகிறாள். அற்புதமாக ஆடுகிறாள். இப்படி ஆடினால் உலகமே தாங்காது!' என்று நான் கோகிலத்தினிடம் கூறுவேன்.

கலைச்செல்வி பெற்ற கலைச்செல்வத்தை அவளே வைத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் வாரி வழங்க வேண்டும் என்று கோகிலம் விரும்பினாள். நாட்டிய அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய்தாள்.

* * *

ஐயம்பேட்டை கந்தப்பப் பிள்ளை கதையை நிறுத்தி விட்டார். அவர் கண்களை மூடிக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டவர் போல் காணப்பட்டார்.

''என்ன யோசனை? மேலே கதையைச் சொல்லுங்கள்'' என்றேன் நான்.

''ஒன்றுமில்லை தம்பி. அரங்கேற்றத்தின்போது கலைச் செல்வி ஆடியதை எப்படி உனக்குச் சொல்வது என்று யோசிக்கிறேன். அவள் அன்று ஆடிய நடனத்தை வார்த்தைகளால் வர்ணிப்பது ரொம்பச் சிரமமான காரியம்.

''தம்பி! இப்போதெல்லாம் யாரைப் பார்த்தாலும் நாட்டியம் ஆடுகிறேன் என்று கிளம்பிவிடுகிறார்கள். ஆரம்பிக்கும்போது பரத நாட்டியமாகத்தான் ஆரம்பிக்கிறார்கள். சில பதங்களுக்கு அபிநயமும் பிடிக்கிறார்கள். எல்லாம் உடல் நலுங்காமல் சிரமப் படாமல் ஆடும் நடனம், தம்பி. இப்படி ஆடிக்கொண்டிருக்கையிலேயே திடீரென்று மார்வாரி நடனம் என்றும் ஜிப்ஸி நடனம் என்றும் அரேபியா நடனம் என்றும் ஆட ஆரம்பித்து விடுகிறார்கள். சாஸ்திரிய பரத

நாட்டியத்தில் ஆரம்பித்துக் கடைசியில் குப்பைக் களஞ்சியமாய் ஆபாசக் கூத்தாக முடித்து விடுகிறார்கள்...''

கந்தப்பப் பிள்ளை ஆவேசம் வந்தவர் போலக் கூறிக்கொண்டே போனார்.

''அதெல்லாம் கிடக்கட்டும், கதைக்குத் திரும்பி வருவோம்'' என்றேன்.

''ஆமாம், தம்பி! கோபத்தில் கதையை மறந்துவிட்டு ஏதேதோ சொல்கிறேன். அரங்கேற்றம் கோயமுத்தூர் டவுன் ஹாலில்தான் நடந்தது. கொட்டகையில் ஜனங்களின் நெரிசல் தாங்க முடியவில்லை. எனக்காகப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் போய் உட்கார்ந்தேன். திரையைத் தூக்க ஐந்து நிமிஷங்கள் இருந்தபோது உமாபதி என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

சீர்காழி சிற்றம்பலம் பிள்ளை நாதஸ்வரத்துக்கு நான் தவுல் வாசித்திருக்கிறேன். சிவக்கொழுந்தின் நாயன வாசிப்பைக் கேட்டவர்களுக்கு மற்ற நாயனங்களைக் கேட்கவே பிடிக்காது. நானும் அப்படித்தான். ஆனால் வயிற்றுப் பிழைப்பையும் கவனிக்க வேண்டும் அல்லவா? ஆகையால் அச்சாரம் வாங்கிக் கொள்வேன். சிற்றம்பலம் பிள்ளைக்கு நான் முதன் முதலில் தவுல் வாசித்த போது ஆச்சரியப்பட்டுப் போனேன். சிவக்கொழுந்தின் வாசிப்பைப் போல் தேவகானமாக இல்லாவிட்டாலும் உயர் தரமாகவே இருந்தது. இப்படி உயர்ந்த திறமையைப் பெற்றிருக்கும் அவருக்கு மதுபானம் செய்யும் பழக்கமும் இருந்தது என்பதைப் பின்னர் அறிந்துகொண்டேன். அதுவே அவருக்கு எமனாகவும் வந்து சேர்ந்தது. அபரிமிதமாக மதுபானம் செய்ததால் தம் வாழ்நாளை விரைவிலேயே முடித்துக் கொண்டு விட்டார்.

சீர்காழி சிற்றம்பலம் இறந்து போனதும் அவர் பையன் உமாபதிக்கும், பெண் சாந்தம்மாவுக்கும் தைரியம் சொல்லி விட்டு வந்தேன்.

இப்போது இரண்டு வருஷங்கள் கழித்து உமாபதியை நான் சந்தித்தேன். 'அண்ணனும் தங்கையும் சௌக்கியமாக இருக்கிறார்களா?' என்று குசலம் விசாரிப்பதற்குள் திரை தூக்கி விட்டார்கள்.

அன்று கலைச் செல்வி ஆடியபோது ஏதோ சாதாரண மானிடப் பெண் ஆடியதாகத் தோன்றவில்லை. தேவலோகத்திலிருந்து மேனகையோ ரம்பையோ அல்லது ஊர்வசியோ தான் வந்து ஆடுவது போல இருந்தது. சபையோர் மெய்மறந்து திறந்த வாய் மூடாது வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் கலைச் செல்வியின் நாட்டி யத்தை அடிக்கடி பார்த்திருக்கும் எனக்கு அன்றைய நிகழ்ச்சி அவ்வளவு திருப்திகர மாக இல்லை. இரண்டு மூன்று தடவை களில் முன் வரிசையில் நான் உட்கார்ந் திருந்த பக்கமாகத் திரும்பி ஆடியதும், அவளுக்குத் தாளம் தவறியது. இதன் காரணத்தை நான் சிக்கிரத்திலேயே தெரிந்துகொண்டு விட்டேன்.

இதன் பின் கலைச் செல்வி நான் உட்கார்ந்திருந்த பக்கமே திரும்பிப் பார்க்காமல் ஆடினாள். அதற்குப் பிறகு தாளம் தவறவில்லை.

உமாபதியோ நடனத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந் தான். நிகழ்ச்சி முடிந்தபின்னரும் ஏதோ பிரமை பிடித்தவன்போல் திரையைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந் தான். நான் அவனைத் தட்டி, 'தம்பி, நடனம் முடிந்துவிட்டது' என்று ஞாப கப்படுத்த வேண்டியதாயிற்று.

திடுக்கிட்டு எழுந்த உமாபதி என்னைத் தன் வீட்டுக்கு வரும்படி அழைத்தான். 'தங்கையையும் பார்த்ததுபோல் இருக் கும். ரொம்ப நாள் ஆயிற்றே' என்றான்.

'இல்லை தம்பி! இன்று இரவு நான் கலைச் செல்வியைப் பார்த்து அவள் நடனத்தைப்பற்றி விமரிசனம் செய்தாக வேண்டும். இல்லையென்றால், என்னைக் கோபித்துக் கொள்ளும்' என்றேன்.

உமாபதியின் முகம் திடீரென்று மலர்ந் தது. 'அப்படியானால்! உங்களுக்கு அவ ளைத் தெரியுமா?' என்று கேட்டான்.

'பேஷாகத் தெரியும்! பிறந்தது முதல் கலைச் செல்வியை எடுத்து வளர்த்தவனாயிற்றே!' என்றேன்.

'மாமா! எனக்கு ஒரு உதவி செய்வீர் களா?' என்று கேட்டான் உமாபதி.

'என்ன?'

'என்னையும் தங்களுடன் அழைத்துப் போங்கள். என் பாராட்டுதலையும் தெரி வித்துவிட்டு வந்து விடுகிறேன்.'


எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனாலும் அவன் மனத்தை நோகச் செய்ய விருப்ப மில்லாமல், 'ஆகட்டும் தம்பி! நிச்சயம் அழைத்துப் போகிறேன். ஆனால் இன்று முடியாது. முன்பின் தெரியாத உன் னைத் திடீரென்று அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போவதென்றால் நன்றாக இராது. முன் கூட்டியே அவர்களிடம் தெரியப்படுத்தி விட்டுப் பிறகு உன்னை அழைத்துப் போகிறேன். இப்போது தங்கை வீட்டில் தனியாக இருக்கும். நாழியாகிறது. நீ வீடு போய்ச் சேர்' என்று கூறினேன்.

'மறந்து விடாதீர்கள்' என்று சொல் லிக் கொண்டே உமாபதி சென்றான்.

(அடுத்த இதழில் முடியும்)



# ஈழ நாட்டுப் பிரயாணம் (18)



# தொழிற்கூடம்



கொத்துக் கொத்தாகத் தழைத்திருக்கும் தேயிலைத் தோட்டத்துக்கு மத்தியிலே நாலு மாடிகளை உடைய தொழிற்சாலை கம்பீரமாக நின்று நம்மை வரவேற்கின்றது. மலையின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் இந்தத் தொழிற்சாலைக்குள் செல்கிறோம். மலை என்றதும் நம் மனக்கண் முன் எழும்புவது போன்ற மலை அன்று இது. அது போலவே நாம் நகர்ப்புரங்களில் பார்த்திருக்கும் தொழிற்சாலைகளைப் போன்ற தொழிற்சாலையும் அல்ல இது.

சிகரக் கூட்டங்கள் தென்படும் கருங்கல் பாறைகளாலான மலைகள் அல்ல, தேயிலைத் தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் மலைகள். நாம் அங்கு நின்று பார்த்தால் எதிரே பூமி சரிவாகக் கீழ் நோக்கி இறங்கும். அதில் சிறு சிறு புதர்களாகத் தழைத்திருக்கும் தேயிலைச் செடிகள். வரிசை வரிசையாகக் கண்ணுக்கெட்டிய தூரம் இந்தத் தேயிலைப் பண்ணைகள் குன்றின் மேல் மட்டத்திலிருந்து கீழ்வரைக்கும் படிப்படியாக இறங்கிச் செல்லும். இந்தப் பசுமை நிறைந்த தேயிலைத் தோட்டத்தின் மத்தியிலே மங்கைப் பருவமடைந்த பெண்கள் மலர் கொய்வது போலத் தேயிலைக் கொழுந்தைக் கொய்து கொண்டிருப்பார்கள். இந்தக் காட்சியைப் பார்த்து அனுபவிப்பதற்காகவே நாம்கூட ஒரு தேயிலைத் தோட்டத்தை வாங்கி விடலாமா என்ற ஆவல் உண்டாகும். தேயிலைத் தோட்டத்தை வாங்குவது என்ன சாமான்யமான காரியமா? லட்சக்கணக்கான ரூபாய்கள் அல்லவா வேண்டும்!

தேயிலைத் தொழிற்சாலை என்றால் அதில் பதினாயிரக் கணக்கானவர்கள் வேலை செய்ய மாட்டார்கள். கரும் புகைகளைக் கக்கிக்கொண்டு வானோங்கி நிற்கும் உயரமான புகை போக்கிகள் கொண்ட ராட்சஸக் கட்டடங்கள் உடையவை அல்ல, தேயிலைத் தொழிற்சாலைக் கட்டடங்கள். ஆனால் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கு அடுக்காகத் தேயிலைக் கொழுந்தைப் பாடம் செய்யும் அறைகளும், பாடம் செய்த கொழுந்துகளை அரைத்துப் பக்குவப் படுத்தும் இயந்திரங்களும், அரைத்த தேயிலைத் தூளை இனம் பிரிக்கும் அறைகளும், இனம் பிரித்த தேயிலைத் தூள்களைப் பெட்டியில் அடைக்கும் இடமும் கொண்ட விசாலமான நாலு அடுக்குகள், மூன்று அடுக்குகள் கொண்ட அழகான கட்டடங்களை உடையவை. இந்தத் தொழிற்சாலைக்குள் அதிகபட்சமாக வேலை செய்யக் கூடியவர்கள் ஐம்பது, நூறு அல்லது நூற்றைம்பது பேர்கள் இருக்கலாம். அவ்வளவுதான்.

''வாருங்கள். தொழிற்சாலையை மேல் மாடியிலிருந்து பார்த்து வருவோம்'' என்று சொல்லித் தொழிற்சாலையின் மேல் அடுக்குக்கு அழைத்துச் சென்றார் திரு தனுஷ்கோடி.

வெளியில் ஜிலுஜிலு என்று குளிர் காற்று அடித்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து தொழிற்சாலையின் உள்ளே சென்றதும் ஒருகணம் ஒன்றும் புரியவில்லை. தேயிலைத் தொழிற்சாலைக் கட்டடத்தின்மேல் மாடியில் சற்று வெப்பம் நிறைந்த புயல் காற்றே வீசிக் கொண்டிருந்தது.



# யாரீர்!

பகீரதன்



"என்ன காற்று இது? எங்கிருந்து இப்படி மிகுந்த உஷ்ணத்துடன் வீசுகிறது?"

"கீழ் அறையில் காற்றைச் சூடாக்கும் இயந்திரம் இருக்கிறது. காற்றைச் சூடாக்கிய பின்னர் அந்தக் காற்றை இந்தக் குழாய்கள் மூலம் தேயிலைக் கொழுந்துகளைப் பாடம் செய்யும் அறைக்குள் விடுகிறோம்" என்று சொல்லி அருகிலிருந்த ஒரு குழாயைக் காண்பித்தார். இளம் சூட்டுடன் காற்று புயல் வேகத்தில் அந்தக் குழாய்க்குள்ளிருந்து சீறிக்கொண்டு வந்து கொண்டிருந்தது.

"காற்றை ஏன் சூடாக்குகிறீர்கள் ?"

"தேயிலைக் கொழுந்து காய்ந்து பாடமாக வேண்டும். அதை வெய்யிலில் உலர்த்தக் கூடாது! இங்கு வெய்யிலும் அடிக்காது. அதனால் தேயிலைக் கொழுந்தும் உலர்ந்து வாடிப் பாடமாகாது. அப்படியே வெய்யிலில் உலர்த்தினாலும் எல்லாக் கொழுந்துகளும் ஒன்றுபோல் உலர்ந்து பாடமாகாது. அதற்காகத்தான் இப்படிக் காற்றைச் சூடாக்கிக் குழாய்கள் மூலம் தேயிலைக் கொழுந்துகளை உலர்த்தி வைத்திருக்கும் அறைக்குள் விடுகிறோம்" என்று சொல்லித் தேயிலைப் பாடம் செய்யும் அறைக்குள் எங்களை அழைத்துச் சென்றார் திரு தனுஷ்கோடி.

சாக்குகளைக் கொண்டு தட்டுத் தட்டாகச் செய்த பெரிய அலமாரிகள் நிறைந்த விசாலமான அறை. அந்த அலமாரிகளில் ஒவ்வொரு சாக்குத் தட்டுகளுக்கும் மத்தியில் அரை அடி இடைவெளி இருந்தது. அந்தச் சாக்குத் தட்டுகளில் தேயிலைக் கொழுந்துகளை ஒன்றின்மேல் ஒன்று படாமல் பரப்பி உலர்த்தி வைத்திருந்தார்கள். தேயிலைக் கொழுந்துகளின் சுகமான மணம் அந்த அறையில் பரவி மனத்தை மயக்கியது.

"ஏன் இப்படிச் சாக்குத் தட்டுகள் வைத்திருக்கின்றன? இங்கெல்லாம் நல்ல பலகைகள் கிடைக்காதோ ?" என்றேன்.

"சாக்குக்குத்தான் தேயிலைக் கொழுந்திலுள்ள தண்ணீரை இழுக்கும் சக்தி உண்டு. அத்துடன் இந்த உஷ்ணக் காற்றும் சேர்ந்தால் தேயிலைக் கொழுந்துகள் சற்று வாடி உலர்ந்து பாடமாகிவிடும் "

"பாடமான தேயிலைக் கொழுந்துகளை என்ன செய்வார்கள் ?"

அருகில் இருக்கும் ஒரு அறைக்கு அழைத்துச் சென்று அங்கு தரையில் இருந்த ஒரு சில துவாரங்களைக் காண்பித்தார்.

"இந்தத் துவாரத்துக்கும் தேயிலைக் கொழுந்துக்கும் என்ன சம்பந்தம் ?" என்று கேட்டேன்.

"அவசரப் படுகிறீர்களே! இந்தத் துவாரங்களுக்குள் பாடம் செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்துகளைக் கொண்டு வந்து கொட்டுவார்கள். அது நேரே கீழ் அறையில் இருக்கும் இயந்திரங்களில் போய் விழும்" என்று சொன்னார்.

"கீழே இயந்திரங்கள் வேறு இருக்கின்றனவா ?"

"ஆமாம் " என்று சொல்லி இயந்திரங்கள் இருக்கும் அறைக்கு எங்களை அழைத்துக் கொண்டு சென்றார்.

வீடுகளில் மாவரைக்கும் இயந்திரத்தில் அரிசியையோ உளுந்தையோ போட்டு உடைக்கிறோமல்லவா? அது போல மிகப் பெரிய ராட்சஸ இயந்திரங்கள் இருக்கின்றன. அதன் மத்தியில் இருக்கும் துவாரத்தில் பாடம் பண்ணப்பட்ட தேயிலைக் கொழுந்துகள் விழுகின்றன. அந்தத் தேயிலைத் தூள்கள் மேலும்கீழுமாக உள்ள இரண்டு

பெரிய இரும்பு உருளைக்கு மத்தியில் அப்படியே உருட்டப்பட்டுத் தூள் தூளாகப் பக்கத்தில் விழுகின்றன. தேயிலைத்தூள் விழும் இடத்தில் பெரிய சல்லடை ஒன்று ஓயாமல் சலித்துக் கொண்டே இருக்கிறது. அதில் உள்ள சிறு சிறு துவாரங்கள் வழியாக ஒரே அளவான தூள்கள் கீழே இருக்கும் தட்டில் விழுகின்றன. அந்தத் தட்டை அங்கிருந்து எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். சல்லடையில் தங்கிய பெரிய தூள்களை மீண்டும் அந்தஇயந்திரத்தில் போட்டு அரைக்கிறார்கள்.

"இவ்வாறு அரைத்துப் பொடி செய்தபின் அந்தத் தேயிலைத் தூளை எங்கே கொண்டு போகிறார்கள்?"

"இந்தத் தூளை இன்னொரு இயந்திரத்தில் வறுப்பதற்காகக் கொண்டு போகிறார்கள்" என்று சொல்லி அந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார் தனுஷ்கோடி.

அங்குள்ள ஒரு விசித்திரமான இயந்திரத்துக்குள் தேயிலைத் தூளைக் கொட்டுகிறார்கள். அந்தத் தூள்கள் இயந்திரத்துக்குள் பல்வேறுவிதமான உஷ்ண அறைகள் வழியே சென்று வருவதால் நன்றாக வறுபட்டுப் பக்குவமான தேயிலைத் தூளாக வெளிவருகிறது. அப்படி வெளி வரும்போது 'கம்' என்ற தேயிலை மணத்துடன் நாம் பார்க்கும் தேயிலைத் தூளாக நிறம் மாறிக் கறுப்பாக வந்து விடுகிறது.

இந்தத் தூளை மீண்டும் சலித்துப் பெரிய தூள், சிறிய தூள், புழுதி என்று தரம் தரமாகப் பிரிக்கப்படுகின்றன. அவ்வாறு பிரித்து எடுத்த தூள்களைப் பெரிய பெரிய கள்ளிப் பெட்டிகளில் அடைத்து 'பாக்' செய்து லாரிகளில் ஏற்றிக் கொழும்பு நகருக்கு அனுப்புகிறார்கள். அங்கிருந்து அந்தப் பெட்டிகள் இங்கிலாந்துக்கோ, அமெரிக்காவுக்கோ, ஆஸ்திரேலியாவுக்கோ கப்பல்களில் ஏற்றி அனுப்பப்படுகின்றன. அந்த நாடுகளிலிருந்து பெரிய டின்களிலும் சிறிய டின்களிலும் பொட்டலங்களிலும் அடைத்து நம் கடைகளில் வியாபாரத்துக்கு வருகின்றன.

அந்தத் தூள் வீட்டிலும், ஹோட்டல்களிலும் பல்வேறு இடங்களுக்கு வந்த பிறகு பல மாதிரிகளில் பக்குவம் செய்யப்பட்டுச் சூடான தேநீராக மாறுகிறது.

இந்த விவரங்களைத் தனுஷ்கோடி சொல்லி முடித்ததும், "எல்லாத் தேயிலைத் தொழிற்சாலைகளும் இப்படித்தான் இருக்குமோ?" என்று கேட்டேன்.

"எல்லாத் தொழிற்சாலைகளும் இவ்வளவு சுகாதாரமாகவும் சுத்தமாகவும் இருக்கும் என்று உறுதி கூற முடியாது. நுவரெலியாவில் உள்ள இந்தப் பெட்ரே தேயிலைத் தொழிற்சாலை கிழக்கு ஆசியாவிலேயே நவீன வசதிகள் கொண்டது. இங்கிலாந்து மகாராணி எலிஸபெத், ஜப்பான் தேசத்து இளவரசி எல்லாரும் இந்தத் தொழிற்சாலையைப் பார்த்து வியந்து போயிருக்கிறார்கள்" என்றார்.

"மத் தூளில் உயர்ந்தது, மட்டமானது என்று எப்படிக் கண்டு பிடிக்கிறார்கள்?" என்று திரு தனுஷ்கோடியிடம் கேட்டேன்.

"அதற்கென்று தனியாகப் பரிசோதனைக் கூடமே இருக்கிறது. வாருங்கள், அங்கு போகலாம்!" என்று சொல்லி ரசாயனக் கூடம்போல் தோற்றமளித்த ஒரு அறைக்குள் எங்களை அழைத்துச் சென்றார். அந்த அறையில் இருந்த ஒருவரைக் காண்பித்து, "இவர்தான் மயின் தரத்தைப் பரிசோதிக்கும் நிபுணர்" என்று அறிமுகப்படுத்தினார்.


தொழிலாளர் நல அதிகாரி
திரு தனுஷ்கோடி.

அவர் எங்களை அகமும் முகமும் மலர வரவேற்று நாங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் முகம் சுணங்காமல் பதில் கூறியதுடன் எங்களுக்கு நீண்ட நெடுநேரம் தேயிலையின் தரத்தைப் பிரிக்கும் விஷயத்தைப் பற்றிக் கூறிய பிரசங்கத்தைச் சுருக்கமாக இங்கே சொல்லி விடுகிறேன்.

ஒவ்வொரு தேயிலைத் தோட்டத்துக் கொழுந்துகளையும் தனித்தனியாகப் பிரித்துக் கொள்கிறார்கள். அந்தந்தத் தோட்டத்துத் தேயிலைத் தூளைத் தேநீராக்கிச் சுவைத்துப் பார்க்கிறார்கள். தேநீரைச் சுவைத்துச் சுவைத்துப் பார்த்து அனுபவப்பட்ட நிபுணர்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பலர் இருக்கிறார்கள். அவர்கள் 'இந்த இந்தத் தேயிலைத் தோட்டத்துத் தேநீர் நன்றாக இருக்கிறது. நல்ல மணத்துடன் உயர்வாக இருக்கிறது' என்று அபிப்பிராயம் கூறுகிறார்கள். அவர்கள் கூறும் அபிப்பிராயத்தைக் கொண்டு முதல் தரம், அடுத்த தரம் என்று இனம் பிரித்து விடுகிறார்கள்.

பொதுவாக, ஒரு தேயிலைத் தோட்டத்துத் தேயிலைத் தூள் எப்பொழுதுமே முதல் தரமாக இருப்பதில்லை. அந்தந்தக் காலத்துச் சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தாற்போல் மயின் தரமும் மாறுபடுகிறதாம். அதனால் அடிக்கடி இவ்வாறு பரிசோதனை செய்து பரிசோதனைச் சாலையில் உள்ள நிபுணர்கள் அபிப்பிராயத்துக்கு இணங்கத் தேயிலைத் தூளின் தரம் பிரிக்கப்பட்டு அதற்கேற்ப அந்தத் தேயிலைக்கு விலைகளை நிர்ணயம் செய்கிறார்கள்.

ஏதோ கடைக்குச் சென்று மத்தூள் வாங்கி வந்து தேநீர் போட்டுச் சாப்பிட்டுவிடுகிறோம். ஆனால் அதற்கு எவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது! எத்தனை லட்சக்கணக்கான மக்கள் இரவு பகல் என்று பாராமல், மழை குளிர் என்று கருதாமல் உழைக்க வேண்டியிருக்கிறது. மனிதனின் நாக்கு இருக்கிறதே! அடே, அப்பா! அதற்கு இருக்கும் ரஸிகத்தன்மைக்கு ஈடு இணையே கிடையாது! சும்மாவா சொன்னார்கள் நம் முன்னோர்கள், 'தின்று ருசி கண்டவன், சும்மா இருக்க மாட்டான்!' என்று.

இந்த நுணுக்கங்களையெல்லாம் தெரிந்து கொண்டு தேயிலைத் தரம் பிரிக்கும் பரிசோதனைக் கூடத்திலிருந்து வெளியில் வந்தோம்.



மே 10 உ முதல்
சென்னையில் மே 12 உ முதல்
பிரபாத் · கெயிட்டி · சரஸ்வதி
காதலுக்கும் வழிவைத்து
கருப்பு மனம் படைத்தோரின்
இருட்டுமதி போக்குதற்கும் ஒளிவைத்து
கலைவிளக்காய் - ஏற்றிவைத்த ...
புதையல்
கமால் பிரதர்ஸ்
தயாரிப்பு..
கதை, வசனம்
மு.கருணாநிதி
கிருஷ்ணன் பஞ்சு
A.K.GOPAL

"இன்னும் ஏதாவது கேட்க வேண்டுமா?" என்றார் திரு தனுஷ்கோடி.

"ஆமாம். தேயிலைத் தோட்டம் தொழிற்சாலை முதலியவைகளைப் பார்த்தாகி விட்டது. தொழிலாளர் வாழ்க்கை முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றேன்.

அவர் தொழிலாளர் நல அதிகாரியாக இருந்ததால் தொழிலாளர்களுக்கு ஏதோ ஏகப்பட்ட வசதிகள் செய்து கொடுப்பதாகச் சொன்னார். உண்மை அப்படியில்லை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னும் வசதிகள் செய்து கொடுக்கத்தான் வேண்டும்.

திரு தனுஷ்கோடி சொன்னது. இன்னும் தேயிலைத் தோட்டத்துத் தொழிலாளர்கள் கூறியது, ஈழத்தில் நான் கேள்விப்பட்டது எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறுகிறேன்.

## தொழிலாளர்கள் வாழ்க்கை முறை

காலை ஐந்து மணிக்கெல்லாம் தொழிலாளர்கள் எழுந்திருக்கிறார்கள். இயந்திரம் போல் ஆறுமணிக்குத் தேயிலைத் தோட்டத்தில் இருக்கும் 'பிரட்டுக்களம்' அதாவது தொழிலாளர்களின் பெயரைக் கூப்பிட்டுக் கணக்கெடுக்கும் களத்துக்குப் போகிறார்கள். பெரிய கணக்குப் பிள்ளையிடம் பெயர் பதிவுசெய்து கொள்கிறார்கள். ஏதோ வீடு என்ற பெயரில் அவர்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கும் தகரக் கொட்டகைக்குத் திரும்பி வருகிறார்கள். ரொட்டியும் தேநீரும் அருந்தி விட்டு மீண்டும் தேயிலைத் தோட்டத்துக்குச் சென்று விடுகிறார்கள்.

அங்கு கங்காணியின் மிரட்டல், கண்டிராக்டரின் அதட்டல், கணக்குப் பிள்ளையின் கண்காணிப்பு, அவர்களுடைய அற்பத்தனமான ஆசைகள் இப்படிப் பல்வேறு கஷ்டங்களை யெல்லாம் சகித்துக் கொண்டு பொறுமையுடன் வேலை செய்கிறார்கள். பகல் பன்னிரண்டு மணிக்கு சங்கு ஒலிக்கும். வேலையை நிறுத்தி விட்டு

# தெரியுமா உங்களுக்கு?

மனிதருக்கு அவசியம் ஓய்வு வேண்டும். இரும்பு, எஃகால் செய்யப்பட்ட உயிரற்ற இயந்திரங்களுக்குக் கூட ஓய்வு கொடுக்க வேண்டியது அத்தியாவசியமாக இருக்கிறது. ஆனால், ஒரு நிமிஷம்கூட ஓய்வின்றி ஐம்பது வருஷங்கள், அறுபது வருஷங்கள் ஏன் நூறு ஆண்டுகளுக்கு மேலும் இயங்கிக் கொண்டிருக்கும் அதிசயமான ஓர் யந்திரம் இருக்கத்தான் செய்கிறது. ஓய்ச்சல் ஒழிவின்றி நூறு ஆண்டுகளுக்கு மேலும் ஓடிக் கொண்டிருக்கும் ஓர் யந்திரம் இருக்கிறதா என்று வியப்படையாதவர்கள் இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதரிடத்திலும் உள்ள இருதயம்தான் அந்த யந்திரமாகும்.

இந்த உலகில் எத்தனையோ அபூர்வமான யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இருதயத்தைப் போன்ற அற்புதமான ஓர் யந்திரத்தை இது வரையில் எவருமே கண்டுபிடித்ததில்லை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். லட்சக்கணக்கான பவுண்டுகள் கனமுள்ள எந்த யந்திரமும் செய்ய முடியாத வேலையை, அரைப் பவுண்டு கனமே உள்ள இருதயம் செய்து வருகிறது! ஒரு நிமிஷத்துக்கு 70 தடவை 'பட்' 'பட்' என்று அடித்துக் கொள்ளும் இருதயம் 50 ஆண்டுகளில் சுமார் 18½ கோடி தடவைகள் விடாமல் அடித்துக் கொள்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவ்விதம் அடித்துக் கொள்ளும் இருதயம் 12 மணி நேரத்தில் பூமியிலிருந்து 65 டன் கனமுள்ள யந்திரத்தை மேலே தூக்குவதற்குத் தேவையான சக்தியை உண்டுபண்ணுகிறது.

இருதயத்திலிருந்து உடலுக்குச் செல்லும் சுத்தமான ரத்தம் சுற்றிச் சுற்றி மறுபடியும் இருதயத்துக்கு வரும் போது அசுத்தமாகி விடுகிறது. அதை மீண்டும் சுத்தம் செய்து உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் அனுப்புவதே இருதயத்தின் இடைவிடாத வேலையாகும். உடலில் உள்ள மற்ற எந்த உறுப்புகளுக்குப் பழுது ஏற்பட்டாலும் உயிருக்கு ஆபத்து உண்டாகாது. ஆனால், இருதயத்துக்குப் பழுது ஏற்பட்டால் ஒரு நிமிஷம் கூட உயிர் நிற்காது. இருதயத்திலிருந்து கிளம்பும் ரத்தம் உடலுக்குள் 12,000 மைல்கள் தூரம் சுற்றி வருகிறதாம். அதனால்தான் இருதயத்தைப் போன்ற அதிசயமான, நுட்பமான யந்திரத்தை இதுவரையில் யாருமே கண்டு பிடித்ததில்லை என்று கூறுகிறார்கள்.

இருதயம் என்ற அற்புத யந்திரம் நமக்குத் தெரியாமல் எத்தனையோ காரியங்களைச் செய்கிறது. ஒருவர் தவறி அதிக உணவைச் சாப்பிட்டு விட்டால், உடனே அது ஜீரணமாவதற்காக இருதயம் ரத்த ஓட்டத்தின் வேகத்தை அதிகப்படுத்துகிறது. கர்ப்பமாக இருக்கும் பெண்ணின் இருதயம் அந்தப் பெண்ணின் ரத்த ஓட்டமும் அதே சமயம் சிசுவின் ரத்த ஓட்டமும் ஒழுங்காக நடைபெறுவதற்கு உதவி புரிகிறது. உடலோ, அல்லது மூளையோ அதிக வேலை செய்ய வேண்டுமாயின், இருதயம் அதிக ரத்தத்தை அனுப்புகிறது. அரைப் பவுண்டு கனமும் சில அங்குல சுற்றளவுமே உள்ள இருதயம் விஞ்ஞான மேதைகள், வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள், பொறி இயல் பண்டிதர்கள் முதலிய தொழிற் கலைஞர்களை யெல்லாம் திகைக்க வைக்கிறது.

**அருள் வாக்கு**

நமக்குப் பிரியமானவர் இறந்து போனால் துக்கம் உண்டாகிறது. நம் கண்முன் அவர் போனால் துக்கம் உண்டாகிறது. நாம் போனால் துக்கம் இருக்காதே என்று நினைக்கிறோம். நாம் போவதில் நமக்குத் துக்கம் கிடையாது. ஆகையால் எல்லோரும் நாமாக இருந்து விட்டால் துக்கமே இல்லை.

**ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்**

'வீட்டு'க்கு. (வீடுகளா அவைகள்!) வருவார்கள். அவர்களுக்குத் தரப்படும் ஒரு மணி நேரச் சாப்பாட்டு ஓய்வு காலத்துக்குள் ஏதோ சமைத்தோம் சாப்பிட்டோம் என்று பரக்கப் பரக்கக் காரியங்களை முடித்துக் கொண்டு மீண்டும் ஒரு மணிக்குத் தேயிலைத் தோட்டத்துக்குள் சென்று விடுவார்கள். மாலை நாலு மணிக்குச் சங்கு ஒலிக்கும். காலையில் இருந்து தாங்கள் கொய்த தேயிலைக் கொழுந்துகளைத் தொழிற்சாலைக்குள் கொண்டு கொடுத்து விட்டு வருவதற்குள் இரவு ஏழு மணியாகிவிடும்.

குழந்தைகளுடன் கொஞ்சுவதோ, கணவன்மாருடன் ஆதரவுடன் பேசுவதோ, மனத்திருப்தியுடன் உண்பதோ எல்லாம் அதன் பின்னர்தான். மீண்டும் காலைச் சங்கின் சத்தமோ, தப்புகொட்டும் ஒலியோ கேட்டுவிடும்.

மாதந்தோறும் பத்தாம் தேதி தான் சூப்பிரண்டண்டு வந்து தொழிலாளர்களுக்குச் சம்பளம் தருவார். தோட்டத்துக் கணக்கில் இவர்களுக்கென்று ஒரு கூட்டுறவு பண்டகசாலையும் இருக்கிறது. மாதக்கணக்கில் தேவையான சாமான்கள் வாங்கிக் கொள்ளலாம். அந்தச் சாமான்களுக்கான பணத்தைப் பிடித்துக் கொண்டுதான சம்பளம் கொடுப்பார்கள்.

தோட்டத்து நிர்வாகத்திலேயே தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகப் பள்ளிக்கூடம் உண்டு. அவரவர்கள் மதத்துக்கு உரிய ஆலயங்களும் உண்டு. பாடசாலை ஆசிரியர் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்திருந்தால் போதும். தோட்ட நிர்வாகிகளே ஆசிரியருக்கு நூறு ரூபாய் சம்பளம் கொடுத்து விடுவார்கள். குழந்தைகளுக்கு அறிவு புகட்டும் ஆசிரியரும் தோட்டத்துத் தொழிலாளி போல சூப்பிரண்டுக்கு அடங்கித் தான் நடக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு 'அழகான வீடு!' உண்டு. ஒரே ஆசிரியர் ஆறு ஏழு வகுப்புகளுக்குக் கல்வி கற்பிப்பார்.

இந்த நிலையில் இருந்த தோட்டப் பாடசாலையைச் சிங்களசர்க்கார் எடுத்துக்கொண்டு பல சௌகர்யங்களைச் செய்து தருவதாகக் கேள்விப்பட்டேன். உண்மையான நல்ல எண்ணத்துடன் தான் இந்தக் காரியத்தைச் செய்கிறார்களோ, அல்லது இதற்குள் ஏதாவது சூழ்ச்சிகள் இருக்குமோ என்னவோ? யார் கண்டது? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

கல்வி வாசனையற்ற தோட்டத் தொழிலாளர்களைக் கிறிஸ்தவர்களாக மதமாற்றும் காரியங்களைக் கிறிஸ்தவ மதகுருமார்கள் தாராளமாகச் செய்து வருகிறார்கள். இதுவரையில் தூங்கிக் கொண்டிருந்த சைவர்களுக்குச் சூடு பிடித்துத் தொழிலாளர்களின் மதமாற்றத்தைத் தடுத்து வருகிறார்கள். இந்த விஷயத்தில் ஒன்றை மட்டும் மறந்து விடக் கூடாது. நாம் பிற மதத்துக்கு விரோதிகள் அல்ல என்றாலும் நம்முடைய மதத்தில் பிறர் குறுக்கிடுவதை அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு ஒரு காலத்தில் தூங்கியதன் பலன் தான் இப்பொழுது பாரதத்துக்கு ஏற்பட்டிருக்கும் தலைவேதனை. காஷ்மீரப் பிரச்னை. காஷ்மீரத்தில் உள்ளவர்கள் அத்தனைபேரும் இந்துக்கள்தான். அரசியல் காரணங்களினால் அவர்கள் பலாத்காரமாக மதமாற்றப்பட்டவர்கள். அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து, மீண்டும் இந்து மதத்தில் சேருவதற்கு விரும்பியபோது, இந்து மதத்தின் உண்மைத் தத்துவத்தை உணராத காசி நகரத்துப் பண்டாக்கள் அதைத் தடுத்து நிறுத்தி விட்டனர். அதன் பலனாக லட்சக்கணக்கான மக்களை இந்து மதம் இழந்துவிட்டது. அது காரணமாகக் காஷ்மீரப் பிரச்னை இன்று உலகப் பிரச்னையாகி விட்டது.

ஆகையால் மதமாற்றத்துக்குச் சைவர்கள் இடம் கொடுக்கக் கூடாது. கூடவே, சைவ சமயத்துக்கு வருகிறவர்களை ''வருக! வருக!'' என்று இருகைகளையும் கூப்பி வரவேற்கவும் தயாராக இருக்க வேண்டும். மதமாற்றங்கள் ஒருபுறம் இருக்கட்டும். தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்னைகளைப் பார்ப்போம்.

மாதக் கணக்கில் பார்த்தால் ஒரு தொழிலாளியின் குடும்பத்தில் கணவன், மனைவி, சிறுவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து முந்நூறு ரூபாயிலிருந்து அறுநூறு ரூபாய் வரையில் சம்பாதிக்கிறார்கள். என்ன சம்பாதித்து என்ன? வருவாயில் பாதிக்குமேல் அங்கு மது அரக்கன் அல்லவா கொண்டு போய்விடுகிறான்.

தமிழ் நாட்டில் சில அதி மேதாவிகள் மதுவிலக்கின் தன்மை தெரியாமல் இன்றும் கேலி செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு முறை இலங்கைக்குச் சென்று தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் குடும்பங்களைப் பார்த்தால் மது அரக்கனின் கோர உருவத்தை உணர்ந்து கொள்வார்கள். ஈழ நாட்டுத் தோட்டத் தொழிலாளர் நிலை உயர வேண்டுமானால் அங்கிருந்து மதுவரக்கனை அடியோடு ஒழிக்க வேண்டும்.


இந்த விவரங்களைப் பற்றியெல்லாம் விவரித்துக் கொண்டே தேயிலைத் தோட்டத்தையும் தொழிற்சாலையையும் எங்களுக்குக் காண்பித்த தொழிலாளர் நலஅதிகாரி திரு தனுஷ்கோடியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தேயிலைத் தோட்டத்திலிருந்து, ஏன்? நுவரேலியாவிலிருந்தே புறப்பட்டோம்.

*** *** ***

தேயிலைத் தோட்டத்தில் மட்டும் தமிழர்கள் இல்லை. இன்னும் பல இடங்களிலும் அவர்கள் இருக்கிறார்கள். ஈழத்தின் சிறப்புக்கு இன்று நேற்று அல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளாகவே தமிழர்கள் அரும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள் என்ற பேருண்மையைத் தெரிந்து கொள்வதற்காக நாளைய தினம் கண்டிக்குச் செல்வோம். (தொடரும்)



நவீன
மாய வித்தை!
லக்மி
டால்கம்
பவுடர்
டாடா தயாரிப்பு
லக்மி



# அது "கௌ & கேட்" பார்வை

குருகுருப்பான கண்கள், உறுதியான தேக அமைப்பு, நன்கு வளர்ச்சி பெற்ற எலும்புகளின்மேல் உள்ள வலு வான சதைப்பற்றுகளின் மூலம், நீங்கள் அது ஒரு "கௌ அண்ட் கேட்" குழந்தை என எப்பொழுதும் நிச்சயமாகச் சொல்லலாம். எலும்புகளுக்கும் சதை களுக்கும் நன்கு ஊட்டமளிக்கக்கூடிய ஓர் இயற்கை யான உணவு "கௌ அண்ட் கேட்" மிக எளிதில் ஜீரணம் ஆகக்கூடியது. எப்பொழுதும் குழந்தை குதூகலமாக வும், திருப்தியுடன் காணப்படும்.

உங்கள் குழந்தைக்கு "கௌ அண்ட் கேட்"டை வற்புறுத்திக் கேளுங்கள்.

5450

**COW & GATE MILK FOOD**

*The* FOOD *of* ROYAL BABIES



# நடமாடும் தெய்வத்தின் அடிச்சுவடுகள்

அண்ணா

ஆதிசங்கரரின் திரு அவதாரமே எனக் கருதிப் போற்றப்படுகின்றார் ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள். அவருடைய வரலாற்றையும் சநாதன தர்மத்துக்கு அவர் ஆற்றியுள்ள அரும் பெரும் பணிகளின் சிறப்பையும் சிறிய அளவிலாவது எடுத்துக் கூற வேண்டும் என்ற நோக்கத்துடன்* இப் புத்தகம் வெளியிடப் பட்டுள்ளது.

**'உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்து ளெல்லா முளன்'**

என்றவாறு இவருடைய உள்ளன்பும் ஒப்புயர்வற்ற தவ ஒழுக்கமும் பொதுநலச் சேவையும் மக்கள் அனைவருடைய உள்ளத்திலும் இவர் என்றும் இடங்கொண்டு விளங்கும்படி செய்துவிட்டது. மாசற்ற முறையில் திறமையுடன் மடத்தின் நிர்வாகம், தம்மை நாடி வரும் அன்பர்களிடம் காட்டும் ஆர்வம், நாள்தோறும் சந்திரமௌளீசுவர பூஜை, சாஸ்திர முறை சிறிதும் வழுவாது துறவறப் பண்பைப் பாதுகாக்கும் தவ வாழ்க்கை, இவை ஒவ்வொன்றிலும் அவர் கையாளும் வழி அவருக்கே உரிய வகையில் சிறப்புடன் விளங்குவதை அவரையறிந்தோர் அனைவரும் அறிவர்.

அவர் பீடத்தில் பதின்மூன்றாவது வயதில் அமர்ந்த நாள் முதல் புளியையும், மிளகாயையும் உப்பையும் விலக்கி உட்கொள்வது; ஒரு வேளை உணவு; சில சமயம் பச்சைப் பால் மட்டும்; சில சமயம் வில்வ இலையும் வேப்பிலைக் கொழுந்தும்; சில சமயம் மூன்று பிடி அன்னம் மட்டும்; தற்சமயம் எப்பொழுதாவது நெற்பொரி. இந்தமாதிரியான சொற்ப ஆகாரம்கூட இல்லாத உபவாச நாட்கள் தான் அதிகம். ஆகாரத்துக்குக் கால நியதி உண்டு; அது கடந்தால் உபவாசம்: நவராத்திரி ஒன்பது நாட்களும் முழுப் பட்டினி. பல வாரங்கள், மாதங்கள் தொடர்பாக மௌனம்; ஒவ்வொரு மூல நட்சத்திரத்தன்றும் எவரையும் நேரில் நிமிர்ந்துகூடப் பார்க்காமலும் எவர் கூறுவதையும் கேட்காமலும் அந்தர் முகமாய்க் காஷ்ட மௌனம். இரவு பதினொரு மணிக்கு முன் ஒருபோதும் சயனிப்பதில்லை. அப்போதும் தாம் அணிந்துள்ள ஒரே வஸ்திரத்தின் ஒரு பகுதியை வெறும் தரையிலோ ஒரு பலகையின் மீதோ விரித்துத் தலையணையேதுமின்றிக் கண்ணயர்வார். காலை நாலு மணிக்கு முன் எழுந்து உற்சாகமாய்க் காட்சியளிப்பார். இப்படிப் பட்டது அவருடைய தவ வாழ்க்கை.

அவர் இளமையில் திண்டிவனத்தில் ஆற்காடு அமெரிக்கன் மிஷன் உயர்தரப் பாடசாலையில் வாசித்த போது கிறிஸ்தவ விவிலிய நூலில் முதற் பரிசு பெற்றார். பள்ளிப் படிப்பை அதன்பின் சீக்கிரமே 1906-ம் ஆண்டில் விட்டுப் பால சந்நியாசியாகிக் காமகோடி பீடத்தில் பட்டம் சூட்டப் பெற்றார். 1915 வரை மடத்தின் நிர்வாகம் கோர்ட்டின் பாதுகாப்பில் இருந்தது. அவ்வாண்டுகள் தகுந்த ஆசிரியர்களுடைய உதவியால் வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்பதிலும் ஆராய்வதிலும் செலவிடப்பட்டன. பின்னர் மடத்தின் நிர்வாகத்தைத் தம்முடைய இருபத்தோராவது வயதில் ஏற்றுக் கொண்டார்.

சுவாமிகள் 1918-ம் ஆண்டு முதல் கதர் ஆடையே உடுத்தி வருகிறார். முரட்டுக் கதர் ஆடையே அவர் அதிகம் விரும்புவது. 1922ல் தனுஷ்கோடியில் நீராடியபோது மடத்துச் சிப்பந்தி ஒவ்வொருவருக்கும் இரண்டு ஜோடிக் கதராடை கொடுத்து ஆலைத் துணிகளைக் கடலில் எறிந்து விடும்படி கட்டளையிட்டார். சிப்பந்திகளுக்குக் கொடுக்க அன்று மதுரையிலிருந்து இருநூறு ஜோடிக் கதராடைகள் வரவழைக்கப்பட்டன.

1927 முதல் மடத்தின் குழுவினர் சென்ற இடமெல்லாம் நாய் ஒன்று பின் தொடர்ந்து கொண்டிருந்தது. மடத்தில் இடும் உணவைத் தவிர வேறு எந்த உணவையும் அது உட்கொள்ளாது. பக்த கோஷ்டியில் ஒன்றாக சுவாமிகள் அதைக் கருதி வந்தார். தினந்தோறும், 'நாய்க்கு ஆகாரம் கொடுத்தாயிற்றா?' என்று பரிவுடன் கேட்பார். சுவாமிகளைத் தரிசிக்காமல் அது ஆகாரம் எடுக்காது. என்றாவது மடத்தில் உணவு இடுவதற்கு மறந்து போனால் அது பட்டினியாகவே இருக்கும். சுவாமிகள் பல்லக்கில் எங்கேயாவது சென்றால் இது பல்லக்கின் கீழ் செல்லும். பக்தர்கள் சேவிக்க வந்தால் எட்டிப் போய் நிற்கும். இப்படிப் பல ஆண்டுகள் பலர் வியக்கும்படி வாழும் பேறு அதற்குக் கிட்டியதற்கு அதன் பூர்வ புண்ணியமும் சுவாமிகளுக்கு எல்லா ஜீவராசிகளிடத்துமுள்ள பெருங் கருணையுமே காரணமாகும்.

சுவாமிகள் 1933ம் ஆண்டு பரங்கிப் பேட்டைக்கு விஜயம் செய்தபோது சுவாமிகளின் தந்தையிடம் முன்னாட்களில் கல்வி பயின்ற பாவா மரக்காயர் என்னும் ஒரு முஸ்லிம் வியாபாரி கடற்கரையிலுள்ள தமது உப்பளத்திலும் வியாபார ஸ்தலத்திலும் சுவாமிகளுடைய காலடி படவேண்டுமென்று விரும்ப, அன்று மௌன தினமாயிருந்தும் கடற்கரையில் பத்து மைல்வரை அவருடன் நடந்து சென்று அவருடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்வித்தார். இது சுவாமிகளின்

---

★ நூலின் பெயர்: ஸ்ரீ ஜகத்குரு திவ்ய சரித்திரம்; தொகுத்தவர்: எஸ். சாம்பமூர்த்தி சாஸ்திரி; பிரசுரகர்த்தர்கள்: பி. ஜி. பால் & கம்பெனி, 4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை-1; பல படங்களுடன் நானூறு பக்கங்களுக்கு மேலுள்ள இதன் விலை ரூ. 5-0-0. இதன் விற்பனையால் கிடைக்கும் பொருள் காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் குறிப்பிடும் வகையில் பொதுநல சேவைக்கு உபயோகப்படும்.



விசால இருதயத்தையும், சமதர்சனத்தையும், அன்புக்கு எளிதில் கட்டுப்படும் இயற்கையையும் விளக்குகிறது.

திருவிடைமருதூருக்கு விஜயம் செய்தபோது வேதத்தைக் கற்றவர்களுக்கு ஊக்கம் அளிக்க விரும்பிக் 'கல் வைத்த வாரம்' எனும் பழைய கால முறைப்படி ஒரு அரிய பரீட்சையை நடத்திப் பொன் நாணயங்களும் ஆபரணங்களும் பரிசளிக்க ஏற்பாடு செய்தார். அதில்' தலை சிறந்து விளங்கிய அறுவர்க்கு இன்னும் விசேஷமான நன்கொடை கொடுக்க வேண்டு மென்று எண்ணியபோது கல் இழைத்த மோதிரங்களைத் தயாரித்துத் தருவதாய்ச் சில சிஷ்யர்கள் கூறினார்கள். ஆனால் அதே சமயத்தில் பரிசுகளை அளிக்க விரும்பிய சுவாமிகள் அங்கிருந்தவர்கள் அணிந்திருந்த ரத்தினம் பதித்த மோதிரங்களைக் கழற்றித் தங்கள் பெயரெழுதிய சீட்டில் வைத்து மடித்து ஒரு தட்டில் சேர்க்கும்படி சொன்னார். இருபத்தைந்து மோதிரங்கள் சேர்ந்தன. அவற்றில் ஆறு மோதிரங்களை எடுத்துப் பரிசளித்தார். மீதி யிருந்தவற்றை மடத்திலேயே வைத்திருந்து இன்னொரு சமயம் பரிசளிக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கொடுத்தவர்கள் வேண்டிக் கொண்டனர். ஆனல் சுவாமிகள் ஆறு மோதிரங்கள்தான் தேவை யென்றும், மீதியைச் சொந்தக்காரர்கள் திருப்பி யெடுத்துக் கொள்ள வேண்டு மென்றும் கூறிவிட்டார்.

வட இந்திய தீர்த்த யாத்திரையை 1933 முதல் 1939 வரை கைக்கொண்டார். சாலை மார்க்கங்களில் நடந்து செல்வதற்குரிய வழிகளைச் செவ்வனே கண்டு வர ஒரு வாலிபரை முன்னல் அனுப்பி வைத்தார். அவருக்கு ஏற்படுத்திய திட்டம் கண்டிப்பானது.அவர் காசிவரை நடந்தே செல்ல வேண்டும். தம் உணவைத் தாமே தயாரித்துக் கொள்ள வேண்டும். எவரிடமும் பணம் வெகுமதியாகப் பெற்றுக்கொள்ளக் கூடாது. உடல் நிலை காரணமில்லாது ஒரு ஊரிலும் ஒரு நாளுக்குமேல் தங்கக் கூடாது. தபால் கார்டில் காப்பியிங் பென்சிலால் தெளிவாக அன்றாடம் சென்ற ஊரைப் பற்றியும் பாதையைப் பற்றியும் சந்தித்த மனிதர்களைப் பற்றியும் எழுதியனுப்ப வேண்டும். இரும்புமுன் நன்றாக ஹிந்தி கற்றுக் கொள்ள வேண்டும். திரும்பி வரும்போது ரயிலில் வரலாம். இதனால் சுவாமிகள் செயலாற்றும் வகை நன்கு புலனாகின்றது. குறிப்பிட்ட வாலிபர் சென்று வந்த மார்க்கத்திலேயே பின்னர் கங்கா யாத்திரை ஏற்பாடாகிச் சிறப்புற நடைபெற்றது.


வட இந்திய யாத்திரையை 1939-ம் வருஷம் முடித்தபின் மடத்துக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தி மதப் பிரசாரம், சமூகத்தொண்டு இவைகளைச் செய்யவேண்டி மடத்தின் முத்திராதிகாரிகளின் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து முதன் முதலாகத் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒவ்வொரு கிராமத்திலும் அதை நிறுவத் தாமே கிராமம் கிராமமாகச் செல்லத் தொடங்கினர். இச் சங்கத்தின் நோக்கங்கள் : 1. தேவாலயக் கட்டடங்களின் மேல் செடிகள் வளராமல், கட்டடங்கள் பழுது படாமல் பாதுகாத்தல், 2. ஆலய நிர்வாகத்தில் சிரத்தையை வளர்த்தல், 3. ஏகாதசிதோறும் பஜனைகளும் புராணப் பிரவசனங்களும் ஏற்பாடு செய்தல், 4. பசுக்களை ரட்சித்தல், 5. மரம் வளர்த்தல், 6. குளங்களைத் தூர்வாரிச் சுத்தப் படுத்துதல், 7. ஏழைகளுக்கு உணவளித்தல், 8. மக்கள் சிக்கனமாகவும் தூய்மையாகவும் பிறர்க்கு உதவி புரிந்து வாழ்வதற்கு வழி வகுத்தல்.

பொதுநலச் சேவையின் முக்கியமான பகுதியாக நான்கு வருஷங்களுக்கு முன் கும்பகோணத்தில் புதியதொரு தொண்டர் சபை ஏற்பாடு செய்ததைக் குறிப்பிட வேண்டும். அநாதையாக இறக்கும் இந்துக்களின் சடலங்களை இந்து முறைப்படி ஸம்ஸ்காரம் செய்வது தான் அச்சபையின் நோக்கம். கிறிஸ்தவரோ, இஸ்லாமியரோ அநாதையாக இறந்தால், பிரேதத்தைத் தாமதியாமல் எடுத்துப் போய் முறைப்படி அடக்கம் செய்யச் சங்கங்கள் இருக்கின்றன. அதற்கெனச் சிலரால் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்துக்களுக்கு இவ்வித ஏற்பாடு எதுவுமில்லாததைக் கண்டு வருந்தியே இந்தச் சபையை வழிகாட்டியாக ஏற்படுத்தினர். தெருவோரங்களிலும், ஆஸ்பத்திரிகளிலும் இறக்கும் இந்து அநாதைப் பிணங்கள் கேட்பாரற்று நகரசபை வண்டிகளில் எடுத்துச் செல்லும்படி கொடுக்கப் படுகின்றன அல்லவா? அதைத் தடுக்கச் சுவாமிகள் காட்டி யிருக்கும் வழி நாடெங்கும் பின்பற்ற வேண்டியதாகும்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் மூதுரையைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பதுதான் சுவாமிகளது உபதேசமாகும்.


எல்லோருக்கும் தெரியும் –
ப்ரூக் பாண்ட் தேயிலை காற்றுப்புகாமல் பாக் செய்யப்படுவதால் அதுகலப்பற்று,களங்கமற்று சுத்தமாகக் கிடைக்கிறது
ஒவ்வொரு ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டிலிருந்தும் உங்களுக்கு அதிகப்படியான, ருசியான தேநீர் கிடைக் கிறது
மற்றெந்த தேயிலையை விட ப்ரூக் பாண்ட் தேயிலையே அதிகமாக விற் பனையாகிறது
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள் !

# உங்கள் அழகை அதிகரிக்கிறது பாதுகாக்கவும் செய்கிறது!



அற்புத நறுமணமூட்டப்பட்ட சார்மிஸ் ஸ்நோ உங்கள் சருமத்தை அழகுறச் செய்கிறது, பாதுகாக்கிறது. எல்லா பருவ காலங்களிலும் சருமத்தை மிருதுவாகவும், வெல்வெட் போல வழவழப்பாகவும் வைக்கிறது. பவுடருக்கு ஆதாரமானது. எண்ணைப் பசையில்லாதது. சார்மிஸ் ஸ்நோ சொற சொறப்பும், வரிகளும், கோடுகளும், புண்களும் ஏற்படாமல் சிறந்த முறையில் தடுக்கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்புகளினின்றும் பாதுகாக்கிறது.





ஒரு கால்கேட் உயர்தர சரக்கு

# சார்மிஸ் ஸ்நோ

CSG/3

**சார்மிஸ் பலகாரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?**



# மாலவல்லியின் தியாகம்

அத்தியாயம் 20

## திருபுவனியின் துறவு

பழையாறை நகருக்குச் சமீபமாக உள்ள நந்திபுர விண்ணகரில், இடங்காக்கப் பிறந்தார் என்ற பட்டப் பெயருள்ளவர்களின் வம்சம் மிகப் பெருமை பொருந்தியது. பூர்விக சோழ அரசர்களின் ஆதரவில் சிறு சிறு ஊர்களைக் காக்கும் நிர்வாகிகளாக இருந்த அவ்வம்சத்தினரின் பெருமை பல்லவர்களின் ஆட்சி காலத்திலும் உன்னத நிலை குறையாதிருந்தது. அப்பொழுது அந்நந்திபுர நகரம் பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தாரின் நிர்வாகத்தில் இருந்தது. அவர் அப்பொழுது பல்லவப் பேரரசின் அபிமானத்துக்கும் தஞ்சையை ஆண்ட முத்தரையரின் அபிமானத்துக்கும் பாத்திரமானவராக இருந்தார். அவர் சைவ மதத்தைச் சேர்ந்தவர். தரும சிந்தையுள்ளவர். பழையாறை நகரை ஆண்ட குமாராங்குச சோழருக்கும் உற்ற தோழராய் இருந்து பணியாற்றியிருக்கிறார்.

உன்னத நிலையில் பெருமையோடு வாழ்ந்து வந்த அவருக்கு அவருடைய குடும்பத்தில் சோகத்தை விளைவிக்கக் கூடிய சம்பவம் ஒன்று ஏற்பட்டிருந்தது. நெடுநாட்களுக்கு முன் குழந்தைப் பருவத்திலிருந்த அவருடைய ஒரே குமாரியாகிய திருபுவனி என்பவளைக் கொள்ளைக்

கி.ரா.கோபாலன்

கூட்டத்தார் கடத்திக் கொண்டு போய் விட்டனர். அருமையாக வளர்த்த பெண் குழந்தையாகையால் அவளைக் கண்டு பிடிப்பதற்காக அவர் எவ்வளவோ முயற்சிகளெல்லாம் செய்தார். ஒன்றும் பலிக்கவில்லை. அவருடைய துயரமும் தணிவதாயில்லை. நாளுக்கு நாள் இதே நினைவாகப் பித்துக்கொண்டவர் போலாகிவிட்டார். அவருடைய குமாரனாகிய பொற்கோம இடங்காக்கப் பிறந்தார் தன் தகப்பனார் மனத்தைச் சாந்தியுறச் செய்வதற்காக எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொண்டும் பலனில்லாமல் போயிற்று.

பதினைந்து வருடங்கள் கழித்த பின்பும் திருபுவனியைப் பல இடங்களிலும் தேடிப் பார்க்கும் முயற்சியை அவர்கள் நிறுத்த வில்லை. அவருடைய குமாரன் எப்படியாவது திருபுவனியைத் தேடிக்கண்டு பிடித்து விட்டால் தன் தகப்பனாரின் மனம் நேராகி மனச் சாந்தியோடு இறப்பார் என்றெண்ணித் திருபுவனியைத் தேடுவதில் தீவிரமாகவே முயன்றான். அதிர்ஷ்டவசமாக, காவிரிப் பூம் பட்டணத்தில் அவள் இருப்பதாகப் பொற்கோம இடங்காக்கப் பிறந்தார்க்குத் தகவல் கிடைத்தது. உடனே அவனது ஏவலாட்கள் தாமதிக்காமல் சென்று ஒரே இரவோடு இரவாகத் திருபுவனியை நந்திபுர நகருக்குக் கொண்டு வந்து விட்டனர்.

நெடுநாட்களுக்குப் பின்னால் தன் சகோதரியைக் கண்ட பொற்கோமன் பேரானந்தம் அடைந்து குதித்தான். பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தாரும் பெருமகிழ்ச்சியில் மூழ்கினார். அன்று இடங்காக்கப் பிறந்தாரின் மாளிகை மாத்திரம் குதூகலத்தில் மூழ்கவில்லை. அந்த ஊரே அந்த அதிசயத்தைப் பேசி வியப்பும் குதூகலமும் அடைந்திருந்தது. பழையாறையிலிருந்தும்



தஞ்சையிலிருந்தும் பலர் இந்த மகிழ்ச்சிச் செய்தியைக் கேட்டு இடங்காக்கப் பிறந்தாரைப் பார்க்க வந்தனர்.

மாளிகையில் எப்பொழுதும் குதூகலமும் விருந்தும்தான். தம் ஒரே குமாரி அகப்பட்டபின் அவளுடைய கலியாணத்தைப் பற்றிய பேச்சுக்கள் எழும் அல்லவா? பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தாரும் அவருடைய மகனும் திருபுவனி இவ்வளவு அழகோடு விளங்குவாள் என்று நினைக்கவே இல்லை. அவளுடைய அழகு அவளை ஒரு சாதாரண மனிதனுக்கு மனைவியாக்கக் கூடிய நிலையில் இருப்பதாக அவர்கள் நினைக்கவில்லை. அவளுக்கு ஏதேனும் பெரிய ராஜ வம்சத்தில்தான் கணவனைத் தேட வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். அவளுடைய அழகில் எந்த அரச குமாரனும் மயங்கி விழுவான் என்று அவர்கள் பூரணமாக நம்பினர். அவர்கள் எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். நெடுநாட்களுக்குப் பிறகு தன் வீட்டையடைந்த திருபுவனியின் நிலைமையையும் தெரிந்து கொள்ள வேண்டாமா?

அந்தப் பெரிய மாளிகையில் உல்லாசமான, ஆடம்பரமான அந்தப்புரத்தில்தான் அவள் இருந்தாள். ஆனால் அந்த அறை எவ்வளவு அலங்கார சாதனைகளோடு விளங்கியதோ அதற்குத் தக்கபடி அவள் இல்லை. துறவற நிலையிலிருந்த பெண்ணை ஒரு அழகான மாளிகையின் அந்தப்புரத்தில் கொண்டு போய் விட்டால்? துவராடையோடும், பிரிபிரியாக இருந்த தலைக் கேசத்தைக் கொண்டையிட்ட வண்ணமும் தான் அவள் விளங்கினாள். அவள் மனம் எவ்வித ஆடம்பரக் காட்சியிலும் லயிக்கவில்லை. அவளை வந்து பலர் பார்த்தபோது அவள் ஒருவரோடும் பேசவில்லை. பேசாமடந்தை போல்தான் இருந்தாள்.

அந்த மாளிகையிலுள்ள பலர் அவளோடு பேசிய போதும் அவள் அவர்களோடு பேசவில்லை. அவளுக்காக — அவள் அணிந்து கொள்வதற்காகக் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த ஆடைகளும் ஆபரணங்களும் அப்படியப்படியே வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே இருந்தன. இந்த ஆடை ஆபரணங்களை அணிந்து கொள்ளும்படி அவளை எவரும் வற்புறுத்தவில்லை. தீவிர துறவறத்திலேயே நிலைத்து நின்ற அவள் புத்தி அந்த மாளிகையில் உள்ள பழக்க வழக்கத்தினால் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடும் என்றும் அவளிடம் பிடிவாதமாக எதையும் சொல்ல வேண்டாமென்றும், பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தாரும், அவருடைய மகனும் யாவருக்கும் கட்டளை இட்டிருந்தனர். அதோடு அவள் அந்த மாளிகையிலிருந்து வெளி போகாத வண்ணம் பலமான கட்டுக் காவலை அதிகப்படுத்தியிருந்தனர். திருபுவனி சகல வசதிகளும் நிறைந்த அலங்காரமான வீட்டில் இருந்தாலும் ஏதோ சிறையிலிருப்பவள் போல்தான் கட்டுக் காவலோடு இருந்தாள். எப்படி இருந்தால் என்ன? அவளைப் பிறர் ஏதேனும் கேட்டுத் தொந்தரவு செய்யாது இருந்தால் சரிதான் என்று நினைத்தாள். அவளுக்காக வரும் ஆகாரத்தில் பிடித்ததைக் கொஞ்சமாக உண்டு, மற்ற நேரங்களில் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலும், குழப்பத்திலும் இருப்பவள் போல்தான் காணப்பட்டாள். அடிக்கடி பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தாரும் அவருடைய மகனும், மனைவியும் வந்து அன்பாக, 'சாப்பிட்டாயா? தூங்கினாயா? உனக்கென்ன வேண்டும்? ஏது வேண்டும்?" என்று விசாரித்து விட்டுப் போவார்கள். திருபுவனியும் அவர்களுக்குச் சுருக்கமாக அன்போடு பதில் சொல்லுவாள். அவளுக்குப் பிடிக்காதவைகளை வேண்டாம் என்று கூறி விடுவாள். அதற்குமேல் யாரும் அவளைக் கிளறிக் கேட்பதுமில்லை.




அன்றைய தினம் தஞ்சை நகரிலிருந்து முத்தரையரின் அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார் விஜயம் செய்திருந்தார். அமைச்சருக்கு உரிய உபசாரங்களெல்லாம் இடங்காக்கப் பிறந்தாரின் மாளிகையில் மிகச் சிறப்பாகத்தான் நடைபெற்றன. புலிப்பள்ளி கொண்டாருக்கு நெடுநாட்கள் வரையில் காணாமல் போய்க் கிடைத்த இடங்காக்கப் பிறந்தாரின் அருமை மகளைக் காண வேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்தது. இடங்காக்கப் பிறந்தாரும் விருந்துக்குப் பின் அவரைத் திருபுவனியின் அறைக்கு அழைத்துச் சென்று காட்ட நினைத்தார்.

திருபுவனி தஞ்சையிலிருந்து அமைச்சர் அந்த மாளிகைக்கு விஜயம் செய்திருப்பதையும் தன்னைப் பார்க்க நினைப்பதையும் அறிந்து கொண்டாள். அவள் ஏதோ சட்டென்று முடிவுக்கு வந்தவள் போல் தன் சீவர ஆடைகளைக் களைந்து பட்டாடையையும், ஆபரணங்களையும் அழகுற அணிந்து கொண்டாள். அப்பொழுது அவளுடைய அழகும் உருவ

## உலகில் முதல் ஸ்தானம்

உலகத்தில் உள்ள மலைகளுக்கெல்லாம் மாமலையாகத் திகழும் இமய மலையின் பெருமையை அறியாதவர்கள் இருக்க முடியாது. ஈடு இணையின்றிப் பிரம்மாண்டமாக வானளாவி நிற்கும் இமயமலை பாரத நாட்டின் வட எல்லைக்குப் பாதுகாப்பாக இருந்து வருகிறது. 1500 மைல்களுக்கு



மேல் நீளமும் 250 மைல்கள் அகலமும் உள்ள இமயத்தில் அலை அலையாக நிற்கும் பனிமலைகளின் வரிசைகள் கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்விதம் உருவத்திலும் வனப்பிலும் விருட்ச வகைகளிலும், மகோன்னதமான சிகரங்களின் கம்பீரத்திலும் மற்றும் பல அம்சங்களிலும் இமய மலை உலகில் உள்ள மலைகளிலே முதல் ஸ்தானம் வகிக்கிறது. மகாகவி காளிதாசன் வர்ணித்துள்ள வற்றாத பொக்கிஷமாக விளங்கும் தேவதாரு மரங்கள் இமயத்தில் உள்ள சிகரங்களைப் போல் வானோங்கி நிற்பதும் எந்த மலையிலும் காணக்கிடைக்காத காட்சியாகும்.

முமே வேறு விதமாக மாறின. அவள் திடீரென்று இப்படி மனம் மாறி அலங்காரங்கள் செய்து கொண்டதைப் பார்த்து அம் மாளிகையிலுள்ள எல்லோரும் பெரு மகிழ்ச்சியடைந்தனர். சிவர ஆடை அணிந்திருந்த போதே அவள் அழகியாக விளங்கினாள். அதிலும் இப்பொழுது பொன்னுடையும் பூஷணமும் அணிந்துகொண்ட பின் அவள் அழகைப் பற்றி விவரித்துச் சொல்ல வேண்டுமா?

விருந்துக்குப் பின் திருபுவனியைப் பார்க்க வந்த தஞ்சை அமைச்சர், புலிப்பள்ளியார் அப்படியே மதிமயங்கி நின்று விட்டாரென்று தான் சொல்ல வேண்டும். கண நேரத்தில் அவர் மனத்தில் ஏதோ ஆசை எழுந்தது. எல்லோரும் அவ்வறையை விட்டு வெளியே வந்து ஆசனத்தில் அமர்ந்ததும், புலிப்பள்ளி கொண்டார், கனைத்துக் கொண்டே, "இடங்காக்கப் பிறந்தாரே! நீங்கள் மிகவும் பாக்கியசாலி. நான் கூட நினைத்தேன், ஒரு பெண்ணை இழந்த துயரத்தை நெடுநாள் வரையில் இம் மனிதர் பாராட்டிக் கொண்டிருக்கிறாரே என்று. உண்மையில் இவ்வளவு லட்சணமான ஒரு பெண்ணை இழந்த ஒரு மனிதரின் மனம் என்ன பாடுபடும் என்பதை இப்பொழுதுதான் உணர முடிந்தது. உம்முடைய மகள் உமக்குத் திரும்பக் கிடைத்த வரையில் நீங்கள் பெரிய பாக்கியசாலிதான். தக்க பருவத்திலிருக்கும் இவளுடைய விவாகத்தைப் பற்றிய கவலை உங்களுக்கு ஏற்படாமல் இருக்காது. இது விஷயமாக இனித் தாமதிக்கக் கூடாது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இவளுக்குத் தகுந்த கணவனை நீங்கள் எங்காவது பார்த்து வைத்திருப்பீர்கள்?" என்றார்.

"பார்த்துக் கொண்டிருக்கிறேன். எல்லாம் நம்முடைய நிலைக்குத் தகுந்தாற் போல அகப்பட வேண்டாமா? அதோடு அவளுடைய அழகுக்குத் தகுந்த கணவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா?" என்றார் இடங்காக்கப்பிறந்தார்.

"என்னுடைய யோசனையை நீங்கள் அங்கீகரிப்பதாயிருந்தால் சொல்லுகிறேன்" என்றார் புலிப்பள்ளி கொண்டார், சிறிது தயக்கத்தோடு.

"இவ்விஷயத்தில் உங்களைப் போன்றவர்களின் யோசனையைக் கேட்கத்தானே நான் விரும்புகிறேன்? தஞ்சையர் கோனுக்கு அமைச்சராகத் திகழும் தங்களுடைய யோசனைப்படி நான் இக்காரியத்தைச் செய்து முடித்தால் அது சிறந்ததாகத்தானே யிருக்கும்?" என்றார் இடங்காக்கப் பிறந்தார்.


"நான் மனத்தைவிட்டுப்பேசுகிறேன். என் மகன் கோளாந்தகனைத் தங்களுக்குத் தெரியாமல் இருக்காது. அவன் மிகவும் புத்திசாலி. அதோடு அவன் அழகைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டாம். இப்பொழுது கலங்கமாலரையர் சேனாபதி பதவியை விட்டு விலகி புத்த பிக்ஷுவானபின் என் மகன் தான் சேனாநாயகன். அவன் சேனாநாயகனான பின் தஞ்சை மன்னரை அலட்சியமாக நினைத்து வந்த கொடும்பாளூரார்களும் நடுங்குகின்றனர். இதையெல்லாம் நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ளக் கூடாது. நானும் அவனுடைய அழகுக்கும் மதிப்புக்கும் தக்கபடி ஒரு பெண்ணை நெடுநாட்களாகப் பார்க்கிறேன்—கிடைக்கவில்லை — நல்ல வேளையாக இங்குவந்து உமது பெண்ணைப் பார்த்த பிறகு என் மனக் கவலை ஒருவிதமாகத் தீர்ந்தது. இதற்கு மேல் நான் உங்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டாம். உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல..." என்றார்.

அதைக் கேட்டதும் இடங்காக்கப் பிறந்தார் பேரானந்தம் மேலிட்டவராய், "இதைப் பற்றி இனி யோசிப்பதற்கு இடமே இல்லை. உங்கள் சம்பந்தம் எனக்குக் கிடைப்பது பெரும் பாக்கியம்


LUX
TOILET SOAP
LUX
TOILET SOAP
LUX

அல்லவா? தங்கள் புதல்வனைப் பற்றி நான் மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். நானே இதுபற்றித் தங்களிடம் பேசலாமா என்று யோசித்து மனம் குழம்பி இருந்தபோது தாங்களே தங்கள் விருப்பத்தைக் காட்டியது ஈசன் அருள் தான். அதோடு இச் சுப காரியம் சீக்கிரமே முடிவதற்கு அனுகூலமாக என் மகளும் தன் சீவர ஆடைகளையெல்லாம் களைந்து பொன்னுடை அணிந்து கொண்டாள் போலிருக்கிறது'' என்றார் மிகுந்த மகிழ்ச்சியோடு.

''ஒரு பெரிய சுப காரியம் நடக்க வேண்டுமானால் அதற்குமுன்னால் நடப்பவைகள் எல்லாம் சுபமாகத்தான் முடியும். இன்மேல் தாங்கள் இது விஷயமாக ஒரு நல்ல நாளைப் பார்த்து மங்களகரமாக இக்காரியத்தை முடித்து



விட வேண்டியதுதான்''என்றார்தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார்.

இடங்காக்கப் பிறந்தாரும் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சீக்கிரமாகவே செய்வதாகச் சொன்னார்.

புலிப்பள்ளி கொண்டார் இடங்காக்கப் பிறந்தாரிடம் விடைபெற்றுக் கொண்டு தஞ்சைக்குப் பயணமானார்.

தஞ்சையமைச்சர் புலிப்பள்ளிகொண்டார் தன் மகன் கோளாந்தகனுக்குத் திருபுவனியைத் திருமணம் செய்து வைக்க விரும்பியது பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தார்க்கும், அவர் மகளுக்கும் பெருத்த ஆனந்தத்தைக் கொடுத்தது. அவர்கள் எண்ணியபடி தங்கள் தகுதிக்கேற்ற சம்பந்தம் கிடைத்ததில் பெருமை அடைந்தனர். சோதிடரைக் கூப்பிட்டு வந்து திருமணநாளைக் கணிக்க ஏற்பாடு செய்தனர்.


சில நிமிட நேரத்துக்குள் இவ்விவாக விஷயம் இடங்காக்கப் பிறந்தாரின் மாளிகை முழுவதும் பரவியது. இச் செய்தி திரிபுவனியின் செவிகளில் மட்டும் விழாமலிருக்குமா? இதைக் கேட்டதும் ஆச்சர்யமோ திகிலோ அவள் அடைந்து விடவில்லை. அவள் சட்டென்று எழுந்து தன் பட்டாடைகளையும் ஆபரணங்களையும் மூலைக்கொன்றாகப் போட்டு விட்டுச் சீவர ஆடையை எடுத்து உடுத்திக் கொண்டாள் என்று அறிந்ததும் குதூகலத்தில் திளைத்துக் கொண்டிருந்த பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தாருடைய மனமும் அவருடைய மகளின் உள்ளமும் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கின. யாவரும் திகிலும் குழப்பமும் அடைந்தவர்களாயினர். திடீரென்று அவள் பட்டாடைகளை அணிந்து கொள்ள விரும்புவானேன்? அவைகளைக் களைந்தெறிந்து விட்டு மறுபடியும் சீவர ஆடைகளைப் புனைந்து கொள்வானேன்? அவளுக்கு ஏதேனும் பயித்தியமா? அல்லது வேண்டுமென்றே அப்படிச் செய்திருப்பாளோ? பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தார் இனி மேலும் பொறுமையாக இருக்க விரும்பவில்லை. அவர் தஞ்சை மந்திரியின் மகனுக்குத் திருபுவனியை மணம் செய்து கொடுப்பதாக வாக்குறுதியளித்து விட்டார். இந்நிலையில் அவள் மறுபடியும் பிக்ஷுணிக் கோலம் பூண்டு நின்றால் அதை என்னென்று சொல்வது? 'என் மகள் மறுபடியும் பிக்ஷுணியாகி விட்டாள். உங்கள் மகனைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டாள்' என்று சொல்வதா? இடங்காக்கப் பிறந்தார் சொன்ன வாக்குறுதி தவறி விட்டாரென்று அமைச்சர் புலிப்பள்ளி கொண்

டார் நினைக்க மாட்டாரா? இதனால் பெரிய மனிதரின் விரோதத்தை யல்லவா சம்பாதித்துக் கொள்ள நேரும்? இப்படியே அவர் தம் மகளையும் அவள் அபிப்பிராயத்துக்கே விட்டுக் கொடுத்துக் கொண்டே போனால் அதற்கொரு முடிவு வேண்டாமா?

இனிமேல் திருபுவனியின் விருப்பத்துக்கேற்றபடி நடந்து கொண்டே போனால் எல்லாம் விபரீதமாகவேதான் முடியும் என்று அவருக்குத் தோன்றியது. உள்ளபடி அவள் மன நிலையை யறிந்து அதை மாற்றுவதற்குப் பல வழிகளிலும் தீவிர முயற்சி யெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முடிவுதான் செய்தார். அவர் பலவிதமாக எண்ணமிட்டு மனம் குழம்பி உட்கார்ந்திருந்த போது ராஜ பரிவாரங்கள் சூழ அவர் வீட்டுக்கெதிரே ஒரு பல்லக்கு வந்து நின்றது. அந்தப் பரிவாரங்களின் உடை அலங்காரங்களிலிருந்து அந்தப் பல்லக்கு பழையாறை நகரிலிருந்துதான் வந்துள்ள தென்பதை அறிந்து கொண்ட அவர் பரபரப்போடு எழுந்து சென்றார்.

**ப**ல்லக்கிலிருந்து அரச குமாரிக்குரிய ஆடையாபரணங்கள் அணிந்த யுவதி ஒருத்தி இறங்கிப் புன்முறுவலோடு இடங்காக்கப் பிறந்தாருக்கு வணக்கஞ் செலுத்தினள். பழையாறை நகர அரச குமாரி அருந்திகைப் பிராட்டி என்றோ ஒரு நாள் தம் மாளிகைக்கு வருவாள் என்று இடங்காக்க பிறந்தார் எதிர் பார்த்ததுதான். ஆனால் முன்னறிவிப்பேதுமின்றி அன்று அவள் வந்தது அவருக்குச் சிறிது ஆச்சரியத்தைத்தான் அளித்தது. அவர் மிக்க பணிவோடு சோழ அரசகுமாரி அருந்திகையை உபசரித்து அழைத்துச் சென்றார். அருந்திகை அந்த மாளிகையின் அழகான சபைக் கூடத்திலிருந்த ஆசன மொன்றில் கம்பீரமாக அமர்ந்து, "தங்கள் புதல்வியாரைத் தாங்கள் மறுபடியும் அடைந்தது எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் அவள் இன்னும் புத்தபிக்ஷுணிக் கோலத்திலேயே இருக்கிறாள் என்று கேள்விப்பட்டதும் என் மனத்துக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. நெடுநாள் வரையில் அனாதை போல் எங்கோ இருந்த அவள் புத்த பிக்ஷுணியாகிவிட்டதில் ஆச்சரியமில்லை. ஆனால் இங்கு இம் மாளிகைக்கு வந்ததும் அவள் தன் கொள்கைகளை மாற்றிக் கொண்டிருந்தால் மிக நன்மையாக இருக்கும். தாங்கள் அவள் மனத்தை மாற்ற முயற்சி எடுத்துக் கொள்வது நல்லதுதான். இளம் பெண்களுக்குத் துறவறம் ஏற்றதில்லை. வயதான உங்களுடைய மனம் சாந்தியடைவதற்காயினும் அவள் தன் கோலத்தை மாற்றிக் கொள்வது தான் சிறந்தது" என்றாள்.

இடங்காக்கப் பிறந்தார் மிகவும் துயரம் நிறைந்த குரலில் பேசினார்: "என்ன செய்வது? என்னால் இயன்ற வரையில் முயற்சி செய்கிறேன். இன்று தஞ்சை மன்னரின் அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார் இங்கு விஜயம் செய்திருந்தார். அந்தச் சமயத்தில் அவள் திடீரென்று மனம் மாறி நல்லாடை ஆபரணங்களெல்லாம் அணிந்து கொண்டாள். அவளுடைய எல்லையற்ற பேரழகைக் கண்டு அவரே வியந்து விட்டார். அவராகவே தம் மகனுக்கு j அவளை



மணம் முடித்து வைக்க வேண்டுமென்று என்னை வேண்டிக் கொண்டார். எனக்கும் அது மகிழ்ச்சியாகவும் சம்மதமாகவும் பட்டதால் நானும் அவருடைய விருப்பத்துக் கிணங்கி விவாகத்துக்குரிய நன்னாளை பார்க்கும்படி சோதிடருக்குக் கட்டளையிட்டு விட்டேன்.

"ஆனால் துரதிர்ஷ்டவசமாக மந்திரியார் சென்றவுடனே திருபுவனி தன் ஆடை அலங்காரங்களைக் களைந்து எறிந்து விட்டு மறுபடியும் சீவர ஆடையைப் புனைந்து கொண்டிருக்கிறாள். எல்லாம் எனக்குத் தரும சங்கடமான நிலையாகத் தான் முடிந்திருக்கிறது. அவளுடைய மனோ தருமம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. ஒரு வேளை அவள் சித்த சுவாதீனமற்றவளோ என்று நினைக்கும்படியாகத் தான் இருக்கிறது. எப்படியும் அவள் மனத்தை மாற்ற நான் தீவிர முயற்சியெடுத்துக் கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன். அதிலும் தாங்கள் நல்ல சமயத்தில்தான் வந்தீர்கள். எப்பொழுதுமே பெண்கள் பெண்களின் வார்த்தைகளுக்குத்தான் அதிகமதிப்புக் கொடுப்பார்கள். நீங்கள் அவளோடு பழகி அவளுக்கு நல்உபதேசங்கள் செய்து அவள் மனத்தை மாற்றுவீர்கள் என்று நம்புகிறேன்" என்று வேண்டிக் கொண்டார்.


பழையாறை அரசகுமாரி அருந்திகை, "நீங்கள் சொல்வதைக் கேட்டால் எனக்கு விநோதமாக இருக்கிறது. நீங்கள் ஒன்று செய்திருக்கலாம். துறவறத்தில் பற்றுள்ள அவள் மனம் சட்டென்று திரும்புவது சிறிது கடினம். நீங்கள் அதற்குள் அவள் சம்மதத்தைப் பெறாமல் விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ததினால்தான் அவள் மனம் வருத்தம் கொண்டு மறுபடியும் துறவற ஆடையை அணிந்து கொள்ள முற்பட்டிருக்க வேண்டும். போகட்டும். இப்பொழுது நான் அவளைப் பார்க்கப் போகிறேனல்லவா? இந்தச் சமயத்தில் அவள் மனத்தை மாற்ற என்னால் முடிந்ததை யெல்லாம் செய்கிறேன்" என்றாள். இதைக் கேட்டதும் இடங்காக்கப் பிறந்தார் சிறிது மன அமைதியடைந்தவராய் அவளை அழைத்துக்கொண்டு திருபுவனி இருந்த அறைக்குச் சென்றார்.

அந்த அறையிலிருந்த திருபுவனி சாளரத்தின் ஓரமாக நின்று வெளியே பார்த்தவண்ணம் ஆழ்ந்த சிந்தனையோடு நின்றுகொண்டிருந்தாள். இடங்காக்கப் பிறந்தாரோடு அவ்வறையில் நுழைந்த அருந்திகைப் பிராட்டி பிக்ஷுணிக் கோலத்திலிருந்த திருபுவனியின் முகத்தைப் பார்த்ததும் அப்படியே திகைப்படைந்து நின்று விட்டாள். திருபுவனியும் அருந்திகையைப் பார்த்தவுடன் மிகத் திகைப்படைந்தவள் போல் அப்படியே நின்று விட்டாள். (தொடரும்)

<u>அருள்வாக்கு</u>

பிரியம் எதனால் உண்டாகிறது! இரண்டு என்னும் நினைவினால் தான். நமக்கு அந்நியரான ஒருவர் என்று நினைப்பதனால் தான் பிரியமும், அவர் பிரிவால் துக்கமும் உண்டாகின்றன. அவரே நாமாகி விட்டால் பிரிவே இல்லை, துக்கமே இல்லை.

**ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்**



# ஹோல்டான், பஞ்சவடி!

விஷ்ணு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

“அடடா! மழையில் ரொம்ப நனைந்து போய் விட்டீர்களே! உள்ளே வாருங்கள்!'' என்று அன்புடன் அழைத்தாள் திலோத்தமா.

சிவராமன் அவளைப் பின் தொடர்ந்து அறைக்குள் சென்றான். அவள் அவனுக்கு உட்கார ஒரு நாற்காலியைக் காட்டினாள். பிறகு ஒரு உலர்ந்த துண்டு கொண்டு வந்து உடல் துவட்டிக் கொள்ளக் கொடுத்தாள். உடம்பைத் துடைத்துக் கொண்டு துவாலையைத் திருப்பிக் கொடுத்தவன், “உங்களுக்கு ரொம்பச் சிரமம் தந்து விட்டேன். மன்னிக்க வேண்டும்!'' என்றான் மரியாதையாக.

அவள் கவனம் அவன் பேச்சில் எங்கே சென்றது? கலைந்து முன் நெற்றியில் வந்து விழுந்திருந்த அவனது அழகிய கிராப்புத் தலையை அல்லவா சுற்றிச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது! தன் மனத்தில் தனக்கென்று எத்தகைய இளைஞனைக் கற்பனை செய்து வைத்திருந்தாளோ, அவனே அல்லவா அவள் கண்களெதிரே நின்று கொண்டிருந்தான்! அப்படியிருக்கும் பொழுது ஒரு பெண்ணுக்குப் பேசத் தோன்றுமா? வாய் திறவாமல் விழுங்கி விடுபவள் போல் அவனையே மெய்ம்மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் பேசாமல் இருப்பதைக் கண்ட சிவராமனுக்கு என்னவோ போலிருந்தது. அவளிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று அவனுக்குப் புரியவில்லை. உள்ளே நுழையும் பொழுது, நல்ல வேளையாக அவன் வாசலில் ஒரு போர்டு மாட்டியிருந்ததைக் கவனித்திருந்தான். அதில் 'டாக்டர் லக்ஷ்மி சங்கர்' என்று எழுதியிருந்தது. எனவே, “ஆமாம், நீங்கள்தான் டாக்டர் லக்ஷ்மி சங்கரோ!'' என்று அவளைப் பார்த்து வியப்புடன் கேட்டான்.

அதைக் கேட்டு அவள் முறுவலித்தாள். சிவராமனுக்குத் தன்மீது முல்லைப் பூக்கள் பொழியப்படுவது போன்ற பிரமை உண்டாயிற்று.

“இல்லை. அவர் என் தந்தை! என் பெயர் திலோத்தமா!'' என்றாள் அவள்.

“திலோத்தமா! திலோத்தமா! ஆகா! எத்தனை அழகான பெயர்! என்னுடைய பெயர் வந்து வந்து...சிவராமன்!'' என்றான் அவன் திக்கிக்கொண்டே.

“ஓகோ! நீங்கள் தானா சிவராமன்?'' என்றாள் அவள் எல்லாம் தெரிந்தவள் போல்.

“ஆமாம், நான் தான்! உங்களுக்கு என்னை எப்படித் தெரிந்தது?''

“வைதேகி சொல்லியிருக்கிறாள். இன்று நீங்கள் அவள் வீட்டுக்குத்தானே விருந்துக்குப் போகிறீர்கள்?''

“ஆமாம். உங்களுக்கு வைதேகியைத் தெரியுமா?'' என்று கேட்டான்.

“தாராளமாக. நாங்கள் இரண்டு பேரும் சின்னக் குழந்தைகளாக இருந்த காலத்திலிருந்தே இணைபிரியாத் தோழிகள்!''

“அப்படியா? வைதேகி இதுவரை என்னிடம் உங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லையே!''

“சொல்லச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது. அட! மழை நின்று விட்டாற் போலிருக்கிறதே! நீங்கள் புறப்பட வேண்டாமா? வைதேகி உங்களுக்காகக் காத்திருப்பாளே!'' என்று நினைவுறுத்தினாள் அவள்.

“ஆமாம்!'' புறப்பட மனமில்லாமலே சிவராமன் பேசினான்:-“புறப்பட வேண்டியது தான். நான் வரட்டுமா? என் காரணமாக உங்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு என்னை மன்னித்து விடுங்கள்!''

“என்ன பெரிய சிரமம் தந்து விட்டீர்கள், என்னிடம் நீங்கள் மன்னிப்புக் கோருவதற்கு?'' என்றாள் திலோத்தமா.

வாசற்படி தாண்டும் பொழுது சிவராமனுக்கு என்ன தோன்றிற்றோ, என்னவோ? திலோத்தமாவைத் திரும்பிப் பார்த்து, “டாக்டரின் ஆஸ்பத்திரி எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டான்.

“மாம்பலத்தில்!''

“எப்பொழுது வீட்டுக்குத் திரும்புவார்?''


“இரவு ஒன்பதரை மணி சுமாருக்கு!''

“சரி! நான் வரட்டுமா?''

திலோத்தமாவின் மீது ஒரு அன்புப் பார்வையை அநாயாசமாக வீசி விட்டு அவன் விடைபெற்றுக் கொண்டான். பிறகு நேரே வைதேகியின் வீட்டை நோக்கி நடந்தான்.

**வை**தேகி தான் திட்டம் போட்டபடி சிவராமனுக்கு அவல் உசிலியலும் காப்பியும் கொண்டு வந்து கொடுத்தாள். இரண்டையும் அவன் சில கணங்களில் தீர்த்துக் கட்டி விட்டான். தன் கணக்கு வெகு சரியாக அமைந்து விட்டது என்பதை எண்ணிப் பார்த்த பொழுது வைதேகிக்கு உள்ளூற மகிழ்ச்சியும் புல்லரிப்பும் உண்டாயின. “அவல் உசிலியல் எப்படி?'' என்று பொங்கும் உவகையுடன் கேட்டாள்.

“எனக்கு அவல் உசிலியல் என்றால் கட்டோடு பிடிக்காது!'' என்று அலட்சியமாகப் பதில் சொன்னான் சிவராமன்.



'' அவல் உசிலியல் பிடிக்காமல்தான் தட்டில் இருந்தது முழுவதையும் ஒரே விழுங்காக விழுங்கி விட்டீர்களோ ?'' என்று பரிகாசமாகக் கேட்டாள் வைதேகி.

'' ஆமாம், ஆமாம். அதைத் தயார் பண்ணின முறை பிரமாதமாக இருந்தது. அதனால் சாப்பிட்டு விட்டேன் !'' என்று ஏதோ அசுவாரஸ்யமாக உளறினான் அவன்.

சிவராமனின் பதில் அவளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவன் கேள்வியில் கவனம் செலுத்தி யிருந்தால், அவன் அப்படி யெல்லாம் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி யிருப்பானா ? எனவே, 'அவன் தன் பேச்சில் கவனம் செலுத்த வில்லை. வேறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான் !' என்பதை வைதேகி வெகு சீக்கிரமே உணர்ந்து கொண்டு விட்டாள்.

ஒரு வேளை ஆபீசுக்கு வெளியில் சிவராமன் இப்படித்தான் கிறுக்குத்தனமாக நடந்து கொள்வானோ ?

இந்தக் கேள்வி அவள் உள்ளத்தில் இடம் பெற்றதுதான் தாமதம் ; 'நாம் சிவராமனைப் பற்றிக் கணக்குப் போட்டு ஊகித்து வைத்திருந்ததெல்லாம் தவறாகி விட்டதோ ?' என்ற எண்ணம் இடம் பெற்று விட்டது. அது இலேசில் அவள் உள்ளத்தை விட்டு அகலவும் மறுத்தது.

அவனுடன் பேச்சுக் கொடுத்தவாறே அவள் தனக்கு மிகவும் பிடித்த ரிக்கார்டு ஒன்றை மின் விசையில் இயங்கும் கிராம போனில் வைத்தாள். கிராமபோன் பாட ஆரம்பித்ததும் அவன் தன் இரு காதுகளையும் பொத்திக் கொண்டு, '' தயவு செய்து இந்த ரிக்கார்டை நிறுத்த மாட்டாயா ?'' என்று வைதேகியைப் பார்த்துக் கேட்டான்.

'' அதற்கு என்ன ? இதோ நிறுத்தி விடுகிறேன் '' என்று சொன்ன வைதேகி கிராம போனை நிறுத்தி விட்டாள். பிறகு, '' உங்களுக்கு ரொம்ப ரொம்பப் பிடித்த இந்தப் பாட்டை வேண்டுமானால் வைக்கிறேனே !'' என்று அன்பு ஒழுகக் கூறியவாறே ஒரு ரிக்கார்டை எடுத்துக் காட்டினாள்.

'' வேண்டாம், வேண்டாம் !''

'' எப்பொழுது பார்த்தாலும் இந்தப் பாட்டையே நீங்கள் முணுமுணுத்த வண்ணம் இருப்பீர்களே !''

'' அதுவா ? விஷயம் என்ன வென்றால் பக்கத்து ஹோட்டலில் இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் இந்த ரிக்கார்டையே வைத்து உயிரை வாங்கி விடுகிறார்கள். கேட்டுக் கேட்டுக் காது புளித்து விட்டது. எப்பொழுதும் இந்த ஒரு பாட்டிலேயே மூழ்கி யிருப்பதனால், வேண்டாம் என்று எண்ணினாலும் என்னையறியாமல் என் வாய் இந்தப் பாட்டை முணுமுணுத்து விடுகிறது. நான் என்ன செய்ய ?'' என்று சிவராமன் தன் சிரமத்தை எடுத்துச் சொன்னான்.

**வி**ருந்து பரிமாறும் பொழுது வைதேகி ஆமவடை போட வந்தாள். சிவராமன் தனக்கு வடை வேண்டாம் என்று கண்டிப்பாக மறுத்து விட்டான். பிறகு, '' எனக்குத் தித்திப்புப் பண்டங்கள் என்றால் உயிர். எங்கள் வீட்டில் எனக்கு 'வெல்லப்பானை' என்று பெயர் என்றால் பார்த்துக் கொள்ளேன் !'' என்றான் பேச்சு வாக்கில்.

'' வெல்லப்பானையா ? வேடிக்கையான பெயராக இருக்கிறதே !''

''சின்னப் பையனாக இருந்த பொழுது வீட்டைக் குடைந்து குடைந்து வெல்லத்தை எடுத்துக் கொண்டு ஓடி விடுவேனாம். சர்க்கரை, கல்கண்டு ஒன்றையும் பாக்கி வைக்க மாட்டேனாம்!''

''அப்படியா? நானும் இன்றைக்கு உங்களுக்கென்று ஸ்பெஷலாக ஒரு தித்திப்புப் பண்டம் பண்ணியிருக்கிறேன்!''

'' பேஷ் ! அப்படியானால் கொண்டு வா. எனக்குத் தித்திப்புப் பண்டங்களில் கோதுமை ஹல்வா ஒன்றைத் தவிர பாக்கி யெல்லாம் பிடிக்கும்! அதை நான் கையாலே தொடுவது கூடக் கிடையாது!''

''ஏன்?''

''என்ன பட்சணம் அது ! சவுக்கு சவுக்கு என்று மேலண்ணத்திலும் கீழ் அண்ணத்திலும் ஒட்டிக் கொண்டு !''

சிவராமன் சொல்லி முடிப்பதற்குள்ளாக, வைதேகி ஹல்வாத் தட்டை எடுத்து அவன்



கண்களில் படாமல் வெகு சாமர்த்தியமாக ஒளத்து வைத்து விட்டான்.

உணவு அருந்தி முடிந்த பின் சிவராமனுக ஒன்றும் பேசவில்லை. எதிர்ப்புறத்துச் சுவரையே வெறித்துப் பார்த்தவண்ணம் பேசாமல் உட்கார்ந்திருந்தான். வைதேகி என்னவெல்லாமோ இல்லாத பேச்சுக்களை யெல்லாம் எடுத்துப் பார்த்தாள். அவன் வெறுமனே 'உம்' கொட்டினுனே யொழிய ஒன்றிலும் சுவாரஸ்யம் காட்டவில்லை. எனவே, அவளும் அலுத்துச் சலித்துப் பேசாமல் உட்கார்ந்து விட்டாள்.

சிவராமன் திடீரென்று சிந்தனை கலைந்தவன் போல், "வைதேகி! உன்னிடம் ஒரு யோசனை கேட்க விரும்புகிறேன். உண்மையான அபிப்பிராயத்தைச் சிறிதும் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்வாயா?" என்று கேட்டான்.

"ஓ! தாராளமாக. என்ன விஷயம்? சொல்லுங்கள்!" — மிகுந்த ஆவலுடன் கேட்டாள் வைதேகி.


"கண்டதும் காதல் என்கிறீர்களே, இந்தக் கொள்கையில் உனக்கு நம்பிக்கை இருக்கிறதா? முதல் சந்திப்பிலேயே மனிதன் தன் மனத்தைப் பறிகொடுத்து விடக் கூடிய அளவுக்கு உள்ளத்தில் அன்பு ஊறிவிடக் கூடும் என்பதை நீ நம்புகிறாயா?" என்று கேட்டான் சிவராமன்.

"நான் இதை நூற்றுக்கு நூறு நம்புகிறேன்!...."

அவள் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே, சிவராமன் எழுந்து விட்டான்.

"பேஷ்! அப்படியானுல் இன்று உன் சமையல் பலே ஜோர்! நான் வருகிறேன்!" என்று கூறி விடையும் கொண்டான்.

வைதேகி தனக்கு விடையளித்தானா, இல்லையா என்பதைக் கூடக் கவனியாமல், அவன் அடுத்த கணமே தன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் தலை மறையும் வரை அவன் போவதையே வைதேகி பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் உருவம் முழுவதும் கண் பார்வையிலிருந்து மறைந்ததும், தன் காகிதத்தையும் பென்சிலையும் கையில் எடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள். அவள் கணக்கில் எங்கே, எப்படி, ஏன் தப்பு நேர்ந்தது? கண்டு பிடிக்காமல் விட்டால் அப்புறம் அவள் போட்ட அத்தனை கணக்கும் என்ன ஆவது?



'அடடா! என்ன அசட்டுத்தனம் செய்து விட்டேன்? தெரிந்த கணக்கைக் கொண்டு எல்லாம் சுலபம் என்று நிர்மானித்து விட்டேனே! கணக்கில் 'எக்ஸ்' என்று ஒன்று இருக்கிறதே! அது எத்தனை திறமை சாலியையும் வகையாக மாட்டிவைத்துத் திணற அடித்துவிடக் கூடியதாயிற்றே! அதையே அல்லவா மறந்து விட்டேன்! இப்பொழுதல்லவா நம் தவறு நமக்கு விளங்குகிறது!' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டாள். அந்த 'எக்ஸ்' எதுவாயிருக்கும் அல்லது

யாராயிருக்கும் என்று கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டாள். ஆனால் கண்டு பிடிக்க முடிந்தால் தானே? யோசிக்க யோசிக்க அவளுக்கு மண்டையைத் தான் பலமாக வலித்தது.

சாஸ்திரீயமான புள்ளி விவரங்களையும் கணித அறிவையும் கொண்டு அடிகோலப் பட்ட ஒரு பெரிய விஷயம் இப்படித் தவிடு பொடியாகி விட்டதை நினைத்தபொழுது வைதேகிக்கு உண்டான மன வருத்தத்தைச் சொல்லி முடியாது. தன் தோல்வியை நினைந்து மனம் புழுங்கினாள். பிறகு தனது அறையை இருட்டாக்கிக் கொண்டு சாய்வு நாற்காலி ஒன்றில் அமர்ந்து பெரும் யோசனையில் ஆழ்ந்தாள். யோசிக்க யோசிக்க மூளை தான் குழம்பியது. பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது. மனத்துக்கு மாற்று மருந்து கொடுக்கும் நோக்கத்துடன் விளக்கை ஏற்றி விட்டுப் புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தாள்.

மணி ஒன்பதரை அடித்து விட்டது. புஸ்தகம் படிப்பதிலும் அவள் மனம் நாட்டம் கொள்ளவில்லை. மனத்திலே பற்பல எண்ணங்கள் தோன்றின. கடைசியில் அவள் மனமே அவளைத் தேற்றியது.

'வைதேகி! வீணில் ஏன் வருத்தம் கொள்ளுகிறாய்? சிவராமனை வெற்றி கொள்ள முடியவில்லையே என்பதற்காகவா? நான் கேட்கிறேனே என்று கோபித்துக் கொள்ளாதே! உள்ளத்தைத் தொட்டுச் சொல். சிவராமனிடம் உன் உள்ளம் எங்கே நாட்டம் கொண்டிருந்தது? 'உன். கணக்கு தப்பாகப் போய் விட்டதே! சாஸ்திரீய முறையில் சோதனை செய்து பார்க்கப்பட்ட ஒரு காரியம் தோல்வியுற்று விட்டதே!' என்பதற்காக வருந்துகிறாயா? போடி பைத்தியக்காரி! இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது? எந்தச் சாஸ்திரமாவது முதல் சோதனையிலேயே வெற்றியளித்ததுண்டா? இத்தகைய அதிசயத்தை நான் கேள்விப்பட்டதில்லை. நீ கேள்விப்பட்டிருப்பாய் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை. இன்று ஏற்பட்ட தவறுகளையெல்லாம், நாளை—அதாவது வருங்காலத்தில் திருத்திக் கொள்வதுதான் சாஸ்திரீய நோக்கு. புரிந்ததா?'

மனத்தின் இந்த எச்சரிக்கை அவளுக்குப் பிடித்தது. இதே சமயம் ஒரு டாக்ஸி அவள் வீட்டு வாசலுக்கெதிரே வந்து நின்றது. முதலில் வைதேகியின் தந்தை இறங்கினார். உள்ளே வந்தவர் நேரே வைதேகியிடம் வந்து, "வைதேகி! இதோ எங்களோடு வந்திருப்பது யார், பார்த்தாயா?" என்று கேட்டார்.

தன் தாய் தந்தையருடன் உள்ளே நுழைந்த வாலிபனை வைதேகி ஒரு முறை பார்த்தாள். வாலிபன் நல்ல உயரமாகவும் கட்டுமஸ்தான உடல் வாளிப்புப் பெற்றவனாகவும் இருந்தான். ஒற்றை நாடியான உடல்தான், இருந்தாலும் முகத்தில் காம்பீர்யம் தாண்டவமாடியது. எல்லாவற்றையும் விட விசேஷம் என்னவென்றால், அவன் மூக்கு நீண்டு எடுப்பாகவும், முகம் கொஞ்சம் நீட்டுப் போக்காகவும் வைதேகி எதிர்பார்த்தபடியே இருந்தன.

அவள் ஆவலுடன் அந்த வாலிபனைப் பார்த்தாள். முகத்தில் முறுவல் தாண்டவமாட அவன் வைதேகியை நெருங்கி வந்தான். "இவள்தான் வைதேகியா? எங்கேயாவது தனியாகப் பார்த்திருந்தால், என்னால் இவளை அடையாளம் கண்டு கொண்டே இருந்திருக்க முடியாது. எத்தனை பெரியவளாகப் போய் விட்டாள், இப்பொழுது!" என்றான்.

வைதேகி விரலைக் கடித்துக் கொண்டு வெட்கத்துடன், "இப்பொழுது உங்களையும் தான் நான் எங்கே அடையாளம் கண்டு கொண்டேன்?" என்றாள்.

"நீ என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லையே! பார்த்தீர்களா, மாமா?" என்று கூறிய வாலிபன் சிரித்துக் கொண்டே, "மாமா! உங்களுடைய இந்தப் பெண்தானே அப்பொழுது என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்தவள்? இப்பொழுது என்னை மறந்தே போய்விட்டாளே!" என்றான்.

வைதேகி ஒன்றும் புரியாமல் திரு திருவென்று விழித்தாள். அதைக் கண்ட அவள் தாயார், "ஏன், வைதேகி! நீ சின்னக் குழந்தையாக இருந்தபொழுது நாம் கும்பகோணத்தில் இருந்தோமே, நினைவில்லை? அடுத்த வீட்டில் 'நாணு, நாணு' என்று ஒரு பையன் இருந்தானே! எப்பொழுது பார்த்தாலும் நீ அவனோடுதானே விளையாடிக் கொண்டிருப்பாய்? அவனை மறந்து விட்டாயா? அவன்தானடி இவன்! இன்றைக்குச் சினிமாக் கொட்டகையிலே தற்செயலாக இவனைப் பார்த்தோம். உடனே கூடவே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறோம்!" என்றாள்.

"அடே! 'நாணு, நாணு' என்கிறாயே. அம்மா! நம்ம அம்பி என்று சொல்லு!" என்று சொன்ன வைதேகிக்குப் பழைய சம்பவங்கள் எல்லாம் நினைவுக்கு வந்து விட்டன.

வைதேகியையும் நாணுவையும் அந்த அறையிலேயே விட்டு விட்டு வைதேகியின் பெற்றோர்கள் அடுத்த அறைக்குப் போய்விட்டார்கள். இப்பொழுது அந்த அறையில் நாணுவும் வைதேகியும் மட்டுமே தனியாக இருந்தார்கள்.

"நல்ல வேளை! இந்த அம்பியை இப்பொழுதாவது புரிந்து கொண்டாயே!" என்று சொல்லிச் சிரித்த நாணு, "உனக்கு ஒரு விஷயம் தெரியுமா, வைதேகி? எங்கள் அப்பா என் கல்யாணத்துக்காகப் பெண் தேடத் தொடங்கியிருக்கிறார். இந்த விஷயம் தெரிந்ததும் நான் என் அப்பாவிடம் என்ன சொல்லி விட்டு வந்திருக்கிறேன், தெரியுமா? ஒரு பெண் என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்திருக்கிறாள். நானும் அவளை மணந்து கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். எங்கள் கல்யாணத்தை நாங்களே பேசி முடித்துக் கொண்ட பொழுது எனக்குப் பத்து வயதும் அவளுக்கு ஐந்து வயதும் இருக்கும். அத்தனை சின்ன வயதிலும் அவள் 'அம்பி! கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தால், நான் உன்னைத்தான் செய்து கொள்வேன்!' என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறாள். அதனால் என்னைப்பற்றி அவள் அபிப்பிராயம் என்ன என்பதை முதலில் தெரிந்து கொண்டு வருகிறேன். அவள் சரியென்று

சம்மதித்தால் சரி, இல்லா விட்டால் இருக்கவே இருக்கிறது, பார்த்துக் கொள்வோம். பெண்களுக்கா பஞ்சம்?'' என்று சொல்லி விட்டு வந்திருக்கிறேன். நான் சென்னைக்கு வந்திருக்கும் காரணமே உன்னை உத்தேசித்துத்தான். நானே உன் வீட்டுக்கு வருவதாகத் திட்டம் போட்டிருந்தேன். . ஆனால், தற்செயலாக மாமாவையும் மாமியையும் இன்றைக்குச் சினிமாக் கொட்டகையில் பார்க்க நேரிடவே, அவர்களோடு சேர்ந்து வந்து விட்டேன்...சரி, நீ நம் கல்யாணத்தைப்பற்றி என்ன பதில் சொல்கிறாய், சொல்லு!'' என்றான் நாணு.

'' முதலில் சாப்பிடுவோம், வாருங்கள்! அப்புறம் சாவகாசமாக இந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம்!'' என்றாள் வைதேகி சிரித்துக் கொண்டே.

''உன் பதிலைத் தெரிந்து கொள்ளாத வரையில் எனக்குச் சாப்பாடே செல்லாது!''

'' செல்லாதா? அதையும் தான் பார்த்து விடுகிறேனே! ஆமாம், உங்களுக்கு ஆம வடை பிடிக்குமா?''

'' ஆம வடையா? எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்குமே!''

'' கோதுமை ஹல்வா!''

'' எனக்குக் கோதுமை ஹல்வா என்றாலே உயிர். ஆமாம், இதெல்லாம் பண்ணியிருக்கிறாயா? நான் வரப் போகிறேன் என்று உனக்கு ஜோஸியம் கீஸியம் தெரியுமா? ஆம வடை, ஹல்வா... ஆமாம், தக்காளித் தயிர்ப் பச்சடிகூட உண்டோ?''

'' கேட்க வேண்டுமா? அதுவும் பண்ணியிருக்கிறேன்!''

'' ஆனால் ஒன்று. எனக்கு ரொம்ப ரொம்பப் பிடித்த ஒரு பொருள் மட்டும் நீ பண்ணியிருக்கமாட்டாய்!''

'' என்ன?''

'' உருளைக் கிழங்கு வறுவல் கறி!''

'' அதுவும் பண்ணியிருக்கிறேன்!''

'' என்ன? என்ன?''—நாணுவின் குரல் தழுதழுத்து விட்டது.

'' வைதேகி! இத்தனை ருசியான விருந்து எனக்காகப் பண்ணி வைத்திருக்கும் நீ, குறை மனத்துடன் என்னைச் சாப்பிட வைக்காதே. நிறை மனத்துடன் சாப்பிட வை. என் இந்த வேண்டுகோளை நீ நிறைவேற்றித்தான் ஆக வேண்டும்!'' என்றான் நாணு பிடிவாதமாக.

பிறகு, '' ஏன் வைதேகி! நீ உன் கணவனிடத்தில் என்ன குணங்களையெல்லாம் எதிர் பார்க்கிறாய், சொல்லு! பணக்காரனாக இருக்க வேண்டும் என்றா? கார் வாங்கக்கூடிய அளவுக்குப்பணக்காரன். படித்தவனாக இருக்க வேண்டும் என்று கருதுகிறாயா? இந்த வருஷம் தான் நான் எம். ஏ. பாஸ் செய்திருக்கிறேன். உடல் அமைப்பு நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறாயா? நீயே பார்த்துக் கொள்ளு. என்னைப் போன்ற சாது. நேர்மையானவன், பொறுமைசாலி, நல்லவன், தயாள சிந்தனை உள்ளவன், தாராள குணம் படைத்தவன், அன்பாக இருக்கக் கூடியவன்...'' என்று அடுக்கிக் கொண்டே போனான் நாணு.

'' யாரும் இருக்க முடியாது. இதைத்தானே நீங்கள் சொல்லப் போகிறீர்கள்?'' என்று வைதேகி இடையே குறுக்கிட்டாள்.

'' ஆமாம். உன் வார்த்தையை நீ காப்பாற்றுவாயா?'' என்று கேட்டான் நாணு.

'' அது சரி. நீங்கள் உங்களைப் பற்றி ஒன்று விடாமல் என்னிடம் சொல்லி விட்டீர்கள். ஆனால் என்னைப் பற்றி என்னிடம் நீங்கள் ஒன்றுமே கேட்க வில்லையே, அது ஏன்?'' என்று கேட்டாள் வைதேகி.

'' அதுவா? நான் கேட்க வேண்டியதை முன்பே கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டேன். அதனால்தான்! சினிமாக் கொட்டகையிலிருந்து வீடுவந்து சேரும் வரை எனக்குப் பொறுமை எங்கே இருந்தது? வழி நெடுக உன் பேச்சுத்தான்!'' என்றான் நாணு.

இதே சமயம் வைதேகியின் தாயார் நாணுவைச் சாப்பிடக் கூப்பிட்டாள்.

'' வைதேகி! சீக்கிரம் சம்மதம் தெரிவிக்கிறாயா? இல்லை, கன்னத்தில் ஒன்று கொடுக்கட்டுமா?'' என்று துரிதப்படுத்தினான் நாணு.

'' என்ன கொடுப்பீர்கள்?''

'' அறை!''

'' கல்யாணம் ஆன பிறகும் இப்படித்தான் நடந்து கொள்வீர்களா?''

''ஊஹூம். அப்பொழுது வேறு ஒன்று கொடுப்பேன்! சரி, சரி! சீக்கிரம் சொல்லு! உன் வாக்கைக் காற்றில் பறக்க விடாமல் காப்பாற்றுவாயா?''

'' என்னைப் பார்த்தால் காற்றில் பறக்க விடும் பெண்ணாகவா தோன்றுகிறேன்!''

வைதேகி கன்னத்தில் அறைந்தாற்போல் நாணுவைப் பார்த்துக் கேட்டாள்.

நாணுவும் சிரித்துக்கொண்டு அவள் கன்னத்தில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டி விட்டுச் சாப்பிட உள்ளே சென்றான்.

கடைசியில் இத்தனை பெரிய கதைக்கு ஒரு சுருக்கமான சாராம்சம் வேண்டுமே! அது என்ன?


வைதேகி போட்டு வைத்திருந்த அத்தனை கணக்கும் தப்பாகி விட்டது; கவைக்குதவாததாகி விட்டது.

வைதேகி தனக்கென்று எந்தப் பையனைத் தேடித் தீர்மானித்திருந்தாளோ, அவன் திலோத்தமாவின் மணாளனாகி விட்டான். வைதேகியின் தாய் தந்தையர் வைதேகிக்காகத் தேடி வைத்திருந்த பையன் வைதேகியின் கரம் பற்றிவிட்டான்.

காரணம் பரம ரகசியம். வைதேகி தன் கல்யாணத்தைத் தானே தீர்மானித்துக் கொள்ள முயற்சிக்கிறாள் என்பது தெரிந்ததும், வைதேகியின் பெற்றோர் நாணுவின் பெற்றோருக்கு ஒரு கடிதம் எழுதிக் கேட்டார்கள். வைதேகியை மணந்துகொள்ள நாணுவுக்குச் சம்மதம் என்றுபதில் வந்தது. உடனே இன்னொரு கடிதம் எழுதிப் பையனையே வரவழைத்து விட்டார்கள்!

வைதேகியின் காதல் கணக்கைத் தப்பு என்று சொல்லிக் கொண்டு போகிறவர்கள் சொல்லிக் கொண்டு போகட்டும். படைப்புக் கடவுள் அவள் தலையில் எழுதி விட்ட எழுத்தை-கணக்கை யார்தான் தப்பு என்று துணிந்து சொல்ல முடியும்?

காதல் கணக்கில் 'கோட்டு' அடித்துவிட்ட வைதேகியே இப்படிச் சொல்கிறாள் என்றால், அப்புறம் நாம் யார் மாறு பேச?



# உள்ளப்

அநேகமாய் எங்கள் வீட்டில் காலையில் ஒன்பதரை மணிக்குள் சமையல் ஆகி விடும். பத்து மணிக்குள் அவர் சாப்பிட்டு விட்டுக் காரியாலயத்துக்குப் புறப்பட்டு விடுவார். அன்று பத்தேகால் ஆகியும், குழம்பு கூட ஆகவில்லை. அவர் பறந்தார். ஒரு நாளைப் போலவா உடம்பு இருக்கிறது? வீட்டில் உதவிக்கு ஒருவரும் கிடையாது. எனக்கு அவர்; அவருக்கு நான். வேறே நாதி கிடையாது. இப்படி எத்தனை வருஷங்கள் கஷ்டப்பட முடியும்? பதினேழு பதினெட்டு வருஷங்கள் கஷ்டப்பட்டாயிற்று. மீதி நாட்களையும் ஓட்டிவிட வேண்டும். அபிராமி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ? அன்று எழுந்திருப்பதற்கே ஆறேகால் மணி ஆகிவிட்டது. பால்காரன் ஏழு மணிக்கு வந்தான். வழக்கமாக வரும் கறிகாய்க்காரி அன்று வரவே இல்லை. இப்படி எல்லாமாகச் சேர்ந்து என்னைச் சோதனை செய்தது. கடைசியில் ஒரு வழியாகப் பத்தே முக்காலுக்கு இலை போட்டேன். வற்றல் குழம்பு வைத்து, வடகம் வறுத்திருந்தேன். வாய் திறக்காமல் சாப்பிட்டு விட்டு எழுந்

தார். வெற்றிலையை மடித்துக் கொடுத்தேன். அதை வாங்கி அவசரமாக வாயில் திணித்துக் கொண்டு புறப்பட்டார். அவரை அனுப்பிவிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்தேன். இலையில் அன்னத்தைப் பரிமாறிக் கொண்டு, சாப்பிட உட்கார்ந்தேன். கதவை யாரோ தட்டினார்கள். 'இது என்ன சனியன்' என்று அலுத்துக்கொண்டே, 'யார் அது ?' என்றேன்.

' ஸார், தபால் ' என்று குரல் வந்தது.

ஓடிப் போய்க் கதவைத் திறந்தேன்.


தபால்காரர் ஒரு கடிதத்தை நீட்டினார். நான்குபுறமும் மஞ்சள் தடவியிருந்தது அதில். கடிதத்தை வாங்கிக் கொண்டு மீண்டும் கதவை அடைத்துக் கொண்டு உள்ளே போனேன். சாதாரணமாக, அவருக்கு வரும் கடிதங்களை நான் பார்ப்பதில்லை. மஞ்சள் தடவி இருந்ததால், பிரித்துப் படித்தேன். படித்து விட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தேன்.

இப்பொழுது எனக்கு நாற்பத்தைந்து வயது நடக்கிறது. ஆனால் பார்க்கிறவர்கள் பத்துப் பன்னிரண்டு வயது குறைத்துத்தான் சொல்லுவார்கள். என்னைப்பற்றி நானே பெருமையாகச் சொல்லிக்கொள்ளக் கூடாதுதான். இருந்தாலும் சொல்லுகிறேன். என்னைப் பார்க்கிற பேர் என்னைக் குரூபி என்று சொல்ல மாட்டார்கள். அழகி என்றுதான் சொல்லுவார்கள். முப்பது வருஷங்களுக்கு முன் எனக்கு விவாகமாயிற்று. அப்பொழுது எனக்குப் பதினைந்து வயது. வயதுக்கு மீறிய செழிப்பும் வனப்பும் எனக்கு இருந்தன. என்னுடைய அழகுக்கு ஆசைப்பட்டே அவர் என்னை விவாகம் செய்து கொண்டார். அவரும் அந்தநாளில் ரொம்ப அழகாக இருப்பார். இப்பொழுதும் அவர் அழகுக்குக் குறைவில்லை. அவரை நான் பதியாகப் பெற்றதற்கு நான் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். எங்களுடைய இல்வாழ்க்கை தொடங்கி ஐந்து வருஷங்களாயின. அந்தக் கால அளவுக்குள் அவரைப் பற்றி நான் எவ்வளவோ தெரிந்து கொண்டேன். அவர் செல்வத்திலும் அழகிலும் சிறந்தவர் என்பது இருக்கட்டும். குணத்திலும், பொறுமையிலும் மிக மிகச் சிறந்தவர் என்பதை அறிந்து கொண்டேன்.

ஆனால் அந்தக் குணக்குன்றுக்கு இப்படி ஒரு துர்க்குணமே உருவான ஒருத்தி மனைவியாக வாய்த்திருக்க வேண்டாம். இயற்கையாக நான் அப்படி ஒன்றும் துர்க்குணி அல்ல. கைகேயி கூட ஒரு காலத்தில் நல்லவளாகத் தானே இருந்தாள்? எதையோ சொல்ல வந்தவள், எதையோ சொல்லிக் கொண்டு போகிறேனே!

# புரட்சி

கி. ரங்கராஜன்



எனக்கு விவாகமாகி ஐந்து ஆண்டுகள் ஆயின. எங்களுடைய வாழ்க்கைச் சகடம் தடம் புரளாமல் ஓடிக் கொண்டிருந்தது. எங்களுடைய இன்ப வாழ்க்கையைக் கண்டு கடவுளுக்கே பொறுக்கவில்லை போலும். என்னுடைய இருபத்தோராவது வயதில் அந்தக் கொடிய நோய் என் உடலில் வந்து புகுந்து கொண்டது. வைத்தியரிடம் காட்டினேன். ஏதோ ஒரு வியாதியைச் சொல்லி மருந்து கொடுத்தார். குணம் உண்டாகவில்லை. வேறு ஒரு வைத்தியரிடம் காட்டினேன். அவர் ஏதோ ஒரு புதுப் பெயரைச் சொன்னார். இப்படி மாறி மாறிப் பல பெயருடன் அந்த நோய் என் உடலில் நிரந்தரமாகக் குடி கொண்டுவருகிறது. இந்தச் சமயத்தில்தான் என் கணவர் எவ்வளவு பொறுமைசாலி என்பதை அறிந்து கொண்டேன். அவர் அலுக்காமல், சலிக்காமல் எனக்கு வைத்தியம் செய்வித்தார். வேறொருவராக இருந்தால் "போடி, போ!" என்று போயிருப்பார்.

உடல் மெலிந்து எலும்பும் தோலுமாக மாறிவிட்ட அந்த நிலையிலும், அவர் என்னிடத்தில் எள்ளத்தனை கூட அன்பு மாறாமல், ஆசை மாறாமல், சதிசேவை செய்தார்.

என் கணவரைப் போல, சதிசேவை செய்த ஒருவரை எந்தப் புராணங்களிலும், எந்தக் காவியங்களிலும் யாருமே படித்திருக்க முடியாது.

எத்தனை நாட்கள் என்னை உட்காரவைத்துக் கோரையாயிருந்த என் தலைமயிரை வாரிச் சிக்கெடுத்திருப்பார்! எத்தனை நாட்கள் நான் 'தூ தூ' என்று வீடு முழுதும் துப்பித்தள்ளிய கோழையை எடுத்துச் சுத்தம் செய்திருப்பார்! முகம்தான் சற்று சிணுங்கி யிருக்குமா? மனத்தில் அவருக்குத் துளியாவது அருவருப்புத் தோன்றியிருக்குமா?

அவருடைய அன்பு என்னை வருத்திற்று. அந்த வருத்தம் தாங்காமல் அவரைப் பாவி நான் சில சமயம் வைதும் இருக்கிறேன். எனக்கு என் நோய் செய்யும் துன்பத்தைவிட அவர் பரிவு செய்யும் துன்பம்தான் கொடியதாக இருந்தது.

நோய் நொடி இல்லாமல் கல்லுமாதிரி இருப்பவர்கள் திடீரென்று இறந்து போகவில்லையா? நான் இறந்து போகக் கூடாதா? நான் இருப்பதால் யாருக்கு என்ன பலன்? பலன்தான் இல்லை. தொந்தரவாவது இல்லாமல் இருக்கக் கூடாதா? பொழுது விடிந்தால் பொழுது போனால் எப்பொழுதும் என் தொந்தரவுதான் அவருக்கு. இதற்கு விடிவு காலம் ஏற்படவே ஏற்படாதா?

யோசித்து யோசித்து என் மூளை குழம்பி விடும் நிலையில் திடீரென்று ஒருநாள் என் நெஞ்சில் மின்னல் ஒன்று பாய்ந்தது. 'அப்படிச் செய்து பார்த்தால் என்ன?' என்று நினைத்தேன். ஆனால் அவர் அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே.

சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த நல்ல சமயமும் எனக்கு வெகு விரைவில் வாய்த்தது. அன்று நான் விழித்த வேளை நல்ல வேளை என்று சொல்லவேண்டும். உடம்பிலேகூடச் சற்று வலு இருந்தது. எழுந்து உட்காரக் கூட முடிந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமையாகவும் இருந்ததால், அவரும் வீட்டில் இருந்தார்.

"என்ன சீதா, உடம்பு இன்று எப்படி இருக்கிறது? கொஞ்சம் படிமானமாகக் காட்டுகிறதே" என்று கேட்டார்.

இதுதான் சமயம் என்று நினைத்தவளாய், "ஒரு வாரமாக என் மனத்தில் ஒன்று தோன்றி வளர்ந்து வருகிறது. என்னுடைய எண்ணம் முடிவுபெறுமானால் உங்களுக்கும் சௌகரியம். எனக்கும் ஆறுதலாக இருக்கும்" என்றேன்.

"என் சௌகரியம் இருக்கட்டும். சீதா, உனக்கு ஆறுதலாக இருப்பது எதையுமே நான் செய்யத் தயங்க மாட்டேன். என்ன செய்ய வேண்டும்?"

"சொன்னால் நீங்கள் கோபிப்பீர்கள்?"

"நானா கோபிப்பேன்? ஒரு பொழுதும் கோபிக்க மாட்டேன். சும்மா சொல்."

"என்னைப் பிடித்திருக்கும் இந்த நோய் நான் உள்ள வரையில் நீங்கப் போவதில்லை. நான் பிழைத்தெழுந்து உங்களுக்குச் சேவை செய்யப் போவதில்லை. உங்களுக்குச் சேவை செய்யாமல் இப்படியே இருந்து இறந்து போகவும் என் மனம் விரும்பவில்லை. உங்களுடைய முகத்தில் சந்தோஷக் குறியை நான் பார்த்து வெகு நாட்களாகிவிட்டன. மீண்டும் உங்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சியை விளைவிக்க என் உள்ளம் விழைகிறது. அதற்கு ஒரு யோசனை சொல்லுகிறேன்."

"என்ன, அது?"

"நீங்கள் மறு விவாகம் செய்து கொள்ள வேண்டும். அதுவும், நான் உள்ளபோதே செய்துகொள்ள வேண்டும். உங்களை நான் மணக்கோலத்தில் பார்த்து மகிழ வேண்டும். என் பொருட்டு, தாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறீர்கள். மேலும் உங்களைக் கஷ்டப்பட விடுவதற்கு என் உள்ளம் இடம் கொடுக்கவில்லை. நீங்கள் வேறொருத்தியை மணந்து சௌக்கியமாக வாழ்வதைப் பார்த்துக் கொண்டே என் மீதி வாழ்நாட்களையும் கழிக்க வேண்டும்."


"என்ன, சீதா நீதானா பேசுவது? நீ இருக்கும்போது உன் கண்ணெதிரே வேறொருத்தியைக் கைப்பிடிப்பதா? உனக்கு யார் இந்தப் போதனையைச் செய்தார்கள்?"

"என்னுடைய அந்தராத்மா செய்த போதனை இது. தாங்கள் என் பொருட்டுப் பணத்தைப் பணம் என்று பாராமல் வாரிச் செலவு செய்து வைத்தியம் செய்வித்தீர்கள். இது பரியந்தம் ஒரு பயனும் இல்லை. கடைசியாக ஒரே ஒரு ஆசை. அதையும் செய்து பார்த்து விடுவது என்று தீர்மானித்து விட்டேன். கன்னிகாதானத்துக்கு எத்தனையோ பலன் சொல்லுகிறார்கள்.

"கிராமத்தில் என் ஒன்றுவிட்ட சகோதரி இருக்கிறாள். அழகிலும் குணத்திலும் சிறந்தவள். வறுமை காரணமாக அவளுக்கு விவாகம் ஆகவில்லை. நீங்கள் சரி என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். அவளை நான் தங்களுக்கு விவாகம் செய்விக்கிறேன். அவளைத் தாங்கள் மணப்பதன் மூலம், ஒரு ஏழைப் பெண்ணுக்கு வாழ்வளித்த புண்ணியத்தோடு, உங்கள் வாழ்க்கையும், என்னுடைய வாழ்க்


மாஸ்டா
பல்புகள்
(இந்திய தயாரிப்பு)
Mazda
பிரகாசம் அதிகம்
நீடித்து உழைக்கும்
B T-H
பிடிஹெச் பரம்பரை
யைச் சேர்ந்த பல்புகள்
அஸோஸியேட்டட் எலக்ட்ரிகல்
இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.
கல்கத்தா, பம்பாய், புது டில்லி, மதராஸ், பெங்களூர்
கோயமுத்தூர், நாகபுரி
AIX- 126TM


வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்..என்றும்
மிக்க நேர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே
உங்கள் உடலுக்கு இளவேனிற்காலே
யின் புத்துணர்ச்சியளிக்கிறது...
அதைக் குளிர்ச்சியாகவும்
வாசனை திகழவும்
வைக்கிறது.
Cashmere Bouquet
TALCUM POWDER
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள்
விரும்பும்
நறுமணத்துடன்



சேலம் ஜில்லாவைச் சேர்ந்த தர்மபுரி பஞ்சாயத்தின் பிரசவ விடுதி சென்ற ஏப்ரல் 17-ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இந்தத் திறப்பு விழாவில் அத்தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தினர் ஸ்ரீ வி.ஆர். நரசிம்மன், சென்னை சட்டசபை அங்கத்தினர் ஹேமலதா தேவி, சென்னை சுகாதார இலாகா உதவித் தலைமை அதிகாரி ஸ்ரீமதி சர்மா மற்றும் பலர் பங்கு எடுத்துக் கொண்டனர். அந்தப் பகுதி கிராம மக்களுக்குப் பேருதவியாக இருக்கக் கூடிய இந்த விடுதியை நிர்மாணிக்க மூவாயிரம் ரூபாய் நன்கொடை யளித்தவர் ஸ்ரீமதி எம்.ஆர். காளியம்மாள். இடது கோடியில் அவர் கையில் மாலையுடன் காட்சியளிக்கிறார்.

---

கையும் மலரும்" என்று கூறி முதலில் கணவரைச் சம்மதிக்கச் செய்தேன்.

லக்ஷ்மி எங்கள் வீட்டில் அடி எடுத்து வைத்தஅன்றே, எங்கள் வீடு லக்ஷ்மிகடாட்சம் பெற்று விட்டது. நல்ல அழகி அவள். அழகோடு குணமும் அறிவும் இருந்தன. என் கணவரின் நோக்கம் அறிந்து நடக்க விரைவில் கற்றுக் கொண்டாள். எனக்கே அது ஆச்சரியமாக இருந்தது. நான்கைந்து மாதங்களில் எங்கள் வீட்டின் சகல பொறுப்பையும் அவள் ஒருத்தியே ஏற்றுக்கொண்டு விட்டாள்.

கர்மயோகியான என் கணவர், அவளுடைய அழகுக்கு ஆட்பட்டதைப் பற்றி எனக்குத் தெரியாது. நான் லக்ஷ்மியின் அழகுக்கு அடிமையாகி விட்டேன். அவளுடைய நீண்ட கருள் கருளான கூந்தலை வாரிப் பின்னிப் பூ வைத்து அழகு பார்ப்பதிலும், உள்ளே பெட்டியில் வெகு நாட்களாகத் தூங்கிக் கொண்டிருந்த நகைகளை எடுத்துக் கொடுத்து அவளை அணியச் செய்து நான் பார்த்து மகிழ்வதிலும் எனக்கு நேரம் போதவில்லை.

என் கணவர் எனக்காக வாங்கிய மருந்துகளைக் கணக்கிட்டால் ஒரு ஆஸ்பத்திரியே வைக்கலாம். அவ்வளவு மருந்துகள் வாங்கியிருக்கிறார். அவற்றை வாங்குவதற்கு அவர் செலவு செய்த ரூபாய்கள், அடே அப்பா! சொல்லி முடியாது. லக்ஷ்மி எங்கள் வீட்டுக்கு வந்த பிறகு அந்த மருந்துச் செலவு நின்றது. நான்தான் நிறுத்தி விட்டேன். மருந்துக்கு ஆகும் பணத்தைக் கொண்டு லக்ஷ்மிக்கு விதம் விதமான ஆடைகள் வாங்கினேன். அவற்றை அவள் அணிந்து நின்ற காட்சி! அடாடா! என் கண்ணே பட்டு விடும்போல் இருந்தது. எத்தனை அழகாக இருந்தாள் அவள்.

என் உள்ளத்தில் எழுந்த உற்சாகத்தின் விளைவோ, மருந்து தின்றதன் பலன்தானோ, அல்லது லக்ஷ்மி வந்த வேளையோ, ஆண்டவனின் திருவுள்ளமோ, நான் அறியேன்; பல நாட்களாக என் உடலில் குடிகொண்டிருந்த நோய் சிறிது சிறிதாக நீங்கி விடைபெற்றுக் கொண்டது. ஒரு வருஷம், ஒன்றரை வருஷத்துக்குப் பிறகு என்னுடைய உடலில் புதிய பொலிவும் வனப்பும் ஏற்பட்டன.

கண்ணாடியில் பார்த்தபோது எனக்கே என்னை அடையாளம் தெரியவில்லை. என்னை நானே பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டேன். அதீதமான ஆனந்தம் துக்கத்தின் முதற்படி என்பதை நான் அப்போது அறிந்து கொள்ளவில்லை.

என் கணவர் எப்பொழுதும்போல் என்னிடம் அன்பாகத்தான் இருந்தார். அவரால் அன்பாகத்தான் இருக்க முடியும். அதுவும் நான் நோய் நீங்கிச் சுகம் அடைந்த பின்பு அவர் காட்டிய அன்பு, இன்னும் ஒரு படி அதிகமாகவே இருந்தது. லக்ஷ்மியிடமும் அவர் அன்பாகவே இருந்தார். அவளுடைய அழகும் குணமும், யாரையும் அவளிடம் அன்பு காட்டச் செய்யும். எத்தனையோ நாட்கள் அவளை மட்டும் அவர் அழைத்துக் கொண்டு சினிமாவுக்கும் கடற்கரைக்கும் போயிருக்கிறார். நான்தான் அவர் களை அனுப்பி யிருக்கிறேன். அதெல்லாம் நான் நோயுடன் போராடிய காலத்தில். இப்பொழுது நான் பழைய சீதாவாக ஆன பின்பு எத்தனையோ தரம் என்னை மட்டும் அவர் அழைத்துக் கொண்டு எவ்வளவோ இடங்களுக்குப் போயிருக்கிறார். அவர் அன்பு பரம பவித்திரமானது, மாசு மறுவற்றது. அந்த அன்புக்கு மாசு கற்பித்தால், நாக்கு அழுகி விடும். ஆனால் என் நாக்கு ஏன் அழுகவில்லை? எனக்கு அது இன்னும் வியப்பாகவே இருக்கிறது.

அந்தக் காலத்தில் கைகேயியின் மனசைக் கலைக்கக் கூனி இருந்தாள். இந்தக் காலத்தில் அவள் வேண்டாம். மனிதரின் உள்ளத்தில் மாறி மாறித் தோன்றும் உணர்ச்சிகளே ஆயிரம் கூனிகளுக்குச் சமானமில்லையா?

ரத்தம் போய், வலிமை குன்றி, விண்ணுக்கும் மண்ணுக்குமாக ஊசலாடிக் கொண்டிருந்த நான் அப்போது என் கணவரின் அன்பைச் சந்தேகிக்கவில்லை. இப்பொழுது சந்தேகிப்பானேன்? அவருடைய அன்பு, பரிவு, ஆசை எல்லாம் என் ஒருத்திக்கு மட்டும் உரியதன்று, லக்ஷ்மிக்கும் அதில் பங்கு உண்டு என்று அப்போது நினைத்தேன். இப்பொழுது அப்படி எல்லாம் நினைக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. என் கணவர் எனக்குத்தான்

உரியவர், அவருடைய அன்பு எனக்குத்தான் உரியது. மற்றவருக்குப் பங்கு கிடையாது என்று எண்ணத் தலைப்பட்டேன். 'எனக்கு அழகு இல்லையா? இளமை இல்லையா? எதில் நான் குறைவு?' என்று நான் எண்ணியபோது, என் பெண் உள்ளம் புரட்சி செய்தது.

இந்த நிலையில் லக்ஷ்மி கருவுற்றாள்.

அப்புறம் கேட்பானேன்? என் உள்ளத்தில் தோன்றிய அசுர குணம் என்னை வாட்டி எடுத்தது. என் வயிற்றில் பிறக்க வேண்டிய குழந்தை, அவள் வயிற்றில் பிறப்பதாவது? ஐயோ! அநியாயமாய் மோசம் போய் விட்டேனே! என் வாழ்வை நானே கெடுத்துக் கொண்டு விட்டேனே!

என் சகோதரி, என் அன்புக்குப் பாத்திரமான ஒரு ஏழைப் பெண்! அவளைப் பற்றி நான் இப்படி எல்லாம் நினைக்கலாமா? நான் பாவி, அவ்வாறு நினைத்தேன்.

அவளுடைய உதரத்திலே என் கணவரின் குழந்தை வளர்ந்தது. கூடவே என் உள்ளத்திலேயும் பொறாமை உணர்ச்சி வளர்ந்தது. இன்னும் நான்கைந்து மாதங்களில் அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள். பிறப்பது ஆண் குழந்தையாகப் பிறந்து விட்டால், அப்புறம் லக்ஷ்மியைக் கட்டிப் பிடிக்க முடியாது. அது மட்டுமா? அப்புறம் என் கதி? அதோகதிதான். அந்த வீட்டில் அப்புறம் நான் யார்? என்னை யார் அப்புறம் சீண்டுவார்கள்? இப்படியெல்லாம் என் சிந்தனை ஓடியது: ஓடிக் கொண்டிருந்தது. கடைசியில் ஒரு நாள் அந்த ஓட்டத்தில் சிறிது தடை ஏற்பட்டது.

என் லக்ஷ்மி, என் சகோதரி லக்ஷ்மி ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். பிறக்கும் பொழுதே தலையில் கட்டு மயிர், மூக்கும் விழியுமாகச் செக்கச் செவேலென்று கொழு கொழு என்றிருந்தது.

நான் கூட என் பொறாமைக் குணத்தை மறந்து, அந்தக் குற்றமற்ற குழந்தையின் அழகைப் பார்த்துச் சிறிது நேரம் களிப்புற்றேன். ஒரே கணம்தான். நான் பழைய குருடி ஆகி விட்டேன். அதன் அழகு என்னுடைய கண்ணைக் குத்திற்று. அப்புறம் எனக்குக் கண் ஏது?

குழந்தை பிறந்த மூன்றும் நாள் லக்ஷ்மிக்கு இலேசாக உடம்பு கட்டது. கை வைத்தியமாக ஏதோ செய்தார்கள். ஐந்தாம் நாள் டாக்டரிடம் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல ஜுரம் அதிகமாயிற்று. என் வயிற்றிலும் ஏதோ ஒன்று ஜுர வேகத்தில் புகுந்தது. உடம்பை என்னவோ செய்தது. 'ஐயோ! அந்தப் பெண் பிழைக்க வேண்டுமே' என்று கவலைப்பட்டேன். என் கவலை அதிகமாக அதிகமாக லக்ஷ்மிக்கும் உடம்பு அதிகமாயிற்று.

கடைசியில் ஒரு விதமாக முடிந்தது. அத்துடன் என் பொறாமைக் குணமும் முடிந்தது. லக்ஷ்மி தன்னுடைய ஒரே குழந்தையை, என்னுடைய ஒரே குழந்தையை என்னை நம்பி, என்னுடைய காலடியில் கிடத்தி விட்டுக் கண்ணை மூடி விட்டாள்.

நான் கதறினேன், அழுதேன், புலம்பினேன். மூன்று நாட்கள் தூங்கவில்லை, உண்ணவில்லை, உடுக்கவில்லை. "அநியாயமாய் என் லக்ஷ்மியை நானே கொலை செய்து விட்டேன். என்னுடைய அசுர குணமே அவளைக் கொன்று விட்டது. என் பொறாமைத் தீயே அவளைப் பொசுக்கி விட்டது" என்றெல்லாம் சொல்லிச் சொல்லிப் பிரலாபித்தேன். நான் பிரலாபித்து என்ன செய்ய? போனவள் திரும்பி வரப்போகிறாளா?

லக்ஷ்மியின் வயிற்றில் பிறந்த என்னுடைய குழந்தைக்கு என் சகோதரியின் சாயல் இருந்தது. அவளைப் பார்த்துப் பார்த்து என்னுடைய துக்கத்தைப் போக்கிக் கொண்டேன். அதற்கு நோவு நொடி வராமல் அதைக் காப்பாற்றினேன். அது வளர வளர என் உள்ளத்தில் இனம் தெரியாத ஏதோ ஒரு பயம் வந்து என்னைக் கவ்விக் கொண்டது. "ஆண்டவனே! இரும்பவும் என் உள்ளத்தில் ஏதாவது ஒரு அசுர குணத்தைப் புகுத்தி விடாதே, என் அப்பனே!" என்றெல்லாம் கடவுளை வேண்டிக் கொள்ளுவேன். கடவுள் புண்ணியத்தில் அப்படியெல்லாம் நான் கொடியவளாகி விடவில்லை. பதினைந்து வருஷங்கள் அந்தக் குழந்தையைக் கட்டிக் காத்தேன். நல்ல இடத்தில் அந்தக் குழந்தைக்கு விவாகமாயிற்று. என்னுடைய எல்லா நகைகளையும் அந்தக் குழந்தைக்குச் சீதனமாகக் கொடுத்தேன்.

அவள் கணவனுடன் சந்தோஷமாக வாழ்கிறாள். எனக்கு மட்டும் ஒரு குறை. நம்முடைய லக்ஷ்மி தன்னுடைய குழந்தை சௌக்கியமாக வாழ்வதைப் பார்த்து மகிழக் கொடுத்து வைக்கவில்லையே என்று. அந்தக் குறை என் மண்டை உள்ளளவும் நீங்கப் போவதில்லை. நான் வருந்துவதுதான் மிச்சம்.

நினை நினைந்து கொண்டே கடிகாரத்தில் மணி என்னவென்று பார்த்தேன்.

ஆறு அடிக்கப் பத்து நிமிஷம் இருந்தது. காலையில் போட்ட இலை அப்படியே இருந்தது.

பித்துப் பிடித்தவள், போல உட்கார்ந்திருந்தேன். "அதென்ன விளக்குக்கூட ஏற்றுமல் அப்படி என்ன யோசனை? கையிலே என்ன கடிதாசி?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் என் கணவர்.

அவர் கையிலே கடிதத்தைக் கொடுத்து விட்டு, "குழந்தை நாலு மாசமாய் ஸ்நானம் செய்யாமல் இருக்கிறாளாம். பிறப்பது ஐந்தாம். சம்பந்தி எழுதியிருக்கிறார்" என்று சொல்லி விட்டு 'ஓ' வென்று கதறி விட்டேன்.

என் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியை ஒருவாறு அறிந்து கொண்ட என் கணவர், "நன்றாய் இருக்கிறது நீ அழுவது" என்றார்.

"இந்தக் குழந்தையாவது பெற்றுப்பிழைக்க வேண்டுமே!" என்று சொல்லிவிட்டு அவருடைய பாதங்களில் விழுந்தேன்.


அவர் என்னைத் தூக்கி நிறுத்த முயன்றார். அவர் கண்களிலும் நீர் நிரையிட்டது.

"நகை அறு குணங்கள் என்னும்
பூணெலாம்
பொறுத்த மேனிப் புண்ணியன்"

என்று சீதாப்பிராட்டி ராமபிரானைச் சொல்லுவாளாம். என் கணவரை நானும் அப்படித்தான் சொல்லுவேன்.



HAZELINE SNOW
முக்கியமாக நான் கவனிப்பது...
..."'ஹாஸலீன்' ஸ்னோ" வாங்கும்பொழுது,
அதைச் சுற்றியிருக்கும் வெள்ளி நிற அலுமினியத் தகடு, மற்றும் மேற்பாகத்தில் காணப்படும் நீல நிற யூனிகார்ன் சின்னம், இவை ஒழுங்காக இருக்கின்றனவா என்று சோதித்தே வாங்குகிறேன். இதுவே நேர்த்தியான சுத்தத்தன்மைக்கு உத்திரவாதம் அளிக்கும் அசல் "'ஹாஸலீன்' ஸ்னோ" என நான் தீர்மானிக்கிறேன்.
"'HAZELINE' SNOW"
(TRADE MARK)
"'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்)
பர்ரோஸ் வெல்கம் & கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
பி. ஓ. பாக்ஸ், 290, பம்பாய்



## விஷயம் சுலபமான கணித சாம்யமேயன்றி வேறல்ல

கைத் திறமை
+
பாரம்பரை வழக்கம்
× அனுபவம் = இணையற்ற தரம்

ஸ்விட்ஸர்லாந்து ஒரு சிறு மலைப்பாங்கான தேசம். அந்நாட்டின் நிலப்பரப்பில் எட்டில் ஒரு பங்குதான் சாகுபடிக்கு ஏற்றது. தவிர அந்நாட்டில் உலோகப் பொருள்களோ, இயற்கை சாதனங்களோ இல்லையென்றுகூடச் சொல்லலாம். அந்நாட்டின் வாழ்க்கை நாட்டு மக்களின் கைத்திறமையில்தானிருக்கிறது. அதாவது அவர்கள் கைத் திறமையினால் பொருள்களைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதில் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் மற்றும் தயாரிப்புகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் இவைகளை வெளி நாடுகளிலிருந்து வாங்கவேண்டியிருப்பதால்தான், ஸ்விட்ஸர்லாந்தின் ஏற்றுமதிப் பொருள்களில் மிக முக்கியமானது நேர்த்தியான ஜுவெல்ட்—லீவர் கடிகாரம் கடிகாரத் தயாரிப்பு ஸ்விட்ஸர்லாந்து மக்களின் பாரம்பரைத் தொழில். இப்பாரம்பரைத் தொழில் கடந்த மூன்று நூற்றாண்டுகளில் அபிவிருத்தி அடைந்து நேர்த்தியான 8 நவீன கைத் தொழிலாகக் கலைத் திறனில் முன்னேறி உலகிலேயே ஈடு இணையற்றதாக விளங்குகிறது. இக் கைத் தொழில் ஸ்விட்ஸர்லாந்தின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமாதலால் அந்நாட்டு கடிகாரத் தொழிலாளர்கள் தங்களுடைய திறமை, கலை, அறிவு இவைகளை அர்ப்பணம் செய்து கடிகாரத் தயாரிப்பில் முன்னணியில் நிற்பதை நிலைநாட்டுகின்றனர். ஆகையால் நீங்கள் ஸ்விட்ஸர்லாந்து ஜுவெல்ட்—லீவர் கடிகாரத்தையே வாங்குங்கள். அதனால் உங்களுக்கு உயர்ந்த ரகம், கை தேர்ந்த வேலைப்பாடு இவைகளோடு வெகு நாட்களுக்கு நம்பகமாக உழைக்கவல்ல கடிகாரம் கிடைப்பது நிச்சயம். உங்கள் கடிகார வியாபாரியின் அனுபவம் உங்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

ஜுவெல்கள் பொருத்தப்பட்ட ஸ்வீஸ்—லிவர் கடிகாரம் ஒரு அவசியமான தேவை பொருளேயன்றி ஆடம்பரத்திற்கல்ல

**ஸ்விட்ஸர்லாந்து கடிகார தயாரிப்பாளர்கள்**

FH666-TAM

# முதல் எழுத்து

காக்கை ஒன்று வந்தது
காகா காகா என்றது


குயிலும் ஓடி வந்தது
குகூ குகூ என்றது

கிளியும் பறந்து வந்தது
கிகி கிகி என்றது

முழுப் பெயரையும் கூறவே
முடிய வில்லை யாதலால்,

முதல் எழுத்தை மட்டுமே
மூச்சைப் பிடித்துக் கூறுமே.

அழ. வள்ளியப்பா



மணப்புயல்
சித்திரத் தொடர் கதை (1)
சென்னைக் கடற்கரை. மாலைக் கதிரவனின் பொற் கிரணங்கள் அலைகடலின் அன்புப் பிணைப்பிலே தவழ்ந்து விளையாடும் நேரம். வெண் மணற் பரப்பிலே இவ்வுலகை மறந்து இன்ப வாரிதியிலே மூழ்கியிருக்கும் இளம் உள்ளங்கள்.
ஹேமா! வீணையும் நாதமும் போல நாம் இணை பிரியாமல் இருக்க வேணும்!
முரளி! அதுவே என் ஆசை!
கடற்கரைக்கு உல்லாசமாக வந்தாள் விமலா. ஆனால் அவள் கண்ட காட்சி...
யாரது? ஹேமா... முரளி!.. பேஷ்!..
என் அருமைத் தோழி
தன் காதலை என்னிட
மறைத்து விட்டா


நாளைக்குக் கலா
சாலைக்கு வரட்டும்!
பேசிக் கொள்வோம்!
மறுநாள்
நான் கல்லூரிக்குப்
போயிட்டு வரேன்,
அப்பா!
சரி, அம்மா!
சீக்கிரம் போப்பா!
நேரமாயிருக்கு!
அன்று கலாசாலை ஒரேபரபரப்பாக இருந்தது!
என்ன ஒரே
கூட்டம்?
ஹேமாவுக்கும்
முரளிக்கும் பகிரங்கத்
திருமணம்
வரவேற்பு:
சகமாணவர்கள்
ஐயோ! இது யாருடைய
வேலை?
தொடரும்






படத்தில் உள்ளது போல் ஒரு மீன் பொம்மை வரைந்து அதைக் கத்திரித்து எடுத்துக் கொள்ளுங்கள். நடுவில் ஒரு வட்டமான துவாரம் செய்து அந்தத் துவாரத்திலிருந்து வாய்க்கால் போல் வால் வரையில் ஒரு வழி வெட்டிக் கொள்ளுங்கள். பிறகு அந்த மீனைத் தண்ணீரில் போட்டு நடுவில் உள்ள துவாரத்தில் இரண்டு சொட்டு நல்லெண்ணெயை விட்டால் எண்ணெய் தண்ணீரில் பரவ ஆரம்பிக்கும். அப்பொழுது மீனும் நீந்துவதைப் பார்க்கலாம்.



முள்ளம்பன்றி :— நீங்கள் கொடுத்த முதுகு வலி மருந்து இந்தாருங்கள். யாரும் அதை என்னுடைய முதுகில் ! தேய்க்க முன் வர மாட்டேன் என்கிறார்கள் !




'எவரெஸ்டு சிகரம் கண்டு பிடிப்பதற்கு முன்னால் உலகிலேயே உயரமான மலையாக இருந்தது எது?' என்று உங்கள் நேநிதரைக் கேளுங்கள். நிச்சயம் அவர்கள் வேறு ஏதாவது மலையைச் சொல்வார்கள். அதுதான் இல்லை. எவரெஸ்டேதான் !

கோழி ஒன்று ஒரே முட்டை தான் இட்டது. தனக்குப் பிறக்கப் போகும் குஞ்சை நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டது. அடை காத்துக் குஞ்சும் பொரித்தது. ஆனால் குஞ்சோ எல்லாக் கோழிக் குஞ்சுகளையும் போல இராமல் நூதனப் பிறவியாக இருந்தது. கோழிக்கு இது மிகவும் வேதனையாக இருந்தது. கோழி எங்கே சென்றாலும் குஞ்சுவும் கூடவே போயிற்று. குஞ்சு நூதனமாகச் சரீரத்தை ஆட்டி ஆட்டிக் கொண்டு நடந்தது. இதைப் பார்த்த மற்றக் கோழிகள் பரிகசித்தன. ''குஞ்சு எப்படி இருந்தாலும் அது என் குஞ்சுதான். ஆகையால் நான் அதை அன்போடு வளர்ப்பேன்'' என்றது கோழி.

ஒரு நாள் கோழி மேய்வதற்காக ஆற்றங்கரை யோரமாகப் போயிற்று. திடீரென்று குஞ்சு தண்ணீருக்குள் பாய்ந்துசென்றது. கோழி உடனே அலறியது. ''என் ஆசைக் குஞ்சே! நீ இறந்து போவாய். தண்ணீரில் இறங்காதே!'' என்று எச்சரித்தது. ஆனால் என்ன ஆச்சரியம்! ஆனால் கோழி பயப்பட்டதைப் போல் குஞ்சுவுக்கு ஒன்றும் ஆபத்து ஏற்பட்டு விடவில்லை. குஞ்சு ஆனந்தமாக நீந்தியதைப் பார்த்த கோழிக்கு இப்பொழுதுதான் விஷயம் புரிந்தது. கோழி முட்டை மாறிப் போய் வாத்தின் முட்டையை அல்லவா அந்தக் கோழி குஞ்சு பொரித்து விட்டது!

''தாயில்லாத அந்தக் குஞ்சை என் குஞ்சைப்போலவே ஆசையோடு வளர்ப்பேன்!'' என்று கோழி தன் மனத்துள் உறுதி செய்து கொண்டது.





புதிய திட்டங்களிலும் ப்ராஜெக்ட்களிலும்
பெயிண்ட்கள்
...இந்தியாவின் புதிய திட்டங்கள் யந்திரத்தொழில் அமைப்புக்கள் இவைகளின் பலவிதமானதும், விசேஷம் பொருந்தியதும், அதிகரித்துக்கொண்டே வருகிறதுமான தேவைகளைச் சமாளிக்க, ஷாலிமார் பெயிண்ட்கள், நீடித்த உழைப்பு, நல்ல பாதுகாப்பு அளிப்பதோடுகூட, சாஸ்திரீயமாகவும், கலாரீதியாகவும் திருப்தி உண்டு பண்ணும் வகையிலும், தயாரிக்கப்படுகின்றன.
...ஏனெனில், இந்தியாவில் ஷாலிமார் பெயிண்ட் கம்பெனியாருக்கு மட்டுமே 55 ஆண்டுகளுக்கு மேலாக பெயிண்ட் தயாரிக்கும் அனுபவம் இருந்து வருகிறது.
எந்த உபயோகமாயினும் பெயிண்ட் ஆர்டர் செய்யும்பொழுது அவ் உபயோகத்தை தெரியப்படுத்தவும்
SHALIMAR
ஷாலிமார்
பெயிண்ட்கள்
ஷாலிமாரின் எல்லாவித பெயிண்டகளின் முழு விபரங்களுக்கு ஷாலிமார் செடி செபரன்ஸ் லிமிடெட், தபால் பெட்டி 68, கல்கத்தா-1க்கு கேட்டு எழுதவும்.
SPW 360




## 6. சித்திரக் குள்ளர்கள்

கொஞ்சதூரம் சென்றதும் காட்டுக்கு மத்தியில் ஏழு அழகான குடிசைகள் காணப்பட்டன. "இவைதான் நாங்கள் வசிக்கும் குடிசைகள். நீங்கள் இன்று எங்கள் குடிசையில் தங்கி இளைப்பாறிவிட்டு நாளைக் காலையில் போகலாம். இந்த ஆலமரத்தடியில் உட்காருங்கள். சற்றுப் பேசலாம்" என்று சித்திரக் குள்ளர்களுக்குத் தலைவனாகத் தோன்றிய சித்திரக்குள்ளன் சொல்லவே எல்லோரும் உட்கார்ந்தார்கள்.

உடனே சித்திரக்குள்ளர்களின் தலைவன் "நீங்கள் யார்? ஒருவருமே வராத இந்தக் காட்டுக்கு ஏன் வந்தீர்கள்? பயப்படாமல் சொல்லுங்கள். நாங்கள் ஏழு பேர்களும் பிறருக்கு நன்மை புரிவதிலேயே எங்கள் காலத்தைக் கழிப்பவர்கள்" என்று சொன்னான். அதைக் கேட்டதும் ரவி சித்திரக்குள்ளர்கள் நேர்மையுள்ளவர்கள் என்று அறிந்து தன்னைப் பற்றியும் தங்கை கலாவைப் பற்றியும் விவரமாகத்தான் புறப்பட்டதிலிருந்து சித்திரக் குள்ளர்களைச் சந்தித்தது வரையிலும் சொன்னான்.

அதைக் கேட்ட சித்திரக் குள்ளர்கள் ஆச்சரியத்தால் அயர்ந்து போய் விட்டார்கள். "ஆகா! நீங்கள் இருவரும் பிரசித்திபெற்ற மால்மாவின் குழந்தைகளா? உன் பெயர் ரவி என்றுதானே சொன்னாய்! இனி உன்



பெயர் மால்கோஷ்! இந்தப் பெயரை நீ வைத்துக் கொண்டால் இதனுல் உனக்குப் பிறகு ஒரு நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும். மால்கோஷ் ஒரு அதிர்ஷ்டப்பெயர். மறக்காதே!'' என்ருன் குள்ளர்களின் தலைவன்.

ரவி முகமலர்ச்சியுடன், ''உங்கள் இஷ்டப்படியே என் பெயரை மால்கோஷ் என்று மாற்றிக் கொள்கிறேன்'' என்ருன்.

அதைக் கேட்ட சித்திரக்குள்ளர்களின் தலைவன், ''மால்கோஷ்! நாங்கள் ஏழு பேர்களும் இணைபிரியா நண்பர்களாகப் பல வருஷங்கள் இங்கே வாழ்ந்து வருகிறோம். நாங்களும் எங்களுடைய மூதாதையர்களிலிருந்து மந்திர சக்தி பெற்றவர்கள்தான். எங்களைச் சூரியன் அஸ்தமித்த பிறகு ஒருவரும் மந்திரங்களினுல் ஒன்றும் செய்ய முடியாது. குடிசைக்குள் இருக்கும் பொழுதும் ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது. பகலில் எங்கள் குடிசையை விட்டு வெளியே வந்தால் அப்பொழுது யார் வேண்டுமானுலும் எங்களை அவர்களுடைய மந்திரசக்தியால் கட்டுப் படுத்தலாம். ஆனுல் எங்களுக்குப் பரம்பரையாகக் கிடைக்கப் பெற்றுள்ள எங்களுடைய வெள்ளைக் குல்லாய்களை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது. மற்ருெரு முக்கிய விஷயம் என்னவென்ருல் நாங்கள் வெளியில் இருக்கும் பொழுது ஏழு பேர்களும் ஒருவருக்கொருவர் கைகளைப் பிடித்திருந்தால் எந்த மந்திர சக்தியும் எங்களை ஒன்றும் செய்யாது. எங்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு மந்திர சக்தியின் உதவியால் மந்திரக் கிழவியால் பாதிக்கப் பட்ட பல பேர்களுக்கு உதவி செய்திருக்கிறோம். அதனுல் எங்கள் ஏழு பேர்களையும் கண்டாலே பிடிக்காது. எப்பொழுதும் நாங்கள் பகலில் தனியாக இருப்போம் என்று எதிர்பார்த்தபடியே இருப்பாள். இன்றைய தினம் அவள் நாங்கள் வசிக்கும் இடத்துக்குச் சமீபத்தில் வந்ததினுல் நாங்கள் முன்ஜாக்கிரதையாக ஒருவருக்கொருவர் கைகளைக் கோத்துக் கொண்டிருந்தோம். மந்திரக் கிழவியும் பின்தொடர்ந்து கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் நீயும், உன் தங்கையும் மந்திர ஜமக்காளத்தில் கீழே இறங்கினீர்கள். நாங்கள் திடீர் என்று எங்கள் வாழ்க்கையிலேயே பார்க்காத சம்பவத்தைப் பார்த்தவுடன் எங்களை அறியாமல் பிடித்துக் கொண்டிருந்த கைகளை உதறித் தள்ளி விட்டு ஓட ஆரம்பித்தோம். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மந்திரக் கிழவி எங்களை மரங்களாக மாற்றி விட்டுச் சென்று விட்டாள். நல்லவேளையாக எங்களுடைய குல்லாய்களின் உதவியைக் கொண்டு எங்களைப் பிழைக்க வைத்தீர்கள்'' என்று நன்றிப் பெருக்கோடு சொன்னுன்.

அன்று இரவு மால்கோஷும் கலாவும் சித்திரக்குள்ளர்களிடம் தங்கி விட்டு மறுநாள் புறப்படத் தயாராக இருந்தார்கள். உடனே சித்திரக் குள்ளர் தலைவன் கலாவிடம் வெள்ளியினுல் செய்யப்பட்ட பளபளப்பான ஒரு அங்குலம் உயரமுள்ள சிறிய பூஜை மணியைக் கொடுத்தான். ''ஏதோ சிறிய மணி என்று இதை





சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு எந்த விஷயத்தில் எப்படி ஆர்வம் ஏற்படுகிறது என்பதைப் பெரிய மனத்தத்துவ நிபுணர்கள் கூடப் புரிந்து கொள்வது சிரமம். ஸ்டாம்ப் சேகரித்தல், தீப்பெட்டிப் படம் சேர்த்து வைத்தல், நாணயங்கள் சேகரித்தல் முதலியவற்றில் குழந்தைகளுக்கு ஆர்வம் இருப்பதைக் காண்கிறோம். இந்தச் சிறுமி மல்லிகாவுக்குச் சித்திரத்திலே அபாரப் பிரேமை. 1955ம் வருஷத்தில் வந்துள்ள கல்கி இதழ்களின் மூவர்ண அட்டைச் சித்திரங்களை மிகுந்த சிரத்தையோடு தொகுத்து வைத்து அவற்றைக் கண்ணைக் கவரும் அழகான 'ஆல்ப'மாகத் தயாரித்து நமக்கு அனுப்பி வைத்திருக்கிறாள். சிறுமி மல்லிகா விழுப்புரம் ஸ்ரீ நடராஜா உயர்தர ஆரம்பப் பள்ளியில் ஐந்தாவது வகுப்பில் பயின்று வருகிறாள். சின்னஞ் சிறு வயதிலேயே சித்திரக் கலையில் இவள் காட்டும் ஆர்வம் வருங்காலத்தில் இந்தச் சிறுமி சித்திரக் கலைஞராவதற்குத் தூண்டு கோலாயிருக்கும் என்று நம்புகிறோம்.



எண்ணாதே. இதில் உள்ள மந்திர சக்தி மிகவும் பலமானது. உன் அண்ணனிடம் மந்திரப் பந்து இருக்கிறது. உன்னிடம் மந்திர மணி இருக்கட்டும். மந்திரப் பந்து போல இந்த மணி அவ்வளவு சக்தி வாய்ந்ததல்ல என்றாலும், உனக்கு ஏதாவது ஆபத்து நேரிடும் போது இந்த மணியை நாலு அல்லது ஐந்து முறைக்கு மேல் சேர்ந்தாற் போல் 'கிடுகிடு' என்று ஆட்டினால் எங்கள் ஏழு பேர்களுடைய காதுகளிலும் 'டிங்டாங்' என்ற பலத்த ஓசை கேட்கும். உடனே நாங்கள் ஓடோடியும் வந்து உதவி செய்வோம். ஆனால் நீ ஏதாவது மந்திர சக்தியினால் கட்டப் பட்டிருந்தாய் என்றால் நீ இந்த மணியை அடித்தாலும் எங்களுடைய காதுகளில் விழாது. சாதாரணமாக நீ ஏதாவது ஆபத்தில் சிக்கிக் கொண்டாயானால் இந்த மணி உனக்கு உபயோகப்படும். இதை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்" என்று கூறினான்.

பிறகு சித்திரக் குள்ளர் தலைவன் மால் கோஷைப் பார்த்து, "மால்கோஷ்! நானும் என்னுடைய சிநேகிதர்களும் இனிமேல் உங்களுடைய நண்பர்கள். சீக்கிரத்தில் நாங்கள் உன் தகப்பனாரைச் சந்தித்து, எல்லா விவரங்களையும் சொல்கிறோம். முக்கியமாக உன் பெயரை மாற்றி வைத்திருப்பதைச் சொல்லிவிடுகிறோம்! சமயம் வரும் பொழுது நாங்கள் உங்களைச் சந்திக்கிறோம். ஆனால் நீங்கள் புறப்படுவதற்கு முன்னால் ஒன்று சொல்ல விரும்புகிறேன்" என்றான்.

"இவ்விடத்திலிருந்து சில மைல்களுக்கு அப்பால் கிழக்குத் திசையில் பல்லாங்கு என்ற ஒரு பெரிய பட்டணம் இருக்கிறது. அந்தப் பட்டணத்துக்குச் சமீபத்தில்தான் எங்களை மரங்களாக மாற்றிய மந்திரக் கிழவி வசிக்கிறாள். அவள் பூமியில் இருக்கும் வீட்டில் வசிப்பதில்லை. அந்தப் பட்டணத்தின் ஒரு மூலையாக ஒரு பெரிய செங்குத்தான மலை இருக்கிறது. அந்த மலையின் உயரம் சுமார் ஒரு மைல் இருக்கலாம். அந்த மலையின் உச்சியில் ஒரு வீடு கட்டிக் கொண்டு மந்திரக் கிழவி வசிக்கிறாள். அந்த மலை உச்சிக்கு யாரும் எளிதில் போக முடியாது. ஜனங்கள் போக்கு வரத்தே கிடையாது. மந்திரக் கிழவி மாத்திரம் மலை உச்சிக்கு ஏறும் பொழுதும் அல்லது இறங்கும் பொழுதும் ஒரு பறவை உருவமாகப் பறந்து செல்லுவாள். ஜமக்காளத்தில் பறக்கும் பொழுது நீங்கள் இருவரும் வேடிக்கையாகக் கூட அனுவசியமாக மலை உச்சியின் சமீபத்தில் பறந்து செல்ல வேண்டாம். அந்தப் பட்டணத்தில் உள்ளவர்கள் அனைவரும் மந்திரக்கிழவியின் உபத்திரவம் தாங்காமல் தவிக்கின்றனர். எங்களாலும் அந்தப் பட்டணவாசிகளுக்கு உதவி செய்ய முடியாமல் திரும்பி வந்தோம். உங்களால் முடியுமானால் அவ்வூர் ஜனங்களுக்கு உதவி செய்வதற்குப் பாருங்கள்" என்று கூறினான்.

மால்கோஷ், "ஐயா! நாங்கள் இங்கிருந்து நேராகப் பல்லாங்குப் பட்டணத்துக்குச் செல்லுகிறோம். எங்களால் முடியுமானால் அங்கிருக்கும் ஜனங்களுக்கு உதவி செய்யப் பார்க்கிறோம். ஜனங்களுக்குச் சேவை செய்வதும், எங்கள் பிரயாணத்தின் மூலம் புதுப் புது அநுபவங்களை அறிந்து கொள்வதும்தான் எங்களுக்கு மகிழ்ச்சிதரும்!" என்றான்.

சித்திரக்குள்ளர்கள் ஏழு பேர்களும் சந்தோஷ ஆரவாரத்தோடு மால்கோஷையும், கலாவையும் ஆசீர்வதித்து வழி அனுப்பினார்கள். மந்திர ஜமக்காளமும் மால்கோஷையும், கலாவையும் சுமந்து கொண்டு ஆகாயப் பாதையில் கிழக்குப் பக்கமாகச் சென்றது. (தொடரும்)

# மக்ளீன்ஸ் *இப்போது* பற்களை முன்னைவிட அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது!




மகத்தான ஓர் செய்தி! மக்ளீன்ஸ் தயாரிப்பில் இப்போது வியக்கத்தக்கதோர் புதிய பொருள் சேர்க்கப்படுவதால் அதை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யும்பொழுது பற்கள் முன்னை விட அதிவெண்மையாகவும் சுத்தமாகவும் விளங்குவதுடன் நல்ல ஆரோக்கியத்தைக் குறிக்கின்றது. நீங்களும் மக்ளீன் பற்பசையை உபயோகித்து உங்கள் பற்கள் எவ்வளவு வெண்மையாக விளங்குகின்றன 'என்று கவனியுங்கள்.

## மக்ளீனால் வெண்மையாக்கப்பட்ட பற்கள்

### ஆரோக்கியமானதுமட்டுமல்லாமல் பற் சிதைவினின்றும் காப்பாற்றப்படுகின்றன

மக்ளீன்ஸ் பற்பசையினால் பற்களை சுத்தம் செய்யுங்கள். முதலில் குளுமையும் புதுமை மணம் கமழுவதையும் உணர்வீர்கள். பின்பு பற்கள் முன்னைவிட அதிவெண்மையாக சுத்தம் செய்யப்பட்டிருப்பதை குறிக்கின்றது. உங்களுடைய பற்களின்மேல் படர்ந்திருக்கும் வழுவழுப்பான அசுத்தத்தில் 'லைப்பாவிட்ஸ்' என்று கூறப்படும் அசுத்தம் கலந்திருக்கிறது இந்த 'லைப்பாயிட்ஸ்' முறையே சரிவர அகற்றப்படா விட்டால் அமிலங்கள் பற்களின் இனாமலை அரித்து, பற்கள் சிதைவடைகின்றன. 'லைப்பாயிட்ஸ்'ஸை அறவே அகற்ற, இதை கரையச் செய்வதுதான் சரியான வழி. மக்ளீன்ஸ் பற்பசை ஒன்றில் மட்டுமே 'லைப்பாயிட்'ஸை கரைக்கக்கூடிய விசேஷ பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது 'லைப்பாயிடஸை' மிருதுவாக, அபாயமின்றி. சீக்கிரத்தில் கரைந்து அப்புறப்படுத்துகிறது. இதுவே பற் சிதைவினின்றும் பற்களைத் தவிப்பதற்கான சிறந்த மார்க்கம்.

சுத்தமான, வெண்ணிற, ஆரோக்கிய பற்களை அடைய தினந்தோறும் காலையிலும் இரவிலும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யுங்கள்.

**மக்ளீன்ஸ் பற்களை அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது**




MIY 43 TAM

அத்தியாயம் 17

# நெஞ்சம் இனித்தது

**வெ**கு நேரம் மாதவி இவ்வாறு தவித்தபின் சிவசங்கரனும் கருணாகரனும் காட்டுக்குள்ளேயிருந்து வந்தார்கள். மாதவிக்கு அவர்களைப் பார்த்ததும் சிறிது மன நிம்மதி ஏற்பட்டது.

கருணாகரன் தன் தமக்கையைப் பார்த்ததும் "அக்கா, நான் இவருடைய திறமையைப் பற்றி நேற்று சந்தேகப்பட்டேன் அல்லவா? இன்று தான் இவர் கடுவதில் எவ்வளவு பழக்கமுள்ளவர் என்பதைத் தெரிந்து கொண்டேன். இவர் மாதிரி ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் குறி பார்த்துச் சுடமுடியும்" என்றான் உற்சாகத்தோடு.

சிவசங்கரன் களைப்பாகக் காணப்பட்ட போதிலும், முகத்தில் சந்தோஷம் தெரிந்தது.




மாதவிக்கு அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படவில்லை. "சீக்கிரம் குளித்து விட்டு வாருங்கள். சாப்பிடலாம்" என்று அசுவாரஸ்யமாகக் கூறினாள்.

இருவரும் கொஞ்சம் ஆழமாக இருந்த இடத்தில் இறங்கி நீராடி விட்டு வந்தார்கள். அந்த அழகான செப்புப் பிரம்புக் கூடையிலிருந்து சாமான்களை எடுத்து வெளியே வைத்தாள் மாதவி. இலைகளையும் எடுத்தாள்.

"நீங்கள் ரொம்பக் களைத்துப் போய் விட்டீர்கள் போலிருக்கிறதே. நாங்கள் வரத் தாமதமாய் விட்டதல்லவா?" என்றார் சிவசங்கரன்.

"களைப்பு ஒன்றுமில்லை. இங்கே சும்மாத்தானே இருந்தேன்?" என்றாள் மாதவி. ஆனாலும் அவள் குரலில் சோர்வு தெரிந்தது.

அவர்கள் இருவரும் சாப்பிட்ட பிறகு மாதவி பாத்திரங்களை மூடிக் கூடையில்



வைத்தாள். அதைக் கண்ட சிவசங்கரன் திடுக்கிட்டு, ''உங்களுக்கு இல்லாமலா நாங்கள் சாப்பிட்டு விட்டோம்?'' என்று கேட்டார்.

''ஒரு வேளை அக்கா நாம் வருவதற்கு முன்னமேயே சாப்பிட்டிருப்பாள்'' என்று கூறிவிட்டுக் கருணாகரன் இலேசாகச் சிரித்தான்.

''வேண்டிய உணவு இருக்கிறது. ஆனால் சாப்பிடத்தான் எனக்குப் பிடிக்கவில்லை. மறுபடியும் வேட்டைக்குப் போக வேண்டுமா? அல்லது வீட்டுக்குக் கிளம்பலாமா?'' என்று கேட்டாள் மாதவி.

''இவ்வளவு சீக்கிரம் ஏன் போக வேண்டும் அக்கா? மாலை வரையில் இருப்பதாகத்தானே வந்தோம்? ஏன் நீ அவசரப்படுகிறாய்?''

''எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை. வேதனையாக இருக்கிறது.''

''ஏன்? என்ன வேதனை?''

''எனக்குத்தான் மிருகங்களை வேட்டையாடுவது பிடிக்காதென்று உனக்குத் தெரியுமே, தம்பி. காட்டில் உலாவும் மிருகங்களைத் தேடிப் பிடித்து அநாவசியமாகக் கொல்வதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.''

''பின்னே நீ ஏன் வந்தாய்?''

''இந்த இடத்துக்கு வந்து ரொம்ப நாளாயிற்று. இங்கே குளிக்க வேண்டும் என்று தோன்றியது. வந்தேன்.''

''உங்களுக்குத் துப்பாக்கியால் சுடுவது பயமாக இருக்கிறதா, மாதவி?'' என்று கேட்டார் சிவசங்கரன்.

''எனக்குப் பயம் இல்லை. ஆனால் அருவருப்பாக இருக்கிறது. எனக்கு எப்போதுமே இது பிடிக்காது. இன்று இந்த இடத்துக்கு வரவேண்டுமென்று தோன்றியதால் உங்களுடன் வந்தேன். வெடிகளின் சத்தம் கேட்டபோதெல்லாம் வேதனையாக இருந்தது.''

''இனிமேல் நாங்கள் போகவில்லை. இங்கேயே இருக்கிறோம். நீங்கள் வேதனைப்பட வேண்டாம்.''

''ரொம்ப அழகாக இருக்கிறதே! இதனால்தான் பெண்களை யாரும் வேட்டையாடும் இடத்துக்கு அழைத்துச் செல்வதில்லை. நீ எங்களுடன் வந்தது எனக்கு அப்போதே சம்மதமாக இல்லை. ஆனால் நீ ஆசையுடன் வரும்போது, வேண்டாம் என்று தடுக்கவும் முடியவில்லை. இங்கே வந்து உட்கார்ந்து கொண்டு வேதனைப் பட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று கருணாகரன் கேட்டான்.

''ஆமாம்! இந்தக் காட்டு மிருகங்களைத் துன்புறுத்துவது தவறு என்கிறீர்களே! அவைகள் மட்டும் ஊருக்குள் வந்து நம்மைத் துன்புறுத்துகின்றனவே, அது மாத்திரம் சரியா?'' என்று வினவினார் சிவசங்கரன்.

''மிருகங்களின் சுபாவம் அது. அவை வந்து நம்மைத் துன்புறுத்தினால் தற்காப்புக்காக அவைகளைக் கொல்வதை நான் தவறென்று சொல்ல மாட்டேன். ஆனால் காட்டுக்குள் தேடிப் போய் அவற்றைக் கொல்வதுதான் பாவம் என்று தோன்றுகிறது.''

''இனிமேல் நீ இங்கு வராதே. மற்றவர்கள் ஏதாவது செய்தால் அதற்காகக் கவலைப்பட்டு உன்னையே துன்புறுத்திக் கொள்ளாதே, அக்கா. நீ இப்போது வீட்டுக்குப் போகப் போகிறாயா?'' என்றான் கருணாகரன்.

''வேண்டாம், கருணாகரன். மாதவியைத் தனியாக அனுப்ப வேண்டாம். நாமும் இங்கே இருந்துவிட்டுச் சிறிது நேரம் கழித்துப் போகலாம்.''

''நீங்கள் இங்கே இருங்கள்; நான் மட்டும் காட்டுக்குள் மறுபடியும் போய் ஏதாவது அகப்படுகிறதா என்று பார்த்து விட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கருணாகரன் சென்றான். மாதவிக்கு அவனைப் போகவேண்டாம் என்று சொல்லித் தடுக்க முடியவில்லை.

இருவரும் சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

''மாதவி! நீங்கள் என்னை வேட்டையாடக் கூடாது என்றால் இனிமேல் போகவில்லை. அதற்காக நீங்கள் வருத்தப்படாதீர்கள்'' என்றார் சிவசங்கரன்.

''நீங்கள் எனக்காகப் போகாமலிருப்பதால் ஒரு பிரயோசனமும் இல்லை. உங்களுக்கே தோன்றி, அதை உணர்ந்து செய்யாமலிருந்தால் தான் அதற்குப் பயன் உண்டு'' என்றாள் மாதவி. அதன் பிறகுதான் அவர் தனக்காக ஒரு காரியம் செய்வதை விட்டு விடுகிறேன் என்று சொல்கிறார் என்பது அவளுக்கு உரைத்தது. மலர்ந்த கண்களால் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவருடைய முகத்தில் பரிவு ததும்பிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவரிடம் அவளுக்கு அந்தச் சமயத்தில் அளவில்லாத அன்பும் மரியாதையும் பொங்கின. இருவருக்கும் இடையில் பிரிக்க முடியாத பிணைப்பு ஒன்று ஏற்பட்டு விட்டது என்பதை இருவரும் உணர்ந்து கொண்டார்கள்.

அவர்களுடைய கண்கள் சந்தித்தன. இதயங்கள் கலந்தன. இருவரும் மெய் மறந்து உட்கார்ந்திருந்ததைக் கண்டு இயற்கையும் சலனமற்று நின்றது. மலையாறுகூட மெதுவாக நழுவி ஓடியது. பட்சிகள் தங்களுடைய பிரலாபங்களை


மார்கோ சோப்வேப்-
பெண்ணெயிலிருந்து
விஞ்ஞான முறையில்
தயாரிக்கப்பட்டு,
இனிய நறுமண
மூட்டப்படுகிறது.
மிருதுத் தன்மை
யுள்ள அதன் நுரை
விஷம் பரவாமல்
தடுத்து சுத்தமாக்கு
வதில் சக்தி வாய்ந்
தது மேனியை பிர
காசிக்கச் செய்யும்.
இளஞ்சருமத்திற்கும்
ஹானியற்றது.
நீங்கள் ஸ்னனம் செய்யும்போது
உங்கள்
MARGO
SOAP
HYGIENIC TOILET SOAP
மார்கோ
சோப்பை
மறந்து விடாதீர்கள்
தி கல்கத்தா
கெமிகல் கோ. லி.,
கல்கத்தா - 29
CMC-5 TA
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை -1

நிறுத்தின. வண்டுகளின் ரீங்கார சப்தமும், எத்தனையோ பூச்சிகளின் குரல் ஒலியும்கூட நின்றன.

மெதுவாகத் தவழ்ந்து வந்த மலய மாருதம், மாதவியின் கூந்தலில் புகுந்து விளையாடியது. அதைக் கண்ட சிவசங்கரனுக்கு எக்களிப்பு உண்டாயிற்று.

மாதவியின் பொற் கரத்தை எடுத்துத் தம் கையில் வைத்துக் கொள்ள வேண்டு மென்று அவருக்கு ஆசை உண்டாயிற்று. உடனே அந்த ஆசையைக் கட்டுப்படுத்திக் கொண்டார். எல்லை மீறி ஒன்றும் நடக்கவே கூடாது என்று உறுதி செய்து கொண்டு எழுந்து நின்ருர். மாதவியும் எழுந்தாள். இருவரும் தண்ணீர்க் கரையில் வந்து உட்கார்ந்தனர். மாதவி தண்ணீரைக் கையால் அளைந்து கொண்டே, "நான் இன்று வந்தது தவருகப் போயிற்று. வராமல் இருந்தால் உங்களுக்குப் பொழுது நன்ருகப் போயிருக்கும்" என்ருள்.

"இதைவிட எப்படி நன்ருகப் பொழுதுபோக முடியும் மாதவி?"

"நீங்கள் உண்மையாகவே அவ்வாறு கருதுகிறீர்களா? அல்லது உபசாரமாகக் கூறும் வார்த்தைகளா?"

"மாதவி! இதை நான் சொல்லித் தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா?"

"அப்படியாளுல் இவ்வளவு மரியாதை எதற்கு?"

"ஆகா! இப்பொழுது என் உள்ளம் கூறுவதை நான் நம்பலாமா?"

"உள்ளம் எப்போதும் பொய் சொல்வதில்லை. நம்முடைய அறிவுதான் நம்மைக் குழப்பி விடுகிறது."

சிவசங்கரனுக்கு எப்போதும் உணர்ந்தறியாத பூரிப்பும், நிம்மதியும் உண்டாயின. மாதவி தம்மை விரும்புகிருள் என்று எண்ணும் போதே அவர் நெஞ்சம் இனித்தது.

"உன்னைச் சந்திக்க வேண்டும் என்று தோன்றும் போதெல்லாம், நீ என்ன நினைக்கிருயோ என்று பயமாக இருக்கும். இன்றுதான் என்னுடைய மனம் நிம்மதியடைந்தது."

"எனக்கும் இன்றுதான் நிம்மதி ஏற்பட்டது. உங்களைப் பார்க்க வேண்டு மென்று கடவுள் சங்கல்பம் இருந்திருக்கிறபடியால்தான், இத்தனை நாட்கள் நான் கன்னியாக இருந்திருக்கிறேன். சித்தப்பா சொன்னபடி கேட்டிருந்தால் எனக்கு மணமாகிப் பத்து வருஷங்களாகியிருக்கும்" என்ருள் மாதவி.

"மாதவி! நானும் அதையேதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஈசுவர சங்கல்பம் என்று ஒன்று இருக்க வேண்டும் என்று தான் எனக்கும் தோன்றுகிறது" என்ருர் சிவசங்கரன். அப்போது திடீரென்று துப்பாக்கி வெடிக்கும் சத்தம் பலமாகக் கேட்டது. மாதவிக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"மாதவி! ஏன் இப்படிப் பயப்படுகிருய்? எங்கேயோ சத்தம் கேட்டால் நீ இப்படிப் பதறுவானேன்? நீ ரொம்பத் தைரியசாலி என்றல்லவா கருணுகரன் கூறிஞன்" என்ருர் சிவசங்கரன்.

"எனக்குப் பயமொன்றுமில்லை."

"பயமில்லை என்ருல் இப்படி உனக்கு முகம் மாறுவானேன்?"

"எனக்குப் படபடப்பு ஏற்படுவதற்குக் காரணம் கூறிஞல் நீங்கள் சிரிப்பீர்கள். ஏழெட்டு மாதங்களுக்கு முன் ஒருநாள் கருணுகரனும், சில நண்பர்களும் சேர்ந்து வேட்டைக்குப் போஞர்கள். அன்று அவர்களுக்கு நல்ல வேட்டை. திரும்பி அவர்கள் மாலையில் வரும்போது வரிசையாக ஆளுக்கு ஒரு



மிருகத்தைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். நான் எங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன். அதைப் பார்த்ததும் எனக்கு வேதனையாக இருந்தது. அன்றிரவு, காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் தலைக்கு ஒரு துப்பாக்கியுடன் என்னைச் சூழ்ந்து கொண்டு பயமுறுத்துவது போலக் கனவு கண்டேன். அந்தக் கனவு என் மனத்தை விட்டுச் சில நாட்களுக்கு அகலவே இல்லை. அது முதல் நான் கருணுகரனை வேட்டைக்குப் போக வேண்டாமென்று தடுத்து வந்திருக்கிறேன். அன்று நீங்கள் வந்த போது வேட்டையாடுவதற்கென்று கருணுகரனைச் சந்திக்க விரும்பியதாகக் கூறினீர்கள்.

"அதஞல் நான் கருணுகரனைத் தடுக்கவில்லை. அவன் உடனே ஒப்புக் கொண்டது எனக்கு மகிழ்ச்சியே அளித்தது.

"இன்று உங்களுடன் இந்த மலைப் பிரதேசத்தில் நடக்க வேண்டும் என்ற

ஆசை ஏற்பட்டபடியால் நான் வந்தேன். இந்த வெடிக்கும் சத்தம் கேட்டது முதல் எனக்கு மனம் சரியாக இல்லை! அந்தக் கனவு முழு வேகத்துடன் நினைவுக்கு வந்து விட்டது. குட்டிகள் அவற்றின் தாய்களைப் பிரிந்து தவித்து, நம்மைச் சபிப்பது போலவும், குட்டிகளைப் பறி கொடுத்த தாய்கள் கதறுவது போலவும் தோன்றி என்னை ரொம்ப நோகச் செய்து விட்டது'' என்று கூறிவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டாள் மாதவி.

"எவ்வளவோ தைரியசாலியான உங்களுக்கு, இத்தகைய இளகிய மனமும் பொருந்தியிருப்பது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது'' என்று கூறிவிட்டுத் தண்ணீரில் ஒரு கூழாங்கல்லை எடுத்துப் போட்டார் சிவசங்கரன். களுக்கென்ற சத்தத்துடன் அது நீரில் விழுந்தது. சோம்பேறித்தனமாக நீந்திக் கொண்டிருந்த மீன்கள் மின்னல் வேகத்தில் எங்கோ சென்று மறைந்தன.

பொழுது சாய்ந்து கொண்டு வந்தது. கருணாகரன் வந்தவுடன் எல்லோரும் திரும்பிச் சென்றார்கள். மாதவியிடம் மனம்விட்டுப் பேசியதால் சிவசங்கரன் பெரிதும் மன நிறைவு அடைந்திருந்தார். கால்வலிகூட அவருக்கு இப்போது பெரிதாகத் தோன்றவில்லை.

கருணாகரனுக்கு உலக ஞாபகமேயில்லை. அவன் தன் காதலி ஜயந்தியைப் பார்க்க மாலையில் வருவதாகச் சொல்லியிருந்தான். ஆகவே இப்போது ஓட்டமாக ஓடிக் கொண்டிருந்தான். வீட்டுக்குச் சென்றதும் அவசரமாக மறுபடியும் குளித்து உடை மாற்றிக் கொண்டு சைக்கிளில் புறப்பட்டுச் சென்றான். சிவசங்கரன் விடைபெறுவதற்குக்கூட அவன் காத்திருக்கவில்லை.

கருணாகரன் சென்றபிறகு சிவசங்கரனுக்கு அங்கிருந்து கிளம்ப மனம் வரவே இல்லை. ஆனால் இருட்டுக்கு முன்னால் போய் விடுவதுதான் நல்லது என்று உடனே புறப்பட்டு விட்டார். மாதவிக்கு அவரைப் பிரிய மனமில்லாவிட்டாலும் அவருடைய உள்ளக் கருத்தைப் புரிந்துகொண்டு விடைகொடுத்து அனுப்பினாள்.

## அத்தியாயம் 18
# அழியாத ஓவியம்

கருணாகரன் நேரே தொழிற்சாலை முதலாளி விஜயராகவன் வீட்டுக்குச் சென்றான். அவனைப் பார்த்த உடனே அவர்கள் வீட்டு 'அல்ஸேஷன்' நாய் ஓடி வந்து வாலை ஆட்டிக் கொண்டே வரவேற்றது.

நாயின் குரலைக் கேட்டு உள்ளே ரேடியோவின் அருகில் உட்கார்ந்திருந்த ஜயந்தி ஓடி வந்தாள். அவள் முகத்தில் உவகை தாண்டவமாடியது. கபடமில்லாத சிரிப்புடன், பச்சைக் குழந்தையைப் போலத் தன் கையைத் தட்டிக் கொண்டே, "வந்து விட்டீர்களா? இப்போதுதான் நீங்கள் வராமல் ஏமாற்றி விடுவீர்களோ என்று நினைத்தேன். எனக்கு எவ்வளவு பயமாகப் போய் விட்டது தெரியுமா?'' என்றாள்.

கருணாகரனும் சிரித்துக் கொண்டே, "ஏன் ஜயந்தி! உன்னை நான் எப்போதாவது ஏமாற்றியிருக்கிறேனா? அல்லது உன்னை ஏமாற்றத்தான் என்னால் முடியுமா?'' என்று கேட்டான்.

"உள்ளே வாருங்கள். அப்பாகூட இல்லை. சங்கோஜப் பட வேண்டாம்'' என்று தெளிவாக மனத்தில் தோன்றியதைச் சொன்னாள் ஜயந்தி.

கருணாகரன் சிறிது கோபத்துடன், "ஜயந்தி! நீ வெகுளியாக இருப்பது எனக்குப் பிடிக்கிறது. ஆனால் இந்த மாதிரி பச்சையாக மனத்தில் தோன்றுவதைச் சொல்லக் கூடாது. யாராவது கேட்டால் என்ன நினைத்துக் கொள்வார்கள்? இப்படி இருந்தால் நீ ரொம்பக் கஷ்டப்படுவாய்'' என்றான்.

"இப்போது நீங்கள் சாபம் கொடுக்கும்படி என்ன சொல்லி விட்டேனாம்?''

"அப்பாகூட இல்லை என்று சொல்கிறாயே. அது எவ்வளவு விபரீதமாக மற்றவர்களுக்குத் தோன்றலாம் என்று உனக்குத் தெரியவில்லையா? உன் சின்ன அம்மாவே கேட்டால் கூடத் தவறாக எண்ண மாட்டாரா?''

"ஏன் எண்ண வேண்டும்? அப்பா இருந்தால் நிச்சயமாக நமக்கு சங்கோஜமாகத்தான் இருக்கும். அவரிடம் நீங்கள் வரப்போகிறீர்கள் என்று கூறினேன். அவர் அதனாலேயேதான் வெளியே போயிருக்கிறார். சின்னம்மாவிடமும் சொல்லி விட்டுத்தான் போயிருக்கிறார். நீங்கள் ஒன்றும் இதைப்பற்றி இவ்வளவு கவலைப் படவேண்டாம்.''

# என்ன ஆச்சரியம்...

உலகிலே எவ்வளவு அதிருஷ்டக் குழந்தைகள் க்ளாக்ஸோவினால் வளருகிறார்கள். கட்டாயம் கோடிக்கணக்கில்தான் இருக்கும். விபரம் தெரிந்த தாயார் குழந்தைக்கு க்ளாக்ஸோவைத் தவிர வேறு எதையாவது கொடுப்பாளா! குழந்தை எப்பொழுதும் மலர்ந்த முகமும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் இருக்க ஒரே ஒருவழிதான்—குழந்தைக்கு க்ளாக்ஸோவையே ஆகாரமாய்க் கொடுப்பது. இந்த புஷ்டி தரும் பாலுணவில் எலும்புகளும் பற்களும் வளம்பெற விடமின்-டியும், இரத்தப் புஷ்டிக்கு வேண்டிய இரும்பு சத்தும் கலந்திருக்கின்றன. என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா! க்ளாக்ஸோ குழந்தை எப்போதும் சமர்த்துக் குழந்தைதான்!

**நான் சிபாரிசு செய்வது க்ளாக்ஸோ**

குழந்தைகளின் பரிசுத்தமான பால் உணவு






க்ளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.

பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புதுடெல்லி


எக்லா
தென் இந்தியா விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப் போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம்... மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால். குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE
EC/6/3A


பூரண வாய் சுத்தத்திற்கென தயாரிக்கப்பட்டது
• கிருமிகள் அகற்றப்பெற்ற நைலான் முடிகள்.
• அழகிய பிளாஸ்டிக் பிடியில் நன்கு இணைக்கப்பட்ட முடிகள்.
• உங்கள் பற்களுக்கான உருப்பெற்றது; சுலபமாக சுத்தம் செய்கிறது.
• மிருதுவான சுத்தி—பல்லின் எனமலை பாதிக்காது.
• மெதுவான முறையில் ஈறுகளை பலப்படுத்துகிறது.
அதிக பலனுடன்!
பற்களைப் பூரணமாக சுத்தம் செய்கிறது. ஈறுகளை மிருதுவாக தடவி விடுகிறது.
மூன்று அளவுகள்: பெரியவர்களுக்கு, சிறியவர்களுக்கு, குழந்தைக்கு
• ஹார்ட் • மீடியம் • ஸாப்ட்
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
மலிவு—நீடித்த உழைப்பு

''இருந்தாலும் உனக்கு வாய் அதிகம் தான், ஜயந்தி!''

''ஐயோ பாவம்! உங்களுக்கு மாத்திரம் வாய் குறைச்சல்! உங்கள் குரலைப் பற்றித் தொழிற்சாலைச் சுவர்கள் ஒவ்வொன்றும் சொல்கின்றனவே? அங்கே நான் போனால் 'ஜயந்தி! கருணாகரன் குரலைக் கேட்டு நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக இடிந்து கொண்டே வருகிறோமே. நீயாவது சொல்லக் கூடாதா?' என்று முறையிட்டு அழுகின்றன.''

''ஆமாம்! நீ முதலாளியின் மகளல்லவா? அதனால்தான் அவை உன்னிடம் மாத்திரம் முறையிடுகின்றன. நீ தானே அதிகக் கருத்துள்ளவள்?''

''இந்த மாதிரி நீங்கள் பிரித்துப் பேசினால் எனக்கும் கோபம் வந்துவிடும்.''

''சரிதான் விளையாட்டுபோதும். எனக்குப் பசி பிராணன் போகிறது. மாதவி சமைக்க நாழியாகும் என்று இங்கே வந்தால், நீ ஒன்றும் தராமல் பேசிக் கொண்டே இருக்கிறாயே?''

ஜயந்தி மேஜைமீதிருந்த மணியை அடித்தாள். ஒரு பையன் வந்துநின்றான்.

''சின்னம்மாவிடம் சொல்லி ''ஸ்பெஷல்'' டிபன் வாங்கிக் கொண்டு வா. இந்த ஐயாவுக்கு என்று சொல்லு'' என்றாள் ஜயந்தி.

''ஏன் ஜயந்தி! நீ இப்படிச் சோம்பேறியாய் இருக்கிறாயே? என்னை மணந்து கொண்டால் எல்லாக் காரியமும் செய்யத் தயாராக இருக்க வேண்டுமே?''

''அப்போது செய்தால் போகிறது.''

''இப்போது செய்தால் என்னவாம்? நீ போய் அதைக் கொண்டுவரக் கூடாதா?'' என்று கேட்டான்.

''அதைக் கொண்டு வரப்போகும் நேரம் வீணாகி விடுமே.''

''அட கடவுளே! எனக்கு நீ டிபன் கொண்டு வந்தால் நேரம் வீணாகி விடுமா? உன்னைக் கல்யாணம் செய்து கொண்டால் சாப்பாடு கூடப் போட மாட்டாயா?''

''சே, சே! நான் அப்படிச் சொல்லவில்லை. அவ்வளவு நேரம் உங்களுடன் இல்லாமல் இருக்க வேண்டுமே என்ற அர்த்தத்தில் சொன்னேன். உங்களைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கணமும் வீணாகப் போவதாக எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் ஜயந்தி.

''நீ பொல்லாதவள். எப்படி வேண்டுமானாலும் பேச்சை மாற்றிக் கொள்வாய். உன்னை நம்பவே முடியாது.''

''நம்பாவிட்டால் வேண்டாம். பிரியமாக இருந்தால் போதும்.''



''அது எப்படி முடியும், ஜயந்தி? நம்பிக்கை இல்லாதவர்களிடம் பிரியம் மட்டும் எப்படிக் காட்ட முடியும்? அன்பின் அடிப்படையே நம்பிக்கையில் எழுவது தானே?''

''ரொம்ப அழகாக இருக்கிறதே, நீங்கள் சொல்வது? இருங்கள். நான் ஒரு உதாரணம் சொல்கிறேன்.

''ஒரு அப்பா இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.''

''வைத்துக்கொண்டு விட்டேன்.''

''அவருக்கு ஒருபிள்ளை இருக்கிறான்.''

''அதையும் வைத்துக் கொண்டு விட்டேன்! அப்புறம்...?''

''அந்தப் பிள்ளை திருடுகிறான். அது அவனுடைய அப்பாவுக்குத் தெரிந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பிள்ளையிடம் பிரியம் குறைந்து போய் விடுமா?''

''. . . . . .''

''என்ன? பதில் சொல்லுங்கள். அன்பு குறைந்து விடுமா?''

''நீ சொல்வது ரொம்ப சரி. நம்பிக்கை இல்லாதவரிடமும் பிரியமாக இருக்க முடியும். உன் உதாரணம் ரொம்பப் பிரமாதமாக இருக்கிறது.''

''நீங்கள் இப்படி எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டினால் எனக்குப் பிடிக்காது. நீங்கள் உண்மையான அபிப்பிராயத்தை சொல்ல வேண்டும்.''

கருணாகரன் கலகலவென்று சிரித்தான். அவனுடைய வெண்கலக் குரல் அந்தப் பெரிய 'ஹாலில்' எதிரொலித்தது.

''நீங்கள் இப்படிச் சிரிக்கும்படி நான் என்ன ஹாஸ்யமாகப் பேசி விட்டேன் என்பது தான் புரியவில்லை.''

''காரணமா கேட்கிறாய் ஜெயந்தி? நீ சொல்வதற்கு விரோதமாக ஏதேனும் கூறிவிட்டால் விதண்டாவாதம்

என்று கோபித்துக் கொள்கிறாய். நீ சொல்வதை ஒப்புக் கொண்டால் தலையை ஆட்டுகிறேன் என்கிறாய்? உன்னிடம் எப்படிப் பிழைப்பது?''

"அதெல்லாம் கவலைப்படாதீர்கள். நான்தானே உங்களிடம் பிழைக்க வேண்டும்? உங்களுடைய முன் கோபத்தை என்னமாகத்தான் சமாளிக்கப் போகிறேனோ?''

"நான் கோபத்தைவிட்டுவிடுகிறேன், ஜயந்தி. இனிமேல் யாரிடமும் கோபித்துக் கொள்வதில்லை என்று விரதம் எடுத்துக் கொள்கிறேன்.''

"இதோடு எத்தனையோ தரம் இந்தத் தீர்மானம் நிறைவேறி விட்டது. இன்னும் எவ்வளவு தடவைகள் வேண்டுமானாலும் இதே தீர்மானத்தைப் பிரேரேபித்து, அதை ஆமோதித்து நிறைவேற்றலாம். ஆனால் அமுலுக்குக் கொண்டு வருவதுதான் சிரமம்.''

"ஆமாம்; ஒரு வேடிக்கை பாரேன், ஜயந்தி. உன்னிடம் மாத்திரம் எனக்குக் கோபமே வருவதில்லை. நீ என்ன கூறினாலும் எனக்கு இதமாக இருக்கிறது. என்ன செய்தாலும் சந்தோஷம் உண்டாகிறது. ஒன்றும் செய்யாவிட்டாலும் இன்பமாக இருக்கிறது. ஒரு வேளை உன்னை மணந்த பிறகு நான் நல்லவனாகி விடுவேன்.''

"நீங்கள் எப்போதும் நல்லவர்தான். முன் கோபத்தை மாத்திரம் விட்டு விடுங்கள். உங்கள் மாதிரி ஒரு மனிதர் பூலோகத்திலேயே இருக்க மாட்டார்.''

"இதை மாத்திரம் நான் ஒப்புக் கொள்ள முடியாது. உனக்கு எப்படி அது அவ்வளவு நிச்சயமாகத் தெரிய முடியும்? நீ பூலோகம் முழுவதையும் பார்த்திருக்கிறாயோ?''

"ஓ, பார்த்திருக்கிறேனே!''

"எனக்குத் தெரியும், படத்தில் பார்த்தேன் என்றுதானே சொல்லப் போகிறாய்?''

"ஆமாம், நீங்கள் மட்டும் பார்த்ததில்லையா?''

"எதை?''

"என்னை!'' என்று கோபமாகக் கூறினாள் ஜயந்தி.

"உன்னை நான் படத்தில் பார்க்க வேண்டுமா ஜயந்தி? நீதான் என் நெஞ்சம் என்னும் திரையில் அழியாத ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கிறாயே!''

"உங்கள் இதயம் சாணைக் கல்லா?''

"ஏன்?''

"தீட்டப்பட்டதாகச் சொன்னீர்களே! அதனால் கேட்டேன்.''

இருவருடைய சிரிப்பொலியும் அந்த வீட்டில் நிறைந்தது.

இந்த இளம் காதலர்கள், எவ்வளவு தமாஷாகப் பேசிக் கொள்கிறார்களோ அதேமாதிரி அவர்கள் சந்தித்ததும் ஒரு மிக வேடிக்கையான சந்தர்ப்பமாகும். அதை எண்ணினாலே கருணாகரனுக்குச் சிரிப்பு வரும்.

ஒருநாள் தொழிற்சாலையில் ஒரு தவறு நேர்ந்து விட்டது. எண்ணெய் பிழியும் யந்திரத்தில் பழுது ஏற்பட்டிருந்ததை யாரும் கவனிக்கவில்லை. அதை அவன் பார்த்து விட்டு அருகில் இருந்த தொழிலாளியை இரைந்து கொண்டிருந்தான். அவனுக்குக் கோபம் வந்தால், சத்தம் போடுவான். பதினைந்து நிமிஷங்களுக்காவது கத்தா விட்டால் அவனுடைய கோபம் தணியாது.

அப்போது ஜயந்தி தற்செயலாகத் தன் சிநேகிதிகள் சிலருக்குத் தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டுவதற்காக வந்து சேர்ந்தாள். அவன் கத்துவதைப் பார்த்து விட்டுத் திகைத்து நின்றாள் ஜயந்தி. கருணாகரனின் பின்னால் நின்றபடியால் அவன் அவளைப் பார்க்கவில்லை.

முன்னால் நின்று கொண்டிருந்த ஆட்களெல்லாம் தனக்குப் பின்னால் எங்கேயோ பார்ப்பதைக் கவனித்த கருணாகரன் திரும்பிப் பார்த்தான்.

அங்கே அழகே வடிவான ஜயந்தி நிற்பதைக் கண்டதும் அவனுக்கு அவமானமாகப் போய்விட்டது.

"ஏன் நிற்கிறீர்கள்? போய் வேலையைக் கவனியுங்கள்!'' என்று எல்லாரையும் அதட்டி விட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான். போகும் போது ஜயந்தி அவனைப் பார்த்த பார்வை அவனைக் கூசச்செய்தது. தான் இவ்வாறு தன் வசமிழந்து ஆத்திரப்பட்டதற்காக வெட்கப்பட்டான் கருணாகரன்.


'இனிமேல் இவ்வாறு கத்துவதை விட்டு விட வேண்டும்' என்று சங்கல்பம் செய்து கொண்டான். அதன்பிறகு பல தடவைகள் அவன் சங்கல்பம் செய்து கொண்டு விட்ட போதிலும், பிறவிக் குணம் அவனை விட்டுச் சிறிதும் நீங்குவதாக இல்லை.

ஜயந்திக்கு அன்று முதலில் ஒரே திகைப்பாக இருந்த போதிலும், பின்னால்வேடிக்கையாக இருந்தது. திரும்பிப் போகும் போது தன் தோழிகளிடம், கருணாகரனைப் போல நடித்துக் காட்டிக் கொண்டே சென்றாள். அவர்கள் அவனுடைய கை அசைவுகளையும், அவன் மாதிரியே கத்தியதையும் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்பாவிடம் இந்த மானேஜரைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் ஜயந்தி. (தொடரும்)

# விளையாட்டு மன்னர்கள்

கோடை காலம் வந்து விட்டதும் நம்முடைய நினைவுக்கு வருவது உதகமண்டலத்தின் குளுமைதான். கால் பந்து ஆட்டம் என்று சொன்னால் நம் கண்முன்னே நிற்பது திரு எம். தங்கராஜின் ஜிலு ஜிலுப்பான ஆட்டந்தான். கோடை வாசஸ்தலங்களில் சிறந்தது என்று புகழ் பெற்ற உதகமண்டலம், கால் பந்தாட்டத்துக்குத் தலைசிறந்த விளையாட்டுக்காரரான தங்கராஜைக் கொடுத்துப் பெருமை யடைந்திருக்கிறது.

கால்பந்து ஆட்டம் முதலில் கிரேக்கர்களும், ரோமர்களும் விளையாடியதாகப் பழம் படங்களிலிருந்து தெரிய வருகிறது. 1800-ம் வருஷத்திலிருந்துதான் பெருவாரியாக உலகெங்கும் மக்கள் அதை விளையாடி வருகின்றனர். இன்று ஹங்கேரி நாட்டினர் கால் பந்தாட்டத்தில் தலைசிறந்து விளங்கி வருகின்றனர்.



எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்தில் ஏப்ரல் மாதம் ஜாட்ப்ரோல் கோப்பையை யடைவதற்காகச் சென்னை ராஜ்யத்திலுள்ள பல கால் பந்துக் குழுவினரும் கலந்து கொண்டனர். ஐந்து வருஷங்களாகத் தோல்வி யின்றி வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றுவரும் 'விம்கோ' விளையாட்டுக் குழுவினரும் இந்தப் பந்தயத்தில் கலந்து கொண்டு பிரமாதமாக விளையாடினர். திரு தங்கராஜ்தான் இந்தக் கோஷ்டிக்குத் தலைமை வகித்து விளையாடித் தம் குழுவினருக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தார். பந்து இவர் கையில் கிடைத்து விட்டால் எதிரியின் கையில் சிக்காமல் 'கோல்' அடித்து விடும் திறமையைக் கண்டு மக்கள் மூக்கின்மேல் விரலை வைத்து அதிசயித்தனர். தாமே 'கோல்' அடித்துப் புகழ்பெற வேண்டும் என்ற ஆசை இவருக்குக் கிடையாது. தம் குழுவினருக்கும் அந்தப் பெருமையை யளித்து மகிழும் இவர் பெருந்தன்மை பல தடவைகள் இவர் விளையாட்டின் போது நிதர்சனமாகத் தெரிந்தது.

உதகமண்டலத்தில் 1926-ம் ஆண்டு பிறந்த திரு தங்கராஜ் தமது பத்தாவது வயதிலேயே கால் பந்து விளையாட்டில் ஈடுபட்டார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது அப்பொழுது பிடித்தே அவரது அபாரமான விளையாட்டில் தெரிந்து கொள்ள முடிந்தது. 1942-ம் வருஷம் டி. வி. எஸ். ஸ்தாபனத்தில் சேர்ந்து அவர் தென்னிந்தியா முழுதும் டி. வி. எஸ். விளையாட்டுக் குழுவுக்குக் கால் பந்தாட்டத்தில் இணையற்ற வெற்றியும் புகழும் ஈட்டித் தந்தார்.

இவர் 1950-ம் வருஷத்திலிருந்து விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலையில் சேர்ந்து பணியாற்றி வருகிறார். விம்கோ கால் பந்துக் குழுவினர் ஆறு வருடங்களாக 'லீக்'கில் வெற்றி வீரர்களாகத் திகழுவதற்குத் திரு தங்கராஜின் அபார ஆட்டம் பெருதவி புரிந்திருக்கிறது.

இவர் 1953-ம் வருஷத்தில் கிழக்கு வங்காளக் கால் பந்தாட்டக் குழுவினரோடு ரஷ்யாவுக்குச் சென்று விளையாடியிருக்கிறார். பர்மா, இலங்கை, ஆப்கானிஸ்தானம் முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று கால் பந்தாட்டத்தில் தமது திறமையை நிரூபித்திருக்கிறார்.

திரு தங்கராஜ் சங்கோச சுபாவம் படைத்தவர்; 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்னும் முதுமொழிக்கிணங்கப் படாடோபமின்றி விளங்குகிறார். தம் குழுவினரைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துவதில் இவருக்கு நிகர் இவரேதான். இரும்புச் சங்கிலியில் ஒன்றின் தொடர்பு பழுது பட்டாலும் அந்தச் சங்கிலி அறுந்து விடுவது போல, கால் பந்து ஆட்டக் குழுவினருக்குள் சிறிது ஒற்றுமை குன்றி விட்டாலும் ஆட்டம் குட்டிச் சுவராகி விடும். இந்தக் குறை 'விம்கோ' விளையாட்டுக் குழுவினரிடம் காணப்படவில்லை.

''விளையாட்டை விளையாட்டு உணர்ச்சியோடு விளையாட வேண்டும்'' என்கிறார் பாரதப் பிரதமர் நேருஜி. திரு தங்கராஜிடம் இந்த உணர்ச்சி பரிபூரணமாக நிறைந்திருக்கிறது.

கால்பந்து விளையாட்டு மன்னரான திரு தங்கராஜின் மூலம் கால் பந்தாட்ட உலகில் தமிழ் நாட்டின் புகழும் உயர்ந்திருக்கிறது.

—குண்டுமணி

தேவியின் கடிதம்

# வீடும் வெளியும்

வசுமதி ராமசாமி



அன்புக்குரிய சுஜாதா,

'வீடும், வெளியும்' என்பதைப் பற்றிக் கேட்டிருக்கிறாய். பெண்கள் எப்பொழுதும் வெளியேபோவது தவறாகுமா? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறாய்.

இந்தக் காலத்தில் பெண்கள் வெளி வேலைகளில் ஈடுபடாமல் இருக்க முடியாது. அவைகளினால் சாதகங்கள், பாதகங்கள் இரண்டும் இருக்கின்றன. சில பத்திரிகைகளில் பெண்கள் வீட்டைப் புறக்கணிப்பதைப் பற்றி அநேக ஹாஸ்யங்கள் வெளியிடுகின்றனர்.

வீட்டில் பெண்களின் பொறுப்பு மகத்தானது என்றுதான் சொல்வேன். தவிரப் பெண்ணின் சிறப்பு எந்த விதத்திலும் குறையக்கூடாது. அவர்கள் வாழ்க்கையில் குடும்பம் என்ற புனிதமான கோவிலைக் கட்டுகிறார்கள். அந்தக் கோவிலை அமைக்க ஒரு லக்ஷ்யம், உயர்ந்த நோக்கம், பொறுமை, உழைப்பு, அன்பு, தியாகம் இம்மாதிரி கல் தூண்கள் தேவை அல்லவா?

பெண்களால்தான் நம் நாடு உலகின் வரிசையில் முதன்மை பெறவேண்டும். பெண்களுடைய கொள்கைகள் சிறந்ததாக இருந்தால் அவர்கள் வீட்டில் இருப்பதிலும், வெளியே போய் வருவதிலும் நன்மைகளே உண்டாகும்.

பாரதியார் கனவு கண்ட புதுமைப் பெண்ணைத்தான் இன்றைய உலகம் வேண்டுகிறது. நாகரிக உலகில் நண்பனைப் போன்ற அறிவாளி மனைவியைக் கணவன் தேடுகிறான். அதனால் பெண்ணின் அறிவு விசாலமாக இருக்க வேண்டும். வெளியே போவதில் பெண்கள் பலவித அறிவுகளைப் பெறுகிறார்கள். ஆனால் பாதகமும் இருக்கின்றன. தினம் வெளியில் போகும் பெண்களில் சிலர் வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லையென்று சொல்வதைக் கேட்கிறோம். இது வருந்தத் தக்கது. வெளியில் போகும் வழக்கம் அப்படி வாடிக்கையாகக் கூடாது. வீட்டையும் இன்பமாக மாற்றி அமைத்துக் கொள்வது ஓரளவு பெண்களாகிய நம் கையில் இருக்கிறது.

ஒருபெண் வீட்டு நிர்வாகப் பொறுப்பை மறந்து, தன்னுடைய கடமைகளை விட்டு, வெளியில் வண்ணத்துப் பூச்சிகள் மாதிரி பறந்து விட்டால் மட்டும் அவள் வாழ்வு பூரணத்துவம் பெறாது. தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதில் பயனில்லை. எல்லோருடைய வாழ்க்கையும் அழகாக அமைந்து விடுவதில்லை. ஏற்றத்தாழ்வு, குணபேதங்கள், ஒழுங்கற்ற தன்மை, எல்லாவற்றுடன் போராடி வெற்றி பெறவேண்டிய அவசியமும் சிலருக்கு வரலாம்.

மேல் நாட்டில் என்றென்றும் களிப்புகளில் வாழும் வாழ்க்கையைப் பற்றி அநேக விவாதங்கள் எழுகின்றன. தன்னுடைய குடும்பம், வீடு என்று இல்லாமல் இருந்தால் எவ்வளவோ சந்தோஷமாக இருப்பதாக ஒரு சாரார் சொல்லுகிறார்கள், இருக்கலாம். நெஞ்சத்தின் அடியில் அமரும் அமைதி அந்த வாழ்வில் கிட்டாது. ஆண் மக்களைப் போல் வெளியே போய்ப் பல நண்பர்களைச் சந்தித்துப் பழகினால்தான் பெண்களின் சமூக வாழ்வு ஒளி பெற்றதாக விளங்கும் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அது சரியல்ல. வீட்டிலும் சரி, வெளியிலும் சரி குணவதியான பெண்கள் தங்கள் பண்புக்குக் கெடுதி நேரிடாதவண்ணம் நடந்து கொள்ளுவார்கள். அதுதான் முக்கியம். பண்பு கெட்ட வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையாகும்.

சில பெண்களுக்கு வெளி சிநேகிதிகளுடன் பழகிப் பழகிச் சுற்றத்தாரையும் வீட்டிலுள்ளவர்களையும் பிடிக்காமல் போய் விடுகிறது. பெரியோர்களிடம் மரியாதை குறைகிறது. வீட்டில் இருப்பதே முள்ளின்மேல் இருப்பது போல் தோன்றுகிறது. இவைகளால் பாதிக்கப் படுகிறவர்கள் பெரும்பாலும் குழந்தைகளே. வீட்டில் குழந்தைகள் அன்புக்காக ஏங்கித் தவிக்கும்போது அவர்களைப் புறக்கணித்துவிட்டு, வெளி உலகில் போய் மாதர் சங்கங்களில் 'குழந்தைகளைப் பராமரிப்பது எப்படி?' என்று பேசினால் நன்றாயிருக்குமா?

ஒவ்வொரு பெண்ணும் தன் மனோசக்தியைக் கொஞ்சம் புரிந்து கொண்டால் பெண்ணுலகை ஆண்கள் சிரம் வணங்கிக் கரம் குவிய வேண்டி வரும். இப்பொழுது சில கணவன்மார்கள் மோகத்தில் அப்படிச் செய்வதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. பெண் இயற்கையில் பிறருக்கு அன்பு செய்யப் பிறந்திருக்கிறாள். மற்றவர்களைச் சந்தோஷப் படுத்தி, தான் இன்பம் பெறுபவளே பெண். பெண்ணின் அன்பை ஏற்கக் கணவன் குழந்தைகள் முதன்மை பெறுகிறார்கள். இந்த உயர்ந்த லட்சியம் கொண்ட பெண் வீட்டிலும், வெளியிலும் ஆனந்தத்தை அடைகிறாள்.

இப்படிக்கு,

பூமாதேவி

# சத்திய யுகம்

துறைவன்



“சத்திய யுகம் எப்போது வரும்?” என்று அரசன் கேட்டான் மந்திரியைப் பார்த்து.

மந்திரி சொன்னார் : “அரசே! புலியும் மானும் ஒரு துறையில் நீர் அருந்துமானால், சத்திய யுகம் வந்து விட்டதாக அர்த்தம். சாஸ்திரங்களில் அப்படித்தான் சொல்லியிருக்கிறது.”

அரசனுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகி விட்டது. தன்னுடைய சிறந்த வீரர்களைக் கூப்பிட்டான். “இந்த நிமிஷமே காட்டுக்குப் புறப்படுங்கள். எங்கிருந்தாவது நல்ல புலியாகப் பார்த்து ஒன்று கொண்டு வாருங்கள். புலியை நீங்கள் உயிரோடு பிடித்து வர வேண்டும்” என்று உத்தரவிட்டான்.

அவர்கள் அரசனை வணங்கிப் புலியைத் தேடிப் புறப்பட்டார்கள்.

இன்னும் சில வீரர்களை அழைத்தான் அரசன்.

“நீங்கள் ஒரு நல்ல மானைப் பிடித்து வாருங்கள். உயிரோடு பிடித்து வரவேண்டும். தெரிந்ததா?”

“தெரிந்தது, பிரபு!” என்று சொல்லி, வீரர்கள் காட்டுக்குப் புறப்பட்டார்கள், மானைத் தேடி.

அரசனுக்கு நெடுநாட்களாகக் குழந்தை இல்லை. இப்பொழுதுதான் ராணி ஆண் மகவு பெற்றிருந்தாள். ராஜகுமாரனது முதல் பிறந்த நாள் விழாவன்று தனது அருமைத் திருநாட்டில் சத்திய யுகம் ஆரம்பமாக வேண்டும் என்று உறுதி பூண்டான் அரசன்.

நடுக் காட்டில் ஒரு குகை. அந்தக் குகையில் ஒரு பெண் புலி படுத்துக் கிடந்தது. இரண்டு குட்டிகள் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருந்தன. இடையிடையே, தாய்ப்புலி குட்டிகளை உதறித் தள்ளி விட்டு, நாலா பக்கமும் சுற்றிப் பார்க்கும். நெடுநேரமாகத் தன்னுடைய நாயகனைக் காணோமே





என்று கவலையோடு திகைத்து நிற்கும். இதற் கிடையில் தூரத்தில் எங்கேயோ தீவட்டி வெளிச்சம் போல் கண்ணில் படவும் பெண் புலிக்குக் கலக்கம் அதிகமாயிற்று.

சிறிது நேரத்தில், குகையைச் சுற்றியிருந்த புதர்களை விலக்கிக்கொண்டு, ஆண் புலி வந்து குதித்தது. வாயில் கௌவியிருந்த மானைத் தொப்பென்று கீழே எறிந்தது.

பெண்புலி நாயகனைக் கோபமாகப் பார்த்து, "சாப்பிடுகிற ஆகாரத்தை யெல்லாம் ஏன் இந்த விதமாகத் தரையில் எறிய வேண் டும்?" என்று கேட்டது.

ஆண் புலிக்கு மேலும் கோபமாக மூச்சு வாங்கியது.

"பெண்ணே! சும்மா சத்தம் போடாதே. வேட்டைக்காரர்கள் இந்தக் காட்டுக்குள் நுழைந்திருக்கிறார்கள். குடும்பத்தோடு அகப் பட்டுக் கொள்ளக் கூடாது நாம். ஆகையால், நான் அவர்கள் கவனத்தை வேறு பக்கமாகத் திருப்பிவிட்டு வருகிறேன். நீ இரை தின்று விட்டுக் குட்டிகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்."

இப்படிச் சொல்லிவிட்டு ஆண் புலி ஒரே தாவாகத் தாவி, இருட்டுக்குள் மறைந்து போய் விட்டது.

பெண் புலி, குட்டிகளை அணைத்தபடி அரவம் இல்லாமல் படுத்துக் கொண்டது. நாயகன் அடித்து இழுத்து வந்த இரையை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை.

* * *

அதே காட்டில் வேறொரு பிரதேசம். புல் தரையில் மான்குட்டி ஒன்று சோர்ந்து படுத் திருக்கிறது. அதன் வயிறு ஒட்டிப் போயிருக் கிறது. 'மா, மா' என்று அடிக்கடி தாயைத் தேடிக் கூப்பிடுகிறது. என்ன செய்வதென்று தெரியாமல் ஆண் மான் கலங்கிப் போயிற்று. அந்த இருட்டில் எங்கே போய்த் தேடுவது தன் பிணையை? தண்ணீர் குடிக்கப் போனால் தான் இத்தனை நாழிகையா? ஒரு வேளை பெண் மானுக்கு ஆபத்து ஏதேனும் நேர்ந் திருக்குமோ?

நாழிகை ஆக ஆக, ஆண் மானுக்கு நம்பிக்கை குலைந் தது. பால் இல்லாமல் தவிக்கும் குட்டியைத் தனியே விட்டு விட்டுப் பெண் மானைத் தேடிப்புறப் பட்டது. சிறிது தூரம் செல்வதற்குள், ஏதோ அரவம் காதில் விழுந்தது. இலைகள் அசைந்தன. புதர் கள் சரசரத்தன. மறு கணம், சடாரென்று ஒரு சத்தம், ஆகாசமே வந்து தலையில் இடிந்து விழுந்து விட்டது போலிருந்தது.

வீரர்கள் கூச்சல் போட் டுக் கொண்டு மறைவி லிருந்து ஓடி வந்து, வலை யில் அகப்பட்ட மானை அமுக் கிக் கொண்டார்கள். முன் னங் கால்களையும் பின்னங் கால்களையும் பிணைத்துக் கயிறு கொண்டுகட்டி னார்கள். ஒரு நீள மூங்கிலைக் குறுக்கே கொடுத் துக் காவடியாகத் தூக்கிச் சென்றார்கள், பிடி பட்ட ஆண் மானை. அதன் கொம்புகள் தரை யில் உராய்ந்தன. பெண் மானின் கதி என்ன ஆச்சோ, குட்டிக்கு யார் பால் ஊட்டுவார் களோ என்று கண்ணீரை வழியெல்லாம் சிந்திச் சென்றது ஆண் மான்.

"புலி அகப்பட்டு விட்டது, அரசே!" என்று ஓடி வந்து அறிவித்தான் சேவகன்.

அரசனுக்கு ஒரே பரபரப்பு. புலிக் கூண்டை, கொலு மண்டபத்தில் கொண்டு வந்து வைத் தார்கள் வீரர்கள்.

அரசன் மகிழ்ந்தான். "சரி! இதைக்கொண்டு போய் நன்றாக வசக்க வேண்டும். மான்களைக் கண்டால் சீறி விழாதபடி சாந்தத்தைக் கற்றுக் கொடுங்கள், ஆமாம், மான் பிடிக்கப் போனவர்கள் எங்கே?" என்றான் அரசன்.

வெளியே ஆரவாரம் கேட்டது.

ஆண் மான் ஒன்றைச் சங்கிலி போட்டுக் கட்டி இழுத்து வந்தார்கள் வீரர்கள். கொம் புகள் இரண்டும் மிகவும் அழகாக இருந்தன. இலை உதிர்ந்த கிளைகள் போல.

அரசன் சொன்னான்: "இந்தக் கலைமான் பிடிபட்டது நம்முடைய அதிர்ஷ்டம். புலி யைக் கண்டு அநாவசியமாக நடுங்கக்கூடிய ஜந்து. அந்த பயத்தைப் போக்கி விடுங்கள்."

வீரர்கள் கலைமானை இழுத்துச் சென்றார்கள்.

பிறகு அரசன் மந்திரிக்கு ஒரு கட்டளை போட்டான்.

"அரண்மனை மேல்மாடத்திலிருந்து பார்த் தால் தெரியும்படியாக, ஆற்றங்கரையில் ஒரு புதிய படித்துறை கட்டுவதற்கு ஏற்பாடு செய்யும். அங்குதான் சத்திய யுகம் ஆரம்ப மாகப் போகிறது."

* * *

காட்டுக்கு வருவோம். வீரர்கள் கூச்சல் போட்டார்களல்லவா? அந்தச் சத்தத்தில் மான் குட்டி மிரண்டு துள்ளி எழுந்தது. கால் இழுத்த வாக்கில் ஓடிற்று. காட்டில் தடம் தெரியாமல் வெகு தூரம் ஓடி ஓடி ஒரு புதர்



அருகில் தொப்பென்று கீழே விழுந்தது. அங்கே குட்டிகளோடு பதுங்கிக்கொண்டிருந்த தாய்ப் புலி திடுக்கிட்டது. ஒரு மான் குட்டி வயிறு ஒட்டிப் போய் விழுந்து கிடப்பதைக் கண்டது. கூட வந்த புலிக் குட்டிகள் இரண்டும் தாய் மடியில் பால் குடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தது மான்குட்டி. தள்ளாடி எழுந்து ஆவலோடு போய்த் தானும் புலித் தாயிடம் பால் குடிக்க ஆரம்பித்தது. "பாவம்!" என்று இரக்கப்பட்டுப் பெண் புலியும் சும்மா இருந்தது. இரண்டு குட்டிகளோடு, மூன்றாவது பிள்ளையாகச் சேர்ந்து கொண்டது மான்குட்டி.

* * *

ஆற்றங்கரையில் புதிய படித்துறை கட்டி விட்டார்கள். படித்துறையைச் சுற்றி இரும்புத் தூண்களை நிறுத்தி வேலி போட்டிருந்தது. ஒரு வேளை புலி சத்திய யுகத்துக்கு ஒப்புக் கொள்ளா விட்டால்?...

மேல் மாடியிலிருந்து அரசனும் அரசியும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அரசி ராஜகுமாரனை ஒக்கலில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"ம்........ஆரம்பமாகலாம்" என்றான் அரசன்.

முதலில் மானை இழுத்து வந்து படித்துறையில் விட்டார்கள் சில வீரர்கள். மான் நடக்க முடியாமல் படியில் உடலைச் சாய்த்தது. அதன் கண்கள் கலங்கிப் போயிருந்தன.

புலிக் கூண்டில் கதவைத் திறந்து படித்துறையைச் சுற்றி அமைத்திருந்த வேலி வட்டத்துக்குள் விட்டார்கள். "ஹாம்" என்று ஒரு தரம் உறுமி வெளியே தாவப் பார்த்தது புலி. இரும்பு வேலி அதிக உயரமாக இருந்தபடியால், ஒன்றும் பலிக்கவில்லை. பேசாமல், படித்துறைப் பக்கம் திரும்பியது. படியில் படுத்திருந்த மான் சிறிது தலையைத் தூக்கிப் புலியைப் பார்த்து நடுங்கியது.

புலியும் மானைப் பார்த்து உறுமியது. 'என்ன நடக்கப் போகிறதோ' என்று உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார்கள் வீரர்கள்.

அரசனுக்கு நெஞ்சு படபடத்தது.

படித்துறையில் புலியும் மானும் ஒன்றையொன்று சேர்ந்து பார்த்தன.

"நீ எப்படி வந்தாய் இங்கே?" என்று புலி மானைக் கேட்டது.

"நீ எப்படி வந்தாயோ அப்படித்தான்" என்றது மான்.

புலி மீண்டும் பேசிற்று.

"உன் மனைவியை நான்தான் கொன்றேன். அந்தப் பாவம்தான் வேட்டைக்காரர்களிடம் சிக்கிக் கொள்ளும்படி நேர்ந்து விட்டது."

மானுக்குக் கண்ணீர் வந்து விட்டது. "ஐயோ! என் குட்டி என்ன ஆயிற்றோ தெரியவில்லை" என்று அழுதது.

"அழாதே, தம்பி!" என்றது புலி.

"அழுது பயனில்லை. என்னுடைய குட்டிகளையும் காட்டில்தான் விட்டு வந்திருக்கிறேன். கடவுள் இருக்கிறார். கவலைப் படாதே" என்று ஆறுதல் சொல்லியது.

"கடவுள் இருக்கிறாரா? எந்தக் கடவுள்? அவர் எப்படியிருப்பார்?"

"கடவுள் என்றால் என்னைப் போல்தான் உருவம். ஆனால் இன்னும் பெரிதாக இருப்பார். மேலெல்லாம் பெரிய பெரிய வரிகள் போட்டிருக்கும். அவரை யாரும், இரும்புக் கூண்டு கட்டி அடைத்து விட முடியாது."

புலி கூறிய 'கடவுள்' தத்துவம் மானுக்குப் பிடித்ததாகத் தோன்றவில்லை.

"நான் அப்படிக் கேள்விப்பட்டதில்லை, கடவுளைப் பற்றி. இரண்டு நீளக் கொம்புகள் அவருக்கு உண்டு என்று என்னுடைய பாட்டனார் சொல்லியிருக்கிறார். உடம்பில் வரிகள் கிடையாது. புள்ளிகள்தான் உண்டு. ஒரு வேளை அது வேறு கடவுளாக இருக்குமோ?"

புலி சிரித்தது.

"எல்லாம் ஒரு கடவுள்தான். உருவங்கள் தான் வித்தியாசப்படும். கொம்பு, கோடு என்று மனசைக் குழப்பிக் கொள்ளாதே நீ."

"இந்த இடத்தை விட்டு நாம் தப்பித்துச் செல்ல முடியாதா?" என்று மான் கேட்டது.

"ஏன் முடியாது? முடியும். கண்ணை மூடிக் கொண்டு கடவுளைத் தியானி" என்று மானின் காதருகே வந்து இரகசியமாகக் கூறிற்று புலி.

## ராமாயண உபன்யாசம்



மாயூரம் சிவராம கிருஷ்ண சாஸ்திரியாரது உபன்யாஸத்தை அனேகமாக எல்லா ஆஸ்திக அன்பர்களும் கேட்டிருப்பார்கள். 24-4-57 முதல் மாம்பலம் ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளியில் தினமும் மாலை 7-30 மணியிலிருந்து 9-30 மணி வரை அவர்கள் நடத்தும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண உபன்யாசங்கள் 12-5-57 அன்று பூர்த்தி யடைகின்றன. காமகோடி பீடம் சங்கராச்சாரிய ஸ்வாமிகளது பீடாரோகணப் பொன் விழாவை முன்னிட்டு அன்று பக்தர்கள் அளிக்கும் நிதி முழுவதையும் ஆசார்ய ஸ்வாமிகளின் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்துவிடத் தீர்மானித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க நல்ல காரியமாகும்.

அரை நூற்றாண்டு காலமாக ஸ்ரீமத் ராமாயண, பாகவத உபன்யாசங்களைச் சிறப்பாகச் செய்து வரும் ஸ்ரீமான் சாஸ்திரியாரின் நல்ல உபன்யாசத்தைக் கேட்கவும், ஒரு நல்ல காரியத்துக்கு உதவவும் விரும்பும் ஆஸ்திக அன்பர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

மான் கண்ணை மூடிக் கொண்டது.

புலியும் கண்ணை மூடிக் கொண்டு கடவுள் தியானத்தில் ஆழ்ந்தது.

* * *

"புலி மானை அடித்துப் போட்டுவிட்டது" என்று தெரிவித்தார் மந்திரி.

அரசனுக்கு ஒரே ஆத்திரம்.

"புலி எப்படி ஐயா செத்தது?"

"அதுதான் தெரியவில்லை, பிரபோ. ஒரு வேலை மானைக் கொன்று விட்டோமே என்ற அதிர்ச்சியில், இருதயம் நின்று போயிருக்கலாம்."

"புலியும் மானும் ஒரே துறையில் இப்படிச் சொல்லி வைத்தாற்போல் உயிரை விட்டது எனக்கு அதிசயமாக இருக்கிறது. உமக்கு?"

மந்திரி சாதுரியமாகப் பதில் சொன்னார்.

"எனக்கும் அதிசயமாகத்தான் இருக்கிறது. அரசே! சத்திய யுகம் சமீபித்து விட்டது என்பதைத் தான் இது காட்டுகிறது."

அரசனுக்கு ஆத்திரம் தணிந்தது.

"சத்திய யுகம் எவ்வளவு சமீபத்தில் வந்திருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?"

"முடியும், பிரபோ. அதாவது நமது நாட்டின் எல்லையிலுள்ள காடு வரை வந்து விட்டது சத்திய யுகம். இனி அடுத்தாற் போல், நாடுதான். சந்தேகத்துக்கு இடமில்லை" என்று சொன்னார் மந்திரி.

அரசி ஒக்கலில் வைத்திருந்த குழந்தை அச் ' சென்று ஒரு தும்மல் தும்மியது.

"நூறு ஆயுசு" என்று வாழ்த்தினார் மந்திரி.



# நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

## 14. மிதாகாரம்

"கடவுளே! இன்றைய நிலையில் நான் வேண்டும் வரம் ஒன்றே ஒன்றுதான்" என்றாள் அந்தத் தாய்.

"அஃதென்ன?" என்று கடவுள் அவ்வன்னையின்முன் தோன்றிக் கேட்கவில்லை. ஆயினும், அரூபமான பரம்பொருளை ஸரூபமானதென்று போதிக்கும் முறையில் அதிவீரராம பாண்டியன் அரிச்சந்திர புராணத்தில் சாதிப்பதை எண்ணியவன் போல, அத் தாய் தான் வேண்டுவதையும் செவி சாய்த்திடுவான் கடவுள் என்று தனக்குத் தானே தேறி, தான் வேண்டும் அந்த ஒரே ஒரு வரம் யாது என்பதையும் தெரிவிக்கிறாள்.

"என் அருமை மகன்...ஒரே ஒரு நாள்-ஒரு வேளை-வயிறார உண்டு, 'போதும்மா! பசியாறி விட்டது. வயிறு நிறைந்து விட்டது' என்று சொல்லக் கேட்கும் பாக்கியத்தை அருள்வாயானால், பிறகு என் வாழ்நாள் முழுவதும் இன்றையக் கஷ்டத்தையே தொடர்ந்து அனுபவிக்க நேரிடினும் நான் பொருட்படுத்த மாட்டேன்" என்றாள்.

மறைமுகமாக, அந்தணச் சிறுவர் கோலத்திருந்தி, பாண்டவர்களைப் பேணி வந்த காலத்தில், பீமஸேனனின் ஆராத பசியைப் பற்றிக் குந்தி தேவி இவ்வாறு துயரப் பட்டாளாம்.

பசியின் கொடுமை, ஜெரித்துக்கொள்ளும் வன்மை, உடல் உழைப்பு ஆகியவற்றை எண்ணி, ஒவ்வொருவனும் எவ்வளவு ஆகாரம் ஏற்கலாம் என்பதை நிச்சயித்தல் இயலும். ஆகாராதிகளின் தன்மையை யொட்டியும் அவ்வப் பொருளை எந்த அளவில் ஏற்கலாம் எனவும் நிச்சயித்தல் சாத்தியமாகும்.

**"ஆதி யினிப்பு நடுவாம்பிரந் துப்போடுசா
காதி புறைப்பப்பா லந்தந்நீர்-கோதிறுவர்ப்
பாந்தநீயும் பூநியகா யாதிவகை சேருணவை
மாந்திக சுத்தையுறு வாய்."**

உணவு உண்ணுங்கால் இனிப்புச் சுவையுள்ள பண்டங்களை முதலில் உண்ண வேண்டும். பிறகு புளிப்பு, உப்பு, கார்ப்புச் சுவையுள்ளவற்றையும் இலைக் கறிகளையும் ஏற்க வேண்டும்.

கடைசியாகத் துவர்ப்புச் சுவையுள்ள பண்டங்களையும் ஏற்றுப் பின் புளிப்புத் தயிர், ஊறுகாய் முதலியவற்றால் முத்தாய்ப்பு வைத்து உண்டியை முடிப்பது தான் முறை. இவ்விதப் பழக்கமுள்ளவர் "சுகத்தை யுறுவர்" என்று உத்தர வாதமளிக்கிறார் தமிழ்ச் சித்தர் மரபில் வந்தோர்.

ஆகாரங்களின் தன்மைக்கேற்ப அறுசுவை யுண்டியைத்தான் தினந்தோறும் ஏற்பது நலம். காலத்துக்குத் தகுந்த குறிப்பிட்ட சுவையுள்ளவற்றை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மற்றைய சுவைகளுள்ளவற்றைத் தக்கபடி குறைத்துக் கொள்ளல் அவசியம். அதிலும் முன்சொன்ன கிரமத்தில் அறுசுவைப் பண்டங்களையும் ஏற்பது நலம்.

இவ்விதம் விதிப்பதற்குக் காரணம் என்ன என்ற விஷயத்தை வைத்திய சாஸ்திரம் கற்போருக்கு விட்டு விட்டு, முடிவை மட்டும் நாம் அறிந்துகொண்டால் போதுமல்லவா?

ஆகாரத்தினளவு எவ்வளவு என்பதை,

**"தீயளவின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவின்றிப் படும்"**

என்பதை எண்ணி ஒவ்வொருவனின் செரிப்புத் தீயின் வன்மையை யொட்டி நிச்சயித்தல் வேண்டும்.

இங்கு கவனிக்கத் தக்க வேறொரு விஷயமுமுண்டு. உணவுப் பொருளின் திண்மை அல்லது நொய்ம்மைக் குணங்களைத் தெளிந்து, திண்மைப் பொருள்கள் செரிப்பது கடினமாதலால் அவற்றை ஓரளவு நமக்கு ஏற்க விருப்பமுள்ள அளவில் பகுதியளவு ஏற்றாலும், நொய்ம்மைப் பொருள்கள் செரிப்பது கடினமல்லவாயினும் அவற்றை நமக்குத் திருப்தியை யுண்டாக்கக்கூடிய அளவுக்கு அதிகமாகாத அளவில் ஏற்பதும் வேண்

டும். மற்றும் உடல் நிலையைக் கருதி, எவ்வகை உடலினராய் இருப்பினும்,

**"முக்கா லுணவன்றி எத்தேகிகட்கு முழுவுணவி லக்காரணமன்ன சாகாதிகூடி யறையத்திற்பால் சிக்காவமுதம் புசுக்கிரங்காலுண்டி சேடமறை வைக்கா விடிலுண்டி 'வேகாதனலும் வலிவு மின்றே"**

என்றபடி, முக்கால்வயிறு நிரம்பும் வரை யில்தான் உண்ண வேண்டும். அதிலும் சோறும் கறிகாய் வகைகளுமாக அரை வயிறு வரையில் உண்டு பிறகு பால், மோர், நீர் போன்ற பானங்களைக் கால் வயிறு அளவிலேற்றல் வேண்டும். வயிற் றில் எஞ்சி நிற்கும் கால் வயிறு ஆகாரம் செரிக்குங் காலத்தில் அதற்கு உதவி புரி யும் செரிப்புத்தீ — சமானன் என்னும் வாயு ஆகியவற்றுக்காக இடைவெளியாக விடவேண்டும். அளவோ டுண்ணல் என் னும் விஷயம் தெளிவாகிற தல்லவா?

இனி ஆகாரத்துடன் குடிக்கும் பானங் களைப் பற்றியும் அறியத்தக்க விவரங்கள் சில உண்டு. ஆகாரத்தைத் தொடர்ந்து குடிக்கப்படும் பானத்துக்கு அனுபான மென்று சொல்வது இயல்பு. ஆகவே இன்னின்ன உணவுப் பொருளுக்கு இது தான் ஏற்ற — அல்லது சிறந்த அனு பானமாகும் என்றும் நிச்சயித்தல் சாத்தியமாகிறது.

அரிசி, பார்லி, கோதுமை இவற்றால் செய்யப்பட்ட உண்டிப் பொருள்கள் மற்றும் தயிர்சேர்த்து இவற்றுடன் தயா ரிக்கப்பட்ட [தத்யோதன மென்னும்] தயிர்ச் சோறு முதலியவைகளை யுண்ட பின் குளிர்ந்த ஜலத்தை அனுபான மாகக் குடிப்பது நல்லது.

இட்லி, தோசை, உப்புமா, கொழுக் கட்டை முதலிய மாப்பண்டங்களை உண்டபின் வெந்நீரை அனுபானமாகக் குடிப்பது நல்லதாகும்.

பச்சைக் கறி காய், கீரை வகைகள், பச்சைப்பயிறு சேர்த்து உண்டாக்கப் பட்டவைகளை உண்டிடிலோ மோரைக் குடிப்பது நல்லது.

ஸ்தூல தேகிகளும் மதுமேகம் என்ற வியாதியினால் பீடிக்கப்பட்டவர்களும் தேன்கூட்டிய தண்ணீரைக் குடிக்கலாம்.

தேகம் மிகவும் மெலிந்திருப்பவர், க்ஷய ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர் ஆகி யோருக்கு [மாம்ஸ ரஸமென்னும்] இறைச்சியின் ஸாரம் நல்லது.

வியாதியினாலோ மருந்துகளின் வெப் பத்தினாலோ, மிகு பேச்சினாலும், பட்டி யினாலும், வெயிலாலும், வழிநடத்தல் - அதிக உழைப்பு ஆகியவற்றாலும் சோர்ந் தவருக்கும், விருத்தாப்பியர்களுக்கும் குழந்தைகளுக்கும்-பால் மிகவும் நன்மை பயக்கவல்ல பானமாகும்.

ஆகாரத்தை யொட்டிக் குடிப்பது நீரேயானாலும் இதை உணவு உண்ணும் முன்பு குடிப்போமாயின் அது தேகத்தை மெலியச் செய்யும். செரிப்புத்தீ மந்தப் படும். உணவு சரிவரப் பக்குவமாகாமல் புளிப்படையும். ஆகவே,

**" ..... பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்து நீரருந்தோம் ..."** என்றார்.

உணவின் இடையில் நீரருந்திடில் நடுத் தரமான உடல் நிலைக்கப் பெறும். உண வின் கடையில் குடித்திடும் நீரோ.. உடலைப் பருமன் பெறச் செய்யும்.

**" உண்டபின்பு வெந்நீரொருதரமாக் கொண்டக் கால் மீண்டுகபம் வாதம் விதாகமந்த-மண்டுநரத் தார்ந்த பொருமலும் போம் ...**
**.........."** என்றபடி உணவு முடிந்த பிறகு, கடைசியாக வெந்நீர் குடிப்பது மிகவும் விரும்பத்தக்கது. மேற்சொன்ன நன்மைகள் இதனால் விளைவதோடன்றி வீரிய விருத்தியும் ஏற்படும்.

சிறியதொரு சுக்குத் துண்டை தகர்த்து, சிறிது ஜீரகமும் கொத்தமல்லி விதையுங் கூட்டிக் காய்ச்சிய ஜலத்தை மேலிட இறுத்தெடுத்துச் சூடுள்ளபோது குடித்து வருவது நல்லது.

தண்ணீர் குடித்துப் பழக்க முள்ளவர், வெந்நீரில்வெறுப்புள்ளவர்மேற்சொன்ன விதம் தயாரிக்கப்பட்ட நீரைக் குளிர்ந்த பிறகு குடிப்பது நல்லது. **(தொடரும்)**


---


**அருள் வாக்கு**

உங்களுக்கு அநேகம் பேர் ஸ்நேகிதர்கள் இருக்கலாம். அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணமுள்ள வரையில் அவர்களுடைய நல்லது பொல்லாத தெல்லாம் நமதென்றே ஆகின்றன. ஒரு காலத்தில் அவர்களே நமக்கு விரோதிகளாக ஆகிவிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவர்கள் சுக துக்கத்துக்கும் நமக்கும் சம்பந்தமில்லாமற் போகிறது. அடிக்கடி அவர்களுக்குத் துக்கம் வரவேண்டு மென்பதில் மாத்திரம் கொஞ்சம் சம்பந்தம் இருந்தாலும் இருக்கலாம். அது ஏன்? நான், என்னுடையது (அஹம், மம) என்ற அபிமானம் போய் விட்டது. இது போலவே நம் உடம்பையும் செய்து கொள்ள வேண்டும். இதோ எதிரில் ஒரு வாழைக் கட்டை கட்டித் தொங்குகிறது. அது வாடி வதங்கிப் போனால் நாம் வாடி வதங்குகிறோமா? அந்த வாழைக் கட்டையைவிட இன்னும் கொஞ்சம் கிட்டே கட்டியிருக்கும் மாம்சக் கட்டை என்றே இந்தச் சரீரத்தை அடிக்கடி எண்ண வேண்டும்.

**ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்**


அட! திருடனைக் காணோமே!
Parry's
பாரிஸ் மிட்டாய் வாங்க அவன் போயிருக்கிறான்
இதில் அதிசயம் ஒன்றும் இல்லை! பாரிஸ் மிட்டாய்கள் மிகவும் ருசியானவை. சுத்தமானவை. ஆசையுடன் விரும்பப் படுபவை — இன்றே சில பாரிஸ் மிட்டாய்களை வீட்டுக்கு வாங்கிச் செல்லுங்கள். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவை மகிழ்ச்சி அளிக்கும்.
PRS 60


பல ஆண்டுகளாக
தரத்தில்
மிகச் சிறந்ததென்று
நிரூபிக்கப்பட்டது
மர்ஸிரைஸ்டு ஷர்ட்டிங்குகள்
வேஷ்டிகள், புடவைகள்
பிரிண்டட் வாயில்கள்
மற்றும் லான்கள்
MOON & STAG
ரெய்ப்பூர் மில்ஸ் லிட்.
அஹமதாபாத்



# பொன் செய்யும் மருந்து

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

ஐந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் தமது வயல்களையெல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார் பராங்குசம். அறுவடைக்கு இன்னும் சில நாட்களே இருந்தன. ஓங்கி வளர்ந்த கதிர்கள், இளங் காற்றிலே அசைந்துகொடுத்த காட்சி கண்களுக்கும்மனத்துக்கும் ரம்மியமாக இருந்தது. அந்த வருஷம் எங்குமே நல்ல விளைச்சல் தான். அதுவும் பராங்குசத்தின் நிலம் மற்றெல்லா நிலங்களுக்கும் சிகரமாய் விளங்கியது. ஒவ்வொரு கதிரும் மதமதவென்று பூரித்திருந்தது. அவருக்குச் சொந்தமானது இருபது காணி நிலம். அவ்வளவையும் ஆனந்தமாகக் கண் குளிரப் பார்த்துக் கொண்டு வந்தார்.

உள்ளத்திலே ஒரு உவகையும் கர்வமும் இலேசாகப் படரத் தொடங்கின. கூட வந்து கொண்டிருந்த ஜம்புவை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தார். அந்த ஊரில் மட்டுமல்லாமல் சுற்று வட்டாரக் கிராமங்களிலும் ஜம்புவைத் தெரியாதவர்கள் கிடையாது. அவர் எப்படிப் பட்ட மனிதர் என்று சொல்வது சாத்தியமில்லை. எல்லோருக்குமே நல்லவர்; எல்லோருக்குமே பொல்லாதவர். உதட்டிலே தேனும் விஷமும் மாறி மாறி ஊறிக் கொண்டிருக்கும். தம்மை அவர் 'பரோபகாரி' என்று சொல்லிக் கொள்வார். கடன் வாங்கிக் கொடுப்பது, நிலம், மனை முதலியவைகளை விற்றுக் கொடுப்பது போன்ற சகாயங்களைச் செய்வதில் இராப்பகலாக அவர் அலைந்து கொண்டிருந்தார்.

''என்னய்யா ஜம்பு!...என்ன வாயைத் திறக்காமல் வருகிறீர்?'' என்றார் பராங்குசம்.

குரலில் மரியாதை தொனிக்க, ''என்னங்க விஷயம்?'' என்றார் ஜம்பு.

''விளைச்சல் எப்படி?...மற்றவங்களுக்குச் சளைக்குமா?'' என்று கூறியவாறு மெள்ள நடக்கத் தொடங்கினார்.

''கேட்கணுங்களா!...எல்லாம் உங்க மனசு போல இருக்கு...நம்ம விளைச்சலைப் பார்த்துப் பொறுமைப் படாதவங்க யாரு இருக்காங்க?'' என்று சொல்லியபடியே அவர் பின்னாலேயே சென்றார் ஜம்பு.

இதே ரீதியில் பேசிக்கொண்டு நடந்தவர் இருவரும். சற்றைக்கெல்லாம் ஊர் எல்லைக்கு வந்து விட்டார்கள். அங்கே ஒரு சிறு வாய்க்கால். வாய்க்காலுக்குக் கிழக்கே ஒரு தனித் துண்டாகக் கிடந்த வயலைப் பார்த்த பராங்குசம் அப்படியே பிரமித்துப் போய் நின்று விட்டார். அவருடைய சந்தோஷம், கர்வம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து விட்டன.

வயல் என்றால், அதுவல்லவா வயல்! ஒரு ஆள் உயரத்துக்கும் மேலான கதிர்கள், நாணிக் கோணும் பருவ மங்கைபோல நிமிர்ந்தும் நிமிராமலும் மெல்ல அசைந்து கொண்டிருந்தன. அவைகளின் ஒவ்வொரு அசைவும் பராங்குசத்தைப் பார்த்துப் பரிகசிப்பதைப் போலிருந்தது.

''ஜம்பு!'' என்றார் உணர்வேயில்லாமல்.

''என்னங்க?''

''இந்தப் பூமி யாருடையது?''

''நாராயணமூர்த்தியின் பூர்வீகச் சொத்துங்க...''

''எந்த நாராயணமூர்த்தி?...அந்த பாங்கி குமாஸ்தா...''

''அவரே தான்!''

''அவருக்கு இரண்டு மூன்று பெண்கள் போலிருக்கே?...

''நாலு பெண்ணுங்க!''

''என்ன ஐயா ஆச்சர்யம்! நாலுபெண்ணைப் பெற்றவனா இன்னும் பூர்வீக நிலத்தை வைச்சிருக்கான்?''

''பெண்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லைங்க.''

''காலா காலத்திலே அதைச் செய்யச் சொல்லுமய்யா!....காலம் இருக்கிற இருப்பிலே வயசுப் பெண்களை வீட்டிலே வைச்சிருக்கப் படாது!'' என்று கூறிய பராங்குசத்தின் குரலில் அருளையும் வெறுப்பும் பளிச்சென்று தெரிந்தன.

''சொல்கிறேனுங்க, பண உதவிக்கு ஐயா இருக்கீங்க...!''

''எந்த நிமிஷமும் பணம் தயார்! அதுவும் என்ன ஆனாலும் சரி, ஒன்றுக்குப் பத்தானாலும் சரி, இந்த வயலின் பட்டா என் பெயருக்கு மாறவேண்டும்! என்ன?....'' என்று ஏதோ வெறி பிடித்தவர் போலப் பேசினார் பராங்குசம். கண்கள் பேராசைக் கனலாகப் பிரகாசித்தன. அவர் சுபாவத்தை ஜம்பு நன்றாக அறிந்தவர்தான். எடுத்த காரியத்தைப் பராங்குசம் முடிக்காமல் விடமாட்டார். நினைத்ததை எந்த விதத்திலும் சாதித்தே தீருவார். அதுபோன்ற சமயங்களில் பணத்தைப் பணமாகக் கருதாமல்

தன்னிராக வாரி இறைப்பார். காரியம்தான் அவருக்கு முக்கியம். நியாய அநியாயத்தைப் பற்றி அவராகவும் சிந்திக்க மாட்டார்; எடுத்துச் சொல்லவும் ஆள் இல்லை.

இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் வாய்த்தால் ஜம்புவின் பாடு யோகம்தான்.

"என்ன? முடிப்பீரா?" என்று ஜம்புவின் மௌனத்தைக் கலைத்தார் பராங்குசம். அந்த வினாடியே அந்த நிலம் அவருடையதாகி விட வேண்டுமென்ற ஆவல் அவர் குரலில் நன்கு தொனித்தது.

"என்னால் முடிந்த வரையில் பார்க்கிறேன். நாராயணமூர்த்தி ஒரு கல்லுளிமங்கன்.... எதற்கும் பிடி கொடுத்துப் பேச மாட்டான்....." என்றார் ஜம்பு இழுத்தாற்போல. இது அவருடைய வியாபாரத் தந்திரத்தின் முதற்பாடம். தாம் எடுத்த காரியத்துக்கு ஒரு பிராதான்யத்தை உண்டு பண்ணி விட்டுத்தான் அவர் மேற்கொண்டு பேசுவார்.

பராங்குசத்துக்கு இது புதிதல்ல. எனவே நேரிடையாக விஷயத்துக்கு வந்தார்.

"ஜம்பு! அதெல்லாம் எனக்குத் தெரியாது. இந்தப் பூமியில் என் கலப்பை ஓட வேண்டும். செய்து முடித்தால் உமக்குச் சன்மானமாக ஆயிரம் ரூபாய். விலையைப் பற்றிக் கவலை இல்லை. என்ன சொல்லுகிறீர்?..." என்று கேட்டார் தீர்மானமாக.

"நீங்கள் கவலையை விடுங்கள். அடுத்த இன்ஸ்டால்மெண்டை... " 

"நீங்கள் கவலையை விடுங்கள். அடுத்த கிஸ்தியை நீங்கள் செலுத்தும்படி செய்து விடுகிறேன்!" என்று அடித்தாற்போல அபயப்பிரதானம் அளித்து விட்டுக் கருமமே கண்ணாய்ப் பறந்தார் ஜம்பு.

ஜம்புவைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார் நாராயணமூர்த்தி. "கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போலிருக்கிறது! உங்களைத்தான் வந்து பார்க்கவேண்டுமென்றிருந்தேன்!" என்றார்.

"என்ன விஷயம்?" என்று அசுவாரஸ்யமாகக் கேட்டவாறு திண்ணையில் உட்கார்ந்தார் ஜம்பு. நாராயணமூர்த்தியும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு மெள்ளப் பேச்சை ஆரம்பித்தார்.

"ஒன்றுமில்லை. என் முதல் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறேன். அடுத்த மாதமே முகூர்த்தத்தை வைத்துக் கொள்ள வேண்டுமாம். அத்துடன் வீட்டையும் கொஞ்சம் பழுது பார்க்க வேண்டியிருக்கிறது" என்று இழுத்தார்.

"எனக்குப் புரோகிதமோ கொத்து வேலையோ எதுவும் தெரியாதே!" என்றார் ஜம்பு அலட்சியமாக. நாராயண மூர்த்தி மெல்லச் சிரித்து விட்டு, "அதில்லை..-" என்று தயங்கினார்.

"பணம் வேண்டுமாக்கும்!" என்று பூர்த்தி செய்தார் ஜம்பு.

"ஆமாம்! என் நிலத்தை அடமானமாக வைத்துக் கொண்டு ஒரு ஐந்து ரூபாய்..."

"ஐயாயிரமா?"

"ம்...."

"உமது நிலம் எத்தனை காணி!"

"ஐந்து காணி..."

"கடனை எப்படி அடைப்பீர்?"

"நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை அப்படியே அந்தக் கடனுக்குச் செலுத்தி விடுவேன்..."

ஜம்பு ஒரு வினாடி மௌனமாக உட்கார்ந்திருந்தார். பிறகு "ம்...அப்புறம் மற்றப் பெண்களின் கல்யாணம்?" என்றார். சட்டென்று இதுமாதிரி கேட்டதும் நாராயண மூர்த்தி, என்ன பதில் சொல்லுவதென்று புரியாமல் சிறிது திகைத்தார். ஜம்பு தொடர்ந்தார்: "செய்வதைத் திருந்தச் செய் என்பதுஉங்களுக்குத் தெரியாதா? கடன் வாங்குவது பெரிய காரியமல்ல நாராயணமூர்த்தி; அதை அடைப்பதுதான் சிரமம்! வீணுக்கு வட்டி கொடுப்பதில் என்ன லாபம்? அதோடு, காலம் இருக்கிற இருப்பிலே நிலம் வைத்துக் கொண்டிருப்பவன் பாடெல்லாம்..." என்று இழுத்தபடியே ஒரு பெருமூச்சு விட்டார். நாராயணமூர்த்தி பதிலே சொல்லவில்லை.

"இஷ்டமிருந்தால் சொல்லும். நிலத்தை நல்ல விலைக்கு விற்றுத் தருகிறேன்!" என்று முடித்தார் ஜம்பு. சட்டென்று நாராயண மூர்த்தியின் முகத்தில் ஒரு இருள் படர்ந்தது.

"நிலத்தை விற்பதா?" என்றார்.

"எனக்குத் தெரிந்த வரையில் அதுதான் நல்ல வழி!" என்றார் ஜம்பு. சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தார் நாராயண மூர்த்தி. பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தவ

ராக, "நிலத்தை விற்கிற பேச்சு வேண்டாம். உங்களால் முடிந்தால் கடன் வாங்கிக் கொடுங்கள் போதும்" என்றார்.

ஆளைப் போகிற வழியில் விட்டுப் பிடிக்க வேண்டுமென்று எண்ணிய ஐம்பு, கடன் வாங்கித் தரவே ஒப்புக் கொண்டார்.

அதன்படியே பராங்குசத்திடமிருந்து தமது ஐந்து காணி நிலத்தை அடமானமாக வைத்து ஐயாயிரம் ரூபாய் கடன் பெற்றுக் கொண்டார் நாராயணமூர்த்தி.

வருஷம் இரண்டு சென்றது. அசலுக்காகக் காலணா கொடுக்காமல் போனதுடன் வட்டியும் சுமந்து கொண்டு வந்தது. பராங்குசம் எதிர்பார்த்ததும் இதுதான்.

இந்த நிலையில் நாராயணமூர்த்தியின் இரண்டாவது பெண்ணுக்கும் கல்யாணம் நிச்சயமாகி, மேலும் இரண்டாயிரம் ரூபாய் பணத்துக்காக எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தார். இந்த விஷயம் பராங்குசத்தின் காதில் விழவே ஐம்புவை ஏவினார். அந்த இரண்டாயிரம் ரூபாயையும் அவரிடமே வாங்கித் தருவதாக நாராயணமூர்த்திக்கு வாக்களித்துவிட்டு வந்தார் ஐம்பு. வள்ளலும் வழங்கினார்!

மேலும் இரண்டு வருஷங்கள் சென்றன. அசல் வட்டி எல்லாமாகப் பத்தாயிரம் ரூபாய் எட்டியது, நாராயணமூர்த்தியின் கடன். பராங்குசம் நாராயணமூர்த்தியை நெருக்கத் தொடங்கினார். ஐம்புவின் மிரட்டல் நாளுக்கு நாள் அதிகமாயிற்று.

நாராயணமூர்த்திக்கு மேற் கொண்டும் கொஞ்சம் பணம் தேவைப்பட்டதே தவிர, கடனை அடைக்கக் கூடிய நிலையில் அவர் இல்லை. இருந்தாலும் ஏதோ நம்பிக்கையில் மெள்ள நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தார். கடைசியில் விஷயம் கோர்ட்டுக்குப் போக வேண்டியதாயிற்று!

இதற்கிடையில் பராங்குசத்துக்கு ஒரு புது 'வில்லன்' வந்து சேர்ந்தார். காசிலிங்கம் என்பவருக்கும் அவருக்கும் ஏதோ ஒரு சிறு விஷயத்தில் மனஸ்தாபமும் ஏற்பட்டுப் பிறகு பெரிய தகராறில் முடிந்தது. காசிலிங்கம், சிங்கப்பூரிலிருந்து திரும்பியவர். கையில் ஏராளமான ரொக்கம் வைத்துக் கொண்டு நிலத்தையெல்லாம் வாங்கிப் போட்டுக் கொண்டிருந்தார். பராங்குசம் நாராயணமூர்த்திக்கு ஏராளமாகக் கடன் கொடுத்த நோக்கத்தையும் இப்பொழுது அந்த நிலத்தை அபகரிப்பதற்காகக் கோர்ட்டாரின் தயவை நாடியிருப்பதையும் நன்றாக அறிந்து கொண்டிருந்த காசிலிங்கம், எந்த விதத்திலும் நிலத்தை அவருக்குக் கிடைக்காமல் செய்து விடுவதாகக் கச்சை கட்டினார். நிலம் ஏலத்துக்கு வந்தால் பராங்குசத்தை ஒரு கை பார்த்து விடுவது என்று இருந்தார். இந்தச் செய்தியைச் சுமந்துகொண்டு பராங்குசத்திடம் ஓடினார் ஐம்பு.

கோர்ட் விவகாரம் முடிந்து டிகிரியும் ஆகிவிட்டது. பராங்குசம் ஏலத்துக்குப் பணம் கட்ட வேண்டியதுதான். ஐம்பு கூறிய தகவலைக் கேட்டதும் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டார். ஏலத்தில் காசிலிங்கத்தை எதிர்க்கத் தம்மால் முடியாதென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். எனவே, ஐம்புவையும் அழைத்துக் கொண்டு நாராயணமூர்த்தியின் வீட்டுக்குப் போனார்.

வெகுநேரம் வரையில் பேச்சு வார்த்தை நடந்தது. நாராயணமூர்த்திக்கும் எப்படியாவது 'ஏலம்' 'தண்டோரா' வென்று ஊர் சிரிக்காமல் காரியம் நடந்தால் போதுமென்றிருந்தது. கடைசியில் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

நாராயணமூர்த்திக்கு மேற்கொண்டு பதினைந்தாயிரம் ரூபாய் பராங்குசம் கொடுத்துவிட்டு நாராயணமூர்த்தியின் ஐந்து காணி நிலத்தை அவரே அடைவதென்று தீர்மானித்து அதன்படி அன்றே ஒரு சாசனப் பத்திரமும் எழுதப்பட்டது!

ஐந்து வருஷங்களுக்கு முன்பு பராங்குசம் கண்ட கனவு மிகுந்த பிரயாசையில் அன்று நிறைவேறிற்று! ஒரு மகாயக்ஞம் செய்து முடித்தாற்போல ஒரு வெற்றிவிழா கொண்டாடினார் பராங்குசம்.

"விலைதான் கொஞ்சம் அதிகமாகிறது. காணி இரண்டாயிரம் மதிப்புள்ள நிலத்துக்கு ஐயாயிரம் வரையில் கொடுத்திருக்கிறோம்.." என்றார் ஐம்பு வருத்தத்துடன்.

"அதைப்பற்றி யாரய்யா கவலைப்பட்டது? நினைத்ததை முடித்தாயிற்று! 'இந்தப் பராங்குசம் ஒன்று நினைத்தான்; அது நடக்கவில்லை' என்று இதுவரையில் கிடையாது; இனியும் இருக்காது!" என்றார் அவருக்கே உரித்தான அகம்பாவத்துடன். அன்று முதல் வீட்டில் தினசரி விருந்துதான்!

மூன்று மாதங்கள் சென்றன. அரசாங்கத்தாரிடமிருந்து பராங்குசத்துக்கு ஒரு கடிதம் வந்தது. உடைத்துப் பார்த்தார்.

'...இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில், ஊர்க்கோடியிலுள்ள வாய்க்காலின் கிழக்கேயுள்ள ஐந்து காணி நிலம் உமது பெயருக்கு நாராயணமூர்த்தி என்பவரால் சாசனம் செய்து கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்த நிலத்தின்மீது புதிதாக விஸ்தரிக்கப்படும் இருப்புப்பாதை செல்ல இருப்பதால் நீர், அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்படும் நியாயமான கிரயத்தைப் பெற்றுக்கொண்டு மேற்படி நிலத்தை இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அரசாங்கத்துக்கு ஒப்படைக்கவேண்டுமென்று உத்தரவிடப் படுகிறீர்..'

கடிதத்தைப் படித்த பராங்குசம் சிலையாகச் சமைந்து விட்டார். சற்றைக்கெல்லாம் ஐம்பு வந்தார். கடிதத்தைப் படித்து விட்டு, "என்னங்க அநியாயம் இது! உங்க கலப்பை ஓடவேண்டிய பூமியில் ரயில் ஓடுவதாவது! நீங்க ஒப்புக்காதீங்க. முடிந்தவரையில் வழக்காடிப் பார்த்திடுவோம்!" என்றார்.

"நடக்காது ஐம்பு. மலையோடு மோதினால் மண்டைதான் உடையும்! இன்னொருத்தன் நிலத்துக்கு நாம் ஆசைப்பட்டது தப்பு. நம்முடையது கைவிட்டுப் போகாமல் இருந்தாலே போதும்!"...என்றார் பராங்குசம் தெளிந்த மனத்துடன். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று அவர் உள்ளத்தில் ஒரு குரல் ஒலித்தது.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


ஸ்நானத்தின் புதுமை யின்பத்தை
நாள் முழுதும் அனுபவித்திட
ஹிமாலயா புக்கே
டால்கம் பவுடர்
Himalaya Bouquet
TALCUM POWDER
Himalaya Bouquet
HB. 16A-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

